விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 29 வியாழக்கிழமை (14.01.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 026

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## கதிர்காமரின் நடவடிக்கை புலிகளை சீண்டிவிட்டது

### சமாதான சூழல் குழப்பமடைய அதுவே காரணம்; முன்னாள் சமாதான தூதுவர் சொல்ஹெய்ம் கருத்து

(கொழும்பு)



தமிழீழ விடுதலைப் புலிகளை சர்வதேச ரீதியில் தடை செய்வதற்கு இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் மேற்கொண்ட நடவடிக்கை தவறானது என இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவரும் அந்த நாட்டின் முன்னாள் அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## பாம்பு தீண்டியதில் மாணவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

பாம்புக் கடிக்குள்ளான பாடசாலை மாணவன் ஒருவன் சிகிச்சை பலனின்றி நேற்றையதினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

யாழ்.பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 2017 உயர் தரத்தில் உயிரியல் பிரிவில் கல்வி கற்று வருகின்ற வவுனியா சுண்டிக்குளத்தைச்

24ஆம் பக்கம் பார்க்க....

## அரசியல் அமைப்பு சபைக்கு அனுமதி கிட்டவில்லை

(கொழும்பு)

நாடாளுமன்றத்தை அரசியலமைப்புச் சபையாக மாற்றுவது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த யோசனைக்கு இதுவரை அமைச்சரவையின் அனுமதி கிடைக்கவில்லை என முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## புலிகளை அழித்த வழிகளை வெளிப்படுத்தக் கூடாது!

### பாரிய குற்றம் என்கிறார் சோபித தேரர்

(கொழும்பு)

30 ஆண்டு கால பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு படையினர் பயன்படுத்திய வழிமுறைகளை வெளிப்படுத்தக் கூடாது.

அவ்வாறு வெளிப்படுத்துதல் பாரிய குற்றமாகவே பார்க்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போன சம்பவம குறித்த விசாரணைகளின் ஊடாக தேசிய பாதுகாப்பிற்கோ அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள பற்றிய தகவல்களை வெளிப்படுத்

24ஆம் பக்கம் பார்க்க....

கம்பவாரிதியின் நிறைவுப் பதில் உள்ளே...

## யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 31-வது பொதுப் பட்டமளிப்பு விழா

### 19-ம், 20-ம் திகதிகளில் நடத்துவதற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் தமிழ் பாரம்பரிய ஒழுக்க விழுமியங்களுக்கு அமைய நடைபெறவுள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 31 ஆவது பட்டமளிப்பு விழாவில் ஆயிரத்து 942 பேர்களுக்கான பட்டங்கள் வழங்கி வைக்கப்படவுள்ளது.


இவற்றில் ஆயிரத்து 828 பட்டதாரிகளுக்கும், 114 டிப்ளோமா பட்டதாரிகளுக்குமான பட்டங்கள் வழங்கப்படவுள்ளது. இவர்களில் ஆயிரத்து 521 பட்டதாரிகள் பட்டமளிப்பு விழாவில் நேரடியாக சமுகம் தந்து பட்டங்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் 8 அமர்வுகளாக நடைபெறும் இப்பட்டமளிப்பு விழாவில் யாழ்.பல்கலைகழக வேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சி.பத்மநாதன் மாணவர்களுக்கான பட்டங்களை வழங்கி வைக்கவுள்ளார் என தெரி

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதியின் தலைமைக்கு இந்திய அரசாங்கம் பாராட்டு

### ஜெய்சங்கர் நேரில் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காட்டும் சிரேஷ்ட தலைமைப பண்புகளை எடுத்துக்காட்டும் மனபபாங்கு தொடர்பாக இலங்கை மாத்திரமன்றி இந்நிய அரசும் இந்திய மக்களும் தெளிவாக புரிந்துகொண்டுள்ளதாக இந்திய வெளியுறவுச் செயலாளர் எஸ்.ஜெயசங்கர் குறி

24ஆம் பக்கம் பார்க்க....

## பிரசவத்தில் தாய் மரணம்; சிசு உயிருடன் தப்பியது

### கிளி.பொது வைத்தியசாலையில் சம்பவம்

(கிளிநொச்சி)

குழந்தை ஒன்றை பிரசவித்த தாயொருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.எனினும் தெய்வாதீனமாக பிரசவிக்கப்பட்ட சிசு உயிர் தப்பியுள்ளது.

இச்சம்பவம் நேற்று மாலை 3.00 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் இடம் பெற்றுள்ளது.

கிளிநொச்சிமுழங்காவில்இரணை மாதா நகரினை சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான சிலுவைராசா மரிய

24ஆம் பக்கம் பார்க்க....

## பிரதமரின் யோசனைக்கு திருத்தங்கள் முன்வைப்பு

(கொழும்பு)

புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க நாடாளுமன்றத்தை அரசியலமைப்புச் சபையாக மாற்றுவதற்காக பிரதமர் முன்வைத்த யோசனைக்கு திருத்தங்களையும் யோசனைகளையும் முன்வைத்த போது அவற்றை ஏற்றுக்கொண்டு விட்டுக்கொடுப்புடன் பிரதமர் நடந்து கொண்டதாக அமைச்சர் மகிந்த

24ஆம் பக்கம் பார்க்க....

## தனியார்துறைக்கு சம்பள உயர்வு!

(கொழும்பு)

தனியார்துறை ஊழியர்களுக்கு ரூபாய் 3 ஆயிரத்து 500 சம்பள உயர்வை வழங்கும் வகையில் சம்பள நிர்ணய சபைகள் கட்டளைச் சட்டத்தை திருத்துவதற்கான பிரேரணையை தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர ஜோன் செனவிரட்ன நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

பிரதி சபாநாயகர் திலங்க சும

23ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் மக்களின் பிரச்சினைகளை இந்.பிரதமரிடம் எடுத்துரைப்பேன்

### சம்பந்தனிடம் ஜெய்சங்கர் உறுதி

(கொழும்பு)



வடக்கு மற்றும் கிழக்கில் தமிழ மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் தாம் எடுத்துக் கூறுவதாக இந்திய வெளிவிவகாரச் செயலர் எஸ்.ஜெய்சங்கர் உறுதியளித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கிழக்கு மாகாண சபை அமர்வில் பிள்ளையான் பங்கேற்க அனுமதி



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியல் கைதியாகவுள்ள கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் முன்னாள் முதலமைச்சருமான பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு கிழக்கு மாகாண சபையின் இம்மாத அமர்வில் கலந்துகொள்ள நேற்று புதன்கிழமை மட்டக்களப்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தினால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையுடன் தொடர்டைய சந்தேகநபர்களில் ஒருவரான சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட சந்தேக நபர்கள் நால்வரும் குற்றப் புலனாய்வுத் துறையினரால் நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அவர்கள் மீதான விளக்கமறியல் உத்தரவும் எதிர்வரும் 27ம் திகதி வரை நீதிமன்றத்தினால் நீடிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் முன்னாள் தேசிய அமைப்பாளரான பிரதீப் மாஸ்டர் எனப்படும் எட்வின் சில்வா கிருஷ்ணானந்தராஜா, கஜன் மாமா எனப்படும் ரெங்கசாமி கனகநாயகம் மற்றும் இராணுவ புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர் என்று கருதப்படும் மீராலெப்பை கலீல் ஆகியோரே நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 11ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டார். அதன் பின்னர் கிழக்கு மாகாணசபை அமர்வுகளில் அவர் கலந்து கொள்ளவில்லை.

எதிர்வரும் 26ஆம் திகதி கூடவுள்ள கிழக்கு மாகாணசபை அமர்வில் கலந்து கொள்வதற்கு தனக்கு அனுமதி கோரி அவரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை பரிசீலித்த நீதிமன்றம் அதற்கான அனுமதியை வழங்கியுள்ளதோடு அவரை பாதுகாப்புடன் அழைத்துச் செல்வதற்கான உத்தரவையும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு விடுத்துள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம், 2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ஆம் திகதி மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நத்தார் பிறப்பு நள்ளிரவு ஆராதனையில் கலந்து கொண்டிருந்தபோது தேவாலயத்திற்குள்ளேயே வைத்து அடையாளந்தெரியாத துப்பாக்கிதாரி களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

விடுதலைப்புலிகள் அமைப்பில் கிழக்கில் பிளவு ஏற்பட்டிருந்த காலகட்டத்தில் இந்தப் படுகொலை சம்பவம் நடந்தது.

இந்தப் படுகொலை தொடர்பில் 10 ஆண்டுகளுக்குப் பின்னர் குற்றப்புலனாய்வுத் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னரே சந்தேகத்தின் பேரில் இவர்கள கைதாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## துமிந்த சில்வாவிற்கு பிணை அனுமதி

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்த சில்வாவிற்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றம் இவ்வாறு துமிந்த சில்வாவிற்கு பிணை வழங்கியுள்ளது. லஞ்ச ஊழல் மோசடிகள் தொடர்பில் துமிந்த சில்வாவிற்கு எதிராக மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த வழக்குகள் லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

ஒவ்வொரு வழக்கிலிருந்தும் 10 ஆயிரம் ரூபாய் ரொக்கம் மற்றும் ஒரு மில்லியன் சரீரப் பிணை அடிப்படையில் துமிந்த சில்வாவிற்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. 2011, 2012 மற்றும் 2013ம் ஆண்டுகளுக்கான சொத்து விபரங்களை துமிந்த சில்வா சமர்ப்பிக்கத் தவறியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (செ-12)

## சேனநாயக்க கல்லூரி அதிபர் இடமாற்றம்

(கொழும்பு)

உடன் அமுலுக்கு வரும்வகையில் கொழும்பு டீ.எஸ்.சேனநாயக்க கல்லூரியின் அதிபர் டீ.எம்.டீ.திசாநாயக்கவிற்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, இவர் குருநாகல் மலியதேவ கல்லூரிக்கு இடமாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தப்பாடசாலைக்கு புதிய அதிபராக கொழும்பு ராஜகீய வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் உபாலி குணசேகர கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கல்வி அமைச்சினால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்திற்கமைய இந்த முடிவுகள் எடுக்கப்பட்டதாகவும் அதற்கமைய கண்டி கிங்ஸ்வூட், கொழும்பு இராஜகீய மற்றும் டீ.எஸ். சேனநாயக்க கல்லூரி அதிபர்களுக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**இலங்கை**
**திறந்த மற்றும்**
**தொலைக்கல்வி நிலையம்**
**வெளிவாரிப் பரீட்சைகள்**
**கலைமாணித் தேர்வு பகுதி- II-2012**
**(பொது/சிறப்பு) (வெளிவாரி)**
**கலைமாணித் தேர்வு பகுதி- II-2012**
**(சிறப்பு) (வெளிவாரி)**

மேற்படி பரீட்சையை 06.02.2016 (சனிக்கிழமை) தொடக்கம் 20.02.2016 (சனிக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 02.02.2016 (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021- 222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

12.01.2016 (சி-3364) பதிவாளர்



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**இலங்கை**
**விவசாயபீடம்,**
**அறிவியல்நகர், கிளிநொச்சி**
**விரிவுரைகள் ஆரம்பம்**

விவசாயபீடத்திற்கு 2014/2015 கல்வியாண்டிற்கு தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான அறிமுக வழிகாட்டல் நிகழ்வு எதிர்வரும் 01.02.2016 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு அறிவியல்நகர், கிளிநொச்சி விவசாயபீடத்தில் ஆரம்பமாகின்றது. அனைத்து புதுமுக மாணவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விடுதி வசதி தேவைப்படும் மாணவர்கள் 31.01.2016 அன்று பி.ப 4.00 மணிக்கு முன்னர் வருகை தந்து விடுதி வசதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

18.01.2016 (சி-3363) பதிவாளர்


## சிறுமி சேயா கொலை வழக்கு விசாரணைகள் ஜனவரி 25 முதல்

(கொழும்பு)

கொட்டதெனியாவ பிரதேசத்தை சேர்ந்த சிறுமி சேயா சதேவ்மி கொலை சம்பவம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள சமன் ஜயலத் என்ற நபருக்கு எதிரான விசாரணைகளை எதிர்வரும் 25ஆம் திகதி முதல் தொடர்ந்தும் நடத்துமாறு நீர்கொழும்பு நீதவான் சம்பா ஜானகி ராஜரத்ன நேற்று உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் 30 சாட்சியாளர்களுக்கு அறிவிப்பாணைகளை அனுப்பி வைக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

2015 ஆம் ஆண்டு செப்டம்பர் 12 ஆம் திகதி சேயா என்ற சிறுமி கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பாக கொட்டதெனியாவ பொலிஸார் ஆரம்பத்தில் பாடசாலை மாணவனையும் குடும்பஸ்தர் ஒருவரையும் கைது செய்துடன் சமன் ஜயலத்ன என்ற நபரின் சகோதரரையும் கைது செய்தனர்.

மரபணு பரிசோதனைகளை அடுத்து நீதிமன்றம் இவர்களை விடுதலை செய்தது.

இந்த நிலையில், சமன் ஜயலத் என்ற நபர் கைது செய்யப்பட்டதுடன் அவரது மர பணு, சிறுமி சேயாவின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட மரபணுவுடன் பொருந்துவதாக பின்டெக் நிறுவனம் மினுவங்கொட நீதவான் டி.ஏ. ருவான் பத்திரணவுக்கு அறிவித்தது.

இதனடிப்படையில் சட்டமா அதிபர் சமன் ஜயலத் என்பவருக்கு எதிராக நீர்கொழும்பு மேல நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். (செ-12)

## நாமல் ராஜபக்ஷ விரைவில் கைது

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ விரைவில் கைது செய்யப்படவிருப்பதாக பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிதி மோசடி விசாரணைப் பிரிவு அல்லது குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட கூடும் என தெரியவருகிறது.

நாமல் ராஜபக்ஷவை கைது செய்வதற்கு தேவையான சாட்சியங்கள் தேவைக்கு மேலதிகமாக தயாராக இருப்பதாகவும் இதனை அரசியல் பிரச்சினையாக காட்டி அரசியல் இலாபம் பெற மகிந்த தரப்பினருக்கு இடமளிக்காத வகையில் பொலிஸார் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாகவும் பேசப்படுகிறது. (செ-12)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில்**
**கலைப்பிரிவில் 3A பெற்ற எமது வித்தியாலய மாணவி**



**செல்வி நிஷாலினி ரமேஸ்குமார்**
**அவர்களையும்**
**மற்றும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற**

| | | | |
|---|---|---|---|
| செல்வி | ம. | பிரதீபா | ABC |
| செல்வி | சி. | ஜெனனி | 2BC |
| செல்வன் | ர. | டினுசாந்தன் | BCS |
| செல்வி | ப. | அஜந்தா | BCS |
| செல்வி | சி | சிந்துஜா | BCS |
| செல்வி | ர. | கஸ்தூரி | C2S |
| செல்வி | செ. | சியந்தா | C2S |
| செல்வி | செ. | ஜெனோதா | C2S |

**ஆகிய ஒன்பது மாணவர்களையும் மனதார வாழ்த்துவதுடன்**
**இப் பாடசாலையில் பத்து மாணவர்கள் தோற்றி ஒன்பது**
**மாணவர்களைச் சித்தியடையச் செய்து 90% ஆன பெறுபேற்றை**
**அடைவதற்கு அரும்பாடுபட்ட அதிபரையும்**
**ஆசிரியர்களையும் உளம் மகிழ**
**வாழ்த்துகின்றோம்.**




(3190)

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/ ஏழாலை ம.வி**

## யாழ்.நகரில் கறுப்புக் கொடியுடன்

# தமிழினப் படுகொலைக்கு நீதிகோரிப் போராட்டம்






(யாழ்ப்பாணம்)

**தேசிய தைப்பொங்கல் நிகழ்வை கொண்டாடுவதற்கென யாழ்ப்பாணம் வருகை தரும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு எதிர்ப்பு தெரிவித்தும், தமிழினப் படுகொலைக்கு நீதி கோரியும் யாழ்.நகரில் கறுப்புக்கொடி கட்டிய போராட்டத்தில் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களும் காணாமற்போனோர், மற்றும் அரசியல் கைதிகள் ஆகியோரது உறவுகளும் ஈடு பட்டிருந்தனர்.**

நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ்.பிரதான பேருந்து தரிப்பிடம் முன்பாக நடைபெற்ற இப் போராட்டத்தினை, வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம், திருமதி அனந்தி சசிதரன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

நாட்டில் ஆட்சியில் உள்ள புதிய அரசு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக ஆட்சி ஏற்றபோது கூறியது. ஆனால் இதுவரை அவர்களுக்கு எந்த பதிலும் வழங்கவில்லை. இதனை விட காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பிலும் எந்தவிதமான முன்னேற்றங்களும் நடைபெறவில்லை.

அவர்களது உறவுகள் இப் போதும் கண்ணீருடன் தான் அலைந்து திரிகின்றனர். காணிகள் எந்த விதமான விடுவிப்பும் இன்றியும் தொடர்ந்தும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இனப் படுகொலையை நடத்தியவர்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர்.

ஆனால் இனப்படுகொலையை எதிர்கொண்ட நாம் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றோம். எம்மீது மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை மற்றும் காணமற்போனோர. அரசியல் கைதிகள், காணிகள் விடுவிப்பு ஆகியவை தொடர்பில் நியாயமான நடவடிக்கைகள் எடுக்க கோரியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

மக்களின் குறைகள் கஷ்டங்களை தீர்க்காதவர்கள். அதே மக்களுக்கு முன்பாக வந்து தைப் பொங்கல் கொண்டாடுவது எந்த வகையில் நியாயம்? இது துன்பத்தில் துவண்டுள்ள எமது மக்களை மேலும் துன்பத்துக்கும் எரிச்சலுக்கும் உள்ளாக்கும் செய லாகும். எனவே தைப்பொங்கல் கொண்டாட முடியாத துன்பத்தில் நாமிருக்கின்றோம்.

மேலும் இப்போராட்டத்தின் போது தமிழின படுகொலைக்கு நீதி கோரியும், இனப்பிரச்சினை தீர்விற்கு சர்வதேச நாடுகளின் மத்தியஸ்தம் கோரியும், படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை விடுவிக்க கோரியும் கோரிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இப்போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் திருமதி பத்மனி சிதம்பரநாதன் ஆகியோர் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.(இ-4)

## கிரிந்தலையிலுள்ள ராணுவ புலனாய்வுத் தளத்துக்கு சீல்

கிரிந்தலையில் உள்ள இராணுவ புலனாய்வுத்தளம் சீல் வைக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத் தளபதியின் அறிவுறுத்தலுக்கு அமையவே இத் தளத்துக்கு நேற்று முன்தினம் சீல் வைக்கப்பட்டுள்ளது.

அந்தத் தளத்திலிருந்த சகல ஆவணங்களும் இராணுவ பொலிஸிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பிலான விசாரணை மற்றும் அதனோடிணைந்த நீதிமன்றச் செயற்பாடுகள் காரணமாகவே இந்தத் தளத்துக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. (இ-7)

## பேருந்திலிருந்து விழுந்த குடும்பப் பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பேருந்திலிருந்து தவறிவிழுந்த குடும்பப் பெண் படுகாயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றைய தினம் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாலாம் கட்டை பூநகரியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் இராசமலர் (வயது- 50) என்ற குடும்பப் பெண்ணொருவரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் ஏ-9 பூநகரி வீதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பெண் நேற்றுக் காலை பூநகரி பிரதேச செயலகத்திற்கு சென்று விட்டு இ.போ.ச. பேருந்தில் பூநகரி நாலாம் கட்டையிலுள்ள தனது வீடு நோக்கிச் சென்று கொண் டிருந்தார்.

பிரஸ்தாப பெண் இறங்குவதற்காக நாலாம் கட்டைப் பகுதியில் பேருந்து நிறுத்தப்பட்டது. ஆனால் அப பெண் பேருந்து நிறுத்தப்பட்ட போது பேருந்தை விட்டு இறங்கவில்லை.

பேருந்து மீண்டும் புறப்பட்டு சென்ற வேளையே இப் பெண் பேருந்தை விட்டு இறங்கியுள்ளார். இதன்போது அப் பெண் தவறி கீழே விழுந்துள்ளார். இதனை அவதானித்த பேருந்து சாரதி சிறிது தூரம் சென்ற பின்னே பேருந்தை நிறுத்தியுள்ளார்.

இதனால் முகம், கை, கால் என்பவற்றில் படுகாயமடைந்த குறித்த பெண் உடனடியாக பூநகரி பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதுடன் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (இ-5-30)

## இராசி பலன்

14.01.2016
(மார்கழி 29, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.27மணிக்கு,
பஞ்சமி பின்னிரவு 12.38மணிவரை
சதயம் காலை 7.54மணிவரை
பூரட்டாதி பின்னிரவு 6.27 மணிவரை
சுபநேரம் 8.04-9.34மணிவரை
இராகுகாலம் 2.04-3.34மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது சந் | கிரகநிலை சந்திராஷ்டமம் மகம் இரவு 12.35இற்கு மீன-சந் | | |
| | | | ராகு |
| சூரி புத | சனி சுக் | செவ் | குரு |

**மீனம்** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, தூரதேசச் செய்திகள் அனுகூலம் தரும், பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம்.

**மேடம்** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**இடபம்** தொலைபேசி வழியில் பொன்னான தகவலொன்று வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, உங்களின் செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** தொழிலில் இருந்த குழப்பங்கள் அகலும், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், ஆன்றோர் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், தேக நலனில் கவனம் தேவை, வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கடகம்** உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், குடும்பத்தினரிடையே சில கருத்து முரண்பாடுகள் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும்.

**மகரம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், கல்யாணக்கனவுகள் நனவாகலாம், நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம், காணாமற் போன பொருளொன்று மீண்டும் கைக்கு கிடைக்கலாம்.

**சிம்மம்** மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்.

**தனுசு** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பாராட்டும் புகழும் கூடும் நாள், வளர்ச்சிப்பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

**துலாம்** எதிர்பார்ப்புகள் கைகூடும் வாய்ப்புண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படும், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி** தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் இணக்கத்துடன் நடந்து கொள்வர், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், உடல் நலம் சீராகி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள்.

# 2,3-வது போட்டிக்கான ஆஸி அணியில் வோர்னருக்கு பதில் கவாஜா சேர்ப்பு



இந்தியாவுக்கு எதிரான 2ஆவது மற்றும் 3ஆவது ஒரு நாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் தொடக்க வீரர் வோர்னர் விளையாடமாட்டார்.

அவரது மனைவிக்கு விரைவில் 2ஆவது குழந்தை பிறக்க இருக்கிறது. இதனால் வோர்னர் 2 போட்டிகளில் விளையாடவில்லை.

அவருக்கு பதிலாக உஸ்மான் கவாஜா அணியில் சேர்க்கப்பட்டு உள்ளார்.

எனினும் கடைசி 2 ஒரு நாள் போட்டிகளில் வோர்னர் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)





இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி இன்று ஜொகன்னஸ்பேர்க்கில் ஆரம்பமாகும் நிலையில், அதற்கான பயிற்சியில் இரு அணியினரும் ஈடுபட்டபோது...

# ஸ்மித்தை விரைவில் வீழ்த்த வழிகண்டுபிடியுங்கள் இந்திய அணிக்கு சுனில் கவாஸ்கர் அறிவுரை



அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்ரீபன் ஸ்மித்தை விரைவில் வீழ்த்த இந்திய அணி வழி கண்டுபிடிக்க வேண்டும் என்று இந்திய அணியின் முன்னாள் ஜாம்பவான் சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி பேர்த்தில் நேற்று முன்தினம் நடந்தது. இப்போட்டியில் அவுஸ்திரேலியா 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியா அணித் தலைவர் ஸ்ரீபன் ஸ்மித் 149 ஓட்டங்கள் குவித்து அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக விளங்கினார்.

ஸ்ரீபன் ஸ்மித் இந்திய பந்து வீச்சாளர்களுக்கு சிம்மசொப்பனமாக திகழ்ந்து வருகிறார். 2014-2015ஆம் ஆண்டு நடந்த டெஸ்ட் தொடரில் ஸ்மித் 162*, 52*, 133, 28, 192, 14, 117, 71 ஓட்டங்கள் குவித்து அந்த அணி டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் வெல்ல முக்கிய காரணமாக விளங்கினார்.

மேலும் உலகக் கிண்ண அரையிறுதி போட்டியில் இந்தியாவுக்கு எதிராக 105 ஓட்டங்கள் குவித்தார். ஸ்மித்தை விரைவில் வீழ்த்தாவிட்டால் இந்தியா வெற்றி பெறுவது இயலாத காரியம் என்று கூறும் அளவுக்கு அவரது ஆட்டம் சிறப்பாக உள்ளது.

இந்நிலையில் தனியார் தொலைககாட்சி ஒன்றுக்கு பேட்டி



அளித்துள்ள சுனில் கவாஸ்கர் "அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்ரீபன் ஸ்மித்தை குறைந்த ஓட்டங்களில் வீழ்த்த இந்திய அணி வழி கண்டுபிடிக்க வேண்டும்.

"அவருக்கு பந்து வீச இந்திய பந்து வீச்சாளர்கள் திணறி வருகிறார்கள். மேலும் ஸ்மித்துக்கு எப்படி பந்து வீசு வது என்று அவர்களுக்கு தெரிய வில்லை" என்று கூறியுள்ளார். (க)

# நியூசிலாந்தில் விடிய விடிய குடித்து கும்மாளம் போட்ட இலங்கை வீரர்கள்

## கிளம்புகிறது புதிய சர்ச்சை

நியூசிலாந்தில் இலங்கை வீரர்களின மோசமான நடத்தை தொடர்பாக இலங்கை கிரிக்கெட் சபை விசாரணையை தொடங்கியுள்ளது.

இலங்கை அணி நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்து 5 ஒருநாள் மற்றும் 2 இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் மோதியது.

இதில் இலங்கை அணி ஒரு நாள் தொடரை 3:1 எனவும், இருபது-20 தொடரை 2:0 எனவும் இழந்தது.

இந்த நிலையில் அங்கு இலங்கை அணி வீரர்களின் நடத்தை தொடர்பாக புதிய சர்ச்சை கிளம்பி உள்ளது.

அவர்கள் அங்கு விடிய விடிய விருந்தில் மது குடித்துவிட்டு, தங்கள் அணி வீரர்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டதாக புகார் எழுந்துள்ளது.

இதுபற்றி விளையாட்டுத்துறை அமைச்சரான தயாசிறி ஜெயசேகர கூறுகையில்,

"இலங்கை வீரர்களின் நடத்தை அதிர்ச்சி அளிக்கும் வகையில் உள்ளது. வீரர்கள் அதிகாலை 3, 4 மணி வரை குடித்து கும்மாளம் அடித்துள்ளனர்.

"அதுமட்டுமல்லாது வீரர்கள் மற்றும் நிர்வாக உறுப்பினர்களிடையே கைகலப்பும் நடந்துள்ளது.அவர்கள் மதுவிருந்தில் கலந்து கொண்ட அனைத்து புகைப்படங்களையும் நான் கொடுத்துள்ளேன்.

"முதலில் ஒழுக்கத்தில் அக்கறை வேண்டும். ஒழுக்கம் இல்லாத இடத்தில் எதுவும் சிறப்பாக அமையாது.

அங்கு என்ன நடந்தது என்பது தொடர்பாக எனக்கு தகுந்த விளக்கம் அளிக்க வேண்டும்" என்று கூறியுள்ளார். (க)



# உலகக் கிண்ணத்தில் இந்தியாவுக்கு வந்தது சிக்கல்

## 'அண்டர் 19' அணித் தலைவர் கிஷான் கைது





19 வயதுக்குட்பட்ட இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் இஷ்கான் கிஷான், பாட்னா பொலிஸாரால் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளார்.

17 வயதான இஷ்கான் கிஷான் தனது தந்தையின் காரை ஓட்டிச் சென்ற போது ஒரு ரிக்ஷா ஆட்டோவின் மீது மோதியுள்ளார். அவர் மோதி யதில் அந்த ஆட்டோவில் இருந்தவர்கள் படுகாயம் அடைந்தனர்.

மேலும், இஷ்கான் அவர்களுடன் மிகவும் மோசமாக நடந்து கொண்டதாகவும் சிலரை தாக்கியதாகவும் புகார் அளிக்கப்பட்டது. இதனால் பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் இஷ்கான் உலகக்கிண்ணப் போட்டிக்கு 'அண்டர்-19' அணியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

உலகக்கிண்ணப் போட்டிகள் எதிர்வரும் 22ஆம் திகதி பங்களாதேஷில் தொடங்குகிறது.

இந்த நிலையில் இந்திய அணியின் தலைவர் இஷ்கான் கைது செய்யப்பட்டிருப்பது அந்த அணிக்கு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. (க)

## பாகிஸ்தான் சுப்பர் லீக்

# ஜேசன் ஹோல்டருக்கு அனுமதி மறுப்பு

பாகிஸ்தான் சுப்பர் லீக் (பி.எஸ்.எல்.) கிரிக்கெட் போட்டி பெப்ரவரி 4ஆம் திகதி முதல் 23 ஆம் திகதிவரை ஐக்கிய அரபு எமிரேட்ஷில் நடக்கிறது.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவரான ஹோல்டர் இந்தத் தொடருக்கான திவேட்டா கிளாடியேட்டர் அணியில் விளையாட ஒப்பந்தமாகி இருந்தார்.

ஆனால் மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபை அவரை பி.எஸ்.



எல். போட்டியில் விளையாட அனுமதிக்கவில்லை. தடையில்லா சான்றிதழ் வழங்க மறுத்து விட்டது. (க)

# சாக்ஷியிடம் காதலை சொன்னது எப்படி?

## மனம் திறந்த தோனி



இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் தோனி தனது காதல் அனுபவம் பற்றி மனம் திறந்து பேசியுள்ளார்.

இந்திய அணியின் வெற்றிகரமான தலைவரான தோனி 10 ஆண்டு கால கிரிக்கெட்டில் பல சாதனைகளை நிகழ்த்தி உள்ளார்.

2007ஆம் ஆண்டில் இருபது-20 உலகக் கிண்ணம், 2011ஆம் ஆண்டு 50 ஓவர் உலகக் கிண்ணம், 2013ஆம் ஆண்டு சம்பியன் டிரொபி என 3 முக்கிய கிண்ணங்கள் இவர் பெயரில் உள்ளது.

தற்போது இந்தியாவில் நடைபெற உள்ள அடுத்த இருபது-20 உலகக் கிண்ணப் போட்டிக்கு தயாராகி வருகிறார்.

உலகம் முழுவதும் ஏராளமான ரசிகர்களை கொண்ட தோனி, கடந்த 2010ஆம் ஆண்டு தனது பள்ளிப்பருவ தோழியான சாக்ஷியை காதலித்து மணந்து கொண்டார். இவர்களது திருமணம் எளிமையாக நடந்தது.

இந்த நிலையில் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் மாணவர்களிடம் கலந்துரையாடிய தோனி காதல் அனுபவங்களை பகிர்ந்துள்ளார்.

அவர் கூறுகையில், "காதலர் தினத்தின்போது நான் அவுஸ்திரேலியாவில் இருந்தேன். அப்போது நான் சாக்ஷியிடம் என் காதலை வித்தியாசமான முறையில் வெளிப்படுத்தினேன்.

நான் உன்னை விரும்புகிறேன் என்பதற்கு பதிலாக என்னை திருமணம் செய்து கொள்வாயா என்று கேட்டேன்.


அதாவது காதலை சொல்வதற்கு முன் என்னை திருமணம் செய்து கொள்வாயா என்று கேட்டு விட்டேன்.

நாங்கள் ஒன்றாக 'டேட்டிங்' செய்து கொண்டிருந்த சமயத்தில் தான் அப்படி கேட்டேன்.

ஒரு கிரிக்கெட் வீரராக இருப்பதால் எல்லாவற்றையும் சமாளிக்க வேண்டும் என்று அவர் தீவிர ஆலோசனையில் இருந்தார். இறுதியில் நாங்கள் திருமணம் செய்து கொண்டோம்" என்று கூறியுள்ளார்.

தோனி கடந்த ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிக்காக அவுஸ்திரேலியாவில் இருந்தபோது பெப்ரவரி 6ஆம் திகதி சாக்ஷிக்கு பெண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தைக்கு ஷிவா என பெயரிட்டுள்ளனர். (க)

# 'வலம்புரி' புருஷோத்தமனுக்கு கம்பவாரிதியின் நிறைவுப்பதில்!



அன்பு நண்பா!

வணக்கம்.

தமிழ்நாடு சேலத்தில் நடைபெற்ற மார்கழிப் பெருவிழாவில், மகாபாரதத்தொடர் விரிவுரையாற்றிவிட்டு, நேற்றுத்தான் (12.01.2016) நாடு திரும்பினேன். அதனால் மீண்டும் தாங்கள் எனக்கு எழுதிய பதில்மடலை, இன்றுதான் வாசிக்க முடிந்தது. உங்கள் கடிதத்திற்குப் பதில் எழுதுவதா? இல்லையா? என்று, நீண்ட நேரம் சிந்தித்து, சுருக்கமாய் பதில் எழுதலாம் என்று முடிவு செய்தேன். இப்பிரச்சினை பற்றி தாங்களுக்கு நான் எழுதும், நிறைவுக்கடிதமாய் இது அமையும் என்பது திண்ணம். உங்கள் கடிதத்தால் மனதில் உதித்த சில எண்ணங்களைப் பதிவு செய்வதும், சில எதிர்வு கூறுதல்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதுமே, இக் கடிதத்தின் நோக்கங்கள். இதுவே இப்பிரச்சினை பற்றிய எனது நிறைவுக் கடிதம் என்பதை, மீண்டும் ஒரு தரம் உறுதி செய்ய விரும்புகிறேன்.

மனதில் வரும் சில எண்ணங்களை முதலில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

❖ உங்கள் கடிதத்தில் பெரும்பகுதியை நிரப்பியிருந்த என் பற்றியதான பாராட்டுக்களும் புகழுரைகளும், சற்று நாணத்தையும் நிறைய மகிழ்வையும் தந்தன. நாணத்தின் காரணம் நீங்கள் அறிவீர்கள். மகிழ்வுக்குக் காரணம் என்னையும் பாராட்டி உரைக்க எம் இனத்தில் ஒருவராவது இருக்கிறீர்களே என்ற திருப்தி. தங்கள் அன்புக்கு நன்றிகள்.

❖ உங்களைக் கழகம் மதித்துப் போற்றியதாக எழுதியதைப் படித்தேன். அது எம் கடமை. அந்த மதிப்பும் போற்றுதலும் உங்களின் ஆற்றலுக்கானதே தவிர, உங்களின் மீதான எங்களின் அன்புக்கானதல்ல. அன்புக்காக கழக மேடைகளில் நாம் யாருக்கும் என்றும் இடமளித்ததில்லை. அங்ஙனம் இடமளித்திருந்தால் எத்தனையோ பேரிடம் எத்தனையோ பயன்களை நாம் பெற்றிருக்க முடியும். உங்களது ஆற்றல் பற்றி இவ் விடத்தில் நான் எழுதினால் நாம் இருவரும் ஒருவரை ஒருவர் புகழ்வதாய் அது அமைந்துவிடும் என்பதால் அதனைத் தவிர்க்கிறேன்.

❖ நடுவுநிலைமையோடு வலம்புரி செயற்படும் என்ற தங்கள் வாக்குறுதிக்கும், நடுநிலையோடு 'உகரம்' நடப்பதாய் எழுதிய தங்களின் பாராட்டுக்கும் எனதும், என் மாணவர்களதும் தனிப்பட்ட நன்றிகள்.

❖ மேற்படி பிரச்சினை பற்றி அப்பிரச்சினையோடு சம்பந்தப்பட்டவர்கள் மௌனித்திருககிறார்கள். நீங்களும் நானும தான் இதுபற்றி அதிகம் அக்கறைப்பட்டு அலட்டிக் கொள்கிறோம் போலத் தெரிகிறது. இதுவே சற்று மிகையாய்ப்படவில்லையா? மக்களுக்குப் பதில் உரைக்க வேண்டியவர்கள் மௌனித்திருக்க நாம் தர்க்கிப்பதால் பயன் ஏது?

❖ உங்களது இரண்டாவது கடிதத்தின் முதற்பகுதியில் என்னை கௌரவர் சேனையில் நின்று போராடிய பஷ்மரோடு ஒப்பிட்டிருந்தீர்கள். அவ் உவமை தவறென்றே கருதுகிறேன். நான் எந்த அணியைச் சார்ந்தவனும் அல்லன். என்னுடைய பிரச்சினை வேறு! இனம் ஒன்றுபட்டு இருக்கவேண்டிய முக்கியமான இத்தருணத்தில், தலைமைகள் பகையோடு இரண்டாய் உடைவது பற்றியே நான் கவலைப்படுகிறேன் அதனையே எனது விமர்சனங்களில் சுட்டிக்காட்டினேன். யாரையும் காப்பாற்றவேண்டிய தேவை எனக்கில்லை. இனம் காப்பாற்றப்பட்டால் போதும் என்பதே என் எண்ணம். நீங்கள் ஓர் அணியைச் சார்ந்து இருப்பதால் ஐயத்திற்கு இடமாகியிருக்கும் அவ் அணியின் நியாயத்தை தொடர்ந்து எழுத நினைக்கிறீர்கள். அப்படி எந்தத் தேவையும் எனக்கில்லை. அதனால்தான் இக்கடிதத்துடன் எனது பதிலை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

❖ நடுவர் அற்ற பட்டி மண்டபவாதமாய் எங்கள் வாதங்கள் நீள்வதாய்க் குறிப்பிட்டிருந்தீர்கள். அஃது உண்மையே. குறிப்பிட்ட பிரச்சினையில் நடுவராய் இருந்து தீர்ப்பளிக்கும் படியும் என்னை வேண்டியிருந்தீர்கள். வாதத்தில் நானும் பங்குபற்றியதால் அதற்கு நான் உடன்படமாட்டேன். இவ் விவாதத்தில் காலமே நடுவர் பதவி வகிக்க வேண்டும் என்பதே என் கருத்து. அது அளிக்கப் போகும் தீர்ப்பே உண்மையாகவும், நிரந்தரமாகவும் இருக்கப் போகிறது.

❖ பகுதிபகுதியாய் வெளிவந்த தங்களின் முன்னைய கடிதத்திலும், தற்போதைய கடிதத்திலும் பொதிந்திருந்த ஒருவிடயம் என்னைச் சங்கடப்படுத்தியது. முதலமைச்சரின் பல செயல்களுக்கான பதில்களை நீங்களாக உய்த்து உரைத்திருந்தீர்கள். அது அவரது வேலை. நீதியரசரின் அரசியல் செயற்பாடுகள் பற்றி அவர் உரைக்கவேண்டிய பதில்களை நீங்கள் உரைப்பது பொருத்தமாய்ப் படவில்லை. பேராசிரியர் சிற்றம்பலம் பற்றி நீங்கள் எழுதியதும் அது போன்றதொன்றே.

நடுநிலையான ஒரு பத்திரிகையாளரான தாங்கள் மற்றவர்களைக் கேள்வி கேட்கலாமேயன்றி மற்றவர்களுக்காக பதில் உரைக்க முனையலாகாது. அப்பதில்களை உரியவர்கள் உரைப்பதுதான் பொருத்தம்! கால ஓட்டத்தில் யாரும் எப்படியும் மாறலாம். அப்போது வீணாய் நீங்கள் அவமானப் படவேண்டி வரும்.

❖ ஸ்தாபித உறுப்பினர்களில் ஒருவர் என்பதால் பேரவை பற்றிய கேள்விகளுக்கு நீங்கள் பதில் உரைத்தது சரியே.

❖ நீங்கள் பல இடங்களில் பேரவை ஒரு அரசியல் கட்சியோ மாற்றுத்தலைமையோ அல்ல என்றும் அது ஓர் மக்கள் இயக்கம் என்றும் திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டு குறித்த ஒரு அமைப்பையும் குறித்த ஒருசில தலைவர்களையும் மட்டுமே விமர்சிப்பதும், விமர்சனத்துக்குள்ளான பலரை காக்க நினைப்பதும் பொருத்தமாய் இல்லை. இதில் முரண்பாடு இருப்பதாய்ப்படுகிறது. தங்களின் பேரவை பற்றிய என் ஐயப்பாடுகளுக்கு தங்களின் இச்செயற்பாடுகளும் காரணமாயின.

❖ 'நீங்கள் யாரை மாற்றணியெனப் பார்க்கிறீர்கள்?' என்று கேள்வி கேட்டு 'பேரவையில் இடம்பெற்றுள்ள கஜேந்திரகுமாரைத் தவிர மற்றையோர் அனைவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சியினர் தான்' என்று பதிலும் உரைத்திருக்கிறீர்கள். உங்களது அந்தக் கருத்திலும் முரண்பாடு இருக்கிறது. நீங்கள் சொல்வது உண்மை என்றால் பேரவையில் சேரும்படி கூட்டமைப்பினருக்கு முறைப்படி அழைப்பு விடுக்காதது ஏன்? உண்மையில் உங்கள் பேரவை, மக்கள்இயக்கம் தான் என்றால், கஜேந்திரகுமாரைப் போன்று வெளியில் இருந்த மற்றைய கட்சியினரையும் உள்வாங்காதது ஏன்? கேள்விகள் குழப்புகின்றன.

❖ "தமிழினத்தின் மீது குமார் பொன்னம்பலம் கொண்ட பற்றை எவரும் குறைத்து மதிப்பிடமுடியாது." என்ற தங்களது கருத்திலும் பிரச்சினை இருக்கிறது. குமார் பொன்னம்பலத்தை புலிகள் தமது எதிரியாய்க் கருதிய காலமும் இருந்ததென்பதை நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள். அந்நேரம் அவரின் கட்சி சார்ந்த பத்திரிகையை விற்றதால் இன்று கொழும்பில் வேறொரு கட்சி சார்ந்திருக்கும் எனது நண்பர் குமரகுருபரனைப் புலிகள் கைது செய்து அடைத்து வைத்திருந்தனர். அப்போது அவருககாக புலிகளுடன் நான் பேசி யிருக்கிறேன். இது எனக்குத்தேவையில்லாத விடயம். கால மாற்றத்தில் கருத்து மாற்றம் நிகழலாம் என்பதை உறுதிப்படுத்தவே இதனைப் பதிவு செய்கிறேன்.

❖ சம்பந்தன் சொன்ன சிங்கக கொடி பிடித்ததற்கான காரணமும் தமிழ்க்கூட்டமைப்பு புலிகளால் உருவாக்கப்படவில்லை என்ற பதிலும், குழந்தைத் தனமானவை. இவற்றை யாரும் ஏற்கத் துணியார்கள். நானும் ஏற்கத் துணியேன். புத்திசாலித்தனம் செய்வதாய் நினைத்து மடத்தனத்தை வெளிப்படுத்தியிருக்கிறார் அவர்.

❖ தங்களின் மற்றொரு கருத்துப்பற்றிய என் அதிருப்தியையும் பதிவு செய்ய விரும்புகிறேன். வன்னி இழப்புக்கள் கொடூரமானவை, தாங்க முடியாதவை. இக்கருத்தில் எவரும் மாறுபடார். ஆனால் அணி பிரிந்து நிற்கையில் மட்டும் அவ் இழப்புக்களை மிகைப்படுத்திச் சொல்லி தம் அணிசார்ந்து தமிழ்மக்களிடம் ஆதரவு தேட நினைப்பதும், அவர்தம் உணர்ச்சிகளைக் கிளறச் செய்வதும் மிகப்பெரும் தவறென்றே படுகிறது. அதனைத் தங்களைப் போன்ற ஒரு அறிவாளியும் செய்ய நினைப்பதில் எனக்கு உடன்பாடில்லை.

❖ விக்னேஸ்வரன் ஓர் அரசியல்வாதி அல்லர். அவர் ஒரு நீதியரசர், என்ற உங்களது கூற்று நிஜமாய் இருந்திருந்தால் நானும் மகிழ்ந்திருப்பேன். ஆனால் முதலமைச்சரான பின்பு அவரது நடவடிக்கைகள் அங்ஙனம் அமையவில்லை என்பது என் கருத்து. இவ்வுண்மையை வருத்தத்தோடு இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அனுமன் முதுகின் மீது ஏற மறுத்த சீதை நிச்சயம் முதலமைச்சருக்கு உவமையாக மாட்டாள்என்றே கருதுகிறேன்.

❖ சுரேஷ் பிரேமச்சந்திரன், சித்தார்த்தன், பேராசிரியர் சிற்றம்பலம் ஆகியோர் பேரவைக்குத் தரும் ஆதரவு என்பது தமிழரசுக்கட்சிக்குக் காட்டும் எதிர்ப்பு என்பதை ஒரு குழந்தையும் அறியும். அதனை உங்கள் பேரவையின் பலமாய் உரைப்பதில் நியாயம் இருப்பதாய்ப் படவில்லை.

❖ கூட்டமைப்பின் செயற்பாடுகளில் பலதவறுகள் உண்டு என்பதில் எனக்கு எந்தக் கருத்து மாறுபாடும்இல்லை. அவை பற்றி பல இடங்களில் நான் ஏலவே எழுதியும் உள்ளேன். அவர்கள் தம்மை மாற்றிக் கொள்ளத் தவறுவார்களேயானால் என்றோ ஒருநாள் மக்கள் ஆதரவை இழப்பார்கள் என்பது நிச்சயம். மேற்குறிப்பிட்டவற்றை, தங்களோடு வாதிடும் நோக்கத்தில் நான் எழுதவில்லை. தங்கள் கருத்துக்களை முழுமையாய் என் மனம் ஒப்பமறுப்பதற்கான, காரணங்களை உரைக்கும் நோக்கத்திலேயே குறிப்பிட்டுள்ளேன்.

❖ இனி என் அறிவு செய்யும் சில எதிர்வுகூறுகளைக் கீழே குறிப்பிடுகிறேன்.

♦ தேர்தல்கள் நெருங்க நெருங்க வருங்காலத்தில் தமிழ்மக்கள் பேரவை ஓர் அரசியல் கட்சியாக மாறுபாடடையலாம். அக்கட்சி தமிழரசுக் கட்சியைத் தனிமைப்படுத்தி மாற்றணியினரை ஒன்று சேர்த்து முதலமைச்சரின் தலைமையின் கீழ் வலிமை பெறலாம்.

♦ தமிழரசுக்கட்சி ஒதுக்கப்பட்டால் அதன் பின்னர், பேரவையில் ஒன்றுசேர்ந்த மாற்றணிகளுக்குள் இப்போது போலவே பதவிகள் பற்றி பகை வெடிக்கலாம்.

♦ பேரவை, கட்சியாகி தமிழ் மக்களின் ஆதரவோடு தலைமை பெற்றால்அதன்பின்னர் இனப்பிரச்சினையில் இன்று கூட்டமைப்பினரின் பாதையையேஅவர்களும் பிடிக்க வேண்டிவரலாம்.

♦ இலங்கை இனப்பிரச்சினையில் தலையிடும் வல்லரசுகளின் வசதி பற்றியே நம் இனத்தலைமை எதுவானாலும் இயங்கவேண்டிவரும்.

♦ மீறும்பட்சத்தில்அழிவும், இழப்புக்களும் மீண்டும் எம் இனத்துக்காவது நிச்சயம்.

♦ தற்போதுகூட உலக நாடுகளின் நெருக்கடிக்குப் பணிந்து முதலமைச்சர் தடுமாற வேண்டி வரலாம். அன்றேல் அரசியலில் இருந்து ஒருவேளை ஒதுங்க வேண்டிக்கூட இருக்கலாம். அதுவுமன்றி அவரே தமிழ் மக்களின் தலைவராகும் பட்சத்தில் கூட்டமைப்பினர் இன்று செய்வதையே அவரும் நாளை செய்யவேண்டி வரலாம்.

♦ தமிழ்மக்கள் பேரவை உலகநாடுகளின் நெருக்கடியால் மெல்ல மெல்ல சென்று தேய்ந்து போகலாம.

♦ உலகநாடுகளின்நெருககடிகளால் பேரவைபக்கம் சாய்ந்த சில தலைவர்கள் பேரவையைக் கைவிட்டு மீண்டும் கூட்டமைப்பைச் சேரும் நிலையும் ஏற்படலாம்.

♦ இவை அரசியல் பற்றிய எனது அவதானிப்பால்விளைந்த எதிர்வுகூறல்கள். நான் ஒனறும் பெரிய தீர்க்கதரிசி என்று என்னைச் சொல்ல வரவில்லை. ஒன்றும் ஒன்றும் இரண்டு என்று சொல்வதற்கு, தீர்க்கதரிசியாய் இருக்க வேண்டிய அவசியமும் இல்லை. மேற்சொன்ன எனது ஊகங்கள் நடக்காதிருந்து, உங்களின் தமிழ்மக்கள் பேரவையால், எம் இனத்திற்கான உயர்வு நிகழும் பட்சத்தில், நிச்சயம் நானும் மகிழ்வேன்.


♦ உங்கள்முயற்சிகளுக்கு அப்போது வெளிப்படையாக, என் ஆதரவைத் தெரிவிப்பேன். தனிப்பட்ட ரீதியில் உங்கள் முயற்சி பற்றிய, ஐயப்பாடுகள் ஏதும் எனக்குக் கிடையாது. உங்கள் வெற்றி நோக்கயும் நிச்சயம் நான் பிரார்த்திப்பேன. ஆற்றல் மிகுந்த உங்களின் நட்பையும், நான் எனக்குக் கிடைத்த வரமாகவே போற்றுகின்றேன். காலம் தீர்ப்புரைக்கும் வரை நாம் காத்திருப்போம்.

# மருத்துவ பட்டப்படிப்பை மருந்து போல் விற்காதே!

## யாழ்.பல்கலை. மருத்துவபீட மாணவர்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

“மருந்துகள் போல் மருத்துவ பட்டப் படிப்புகளை விற்காதே” என்ற கோசத்துடன் தனியார் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி வழங்கும் அரசின் திட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், கோரிக்கைகளை முன்வைத்தும் யாழ். மருத்துவ பீட மாணவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் ஒன்றிணைந்து யாழில் நேற்றைய தினம் மாபெரும் நடை பயணம் மற்றும் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.




அரசால் தனியார் பல்கலைக்கழகங்களுக்கான அனுமதி வழங்கப்படும்செயற்பாடானது யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களை பெரிதும் பாதிக்கும் வகையில் இருப்பதால் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஆர்ப்பாட்டப்பேரணியை முன்னெடுத்ததாக போராட்ட ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மேலும் தனியார் பல்கலைக்கழகங்களுகான அனுமதி அரசால் வழங்கப்பட்டால் வைத்தியத்துறையில் மக்களுக்கு உள்ள நம்பிக்கையையும் நலிவடையச் செய்யும். இதுமட்டுமல்லாமல் இதுவரை காலமும் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அரசாங்க வைத்தியசாலைகளில் பயிற்சிக்கான அனுமதிகள் வழங்கப்பட்டிருந்தன.

இதேபோன்று தனியார் பல்கலைக்கழகங்களில் மருத்துவத்துறையில் கற்பவர்களுக்கும் அரசாங்க வைத்தியசாலையில், பயிற்சிக்கான அனுமதி வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியார் மருத்துவத் துறைக்குள் உள்ளீர்க்கப்படவுள்ளவர்கள் பொதுப் பரீட்சை இல்லாமல் உள்ளீர்க்கப்படவுள்ளனர்.

உயர்தரப்பரீட்சையில் வெறுமனே சி.எஸ் சித்தி பெற்றவர்கள் கூட தனியார் துறைக்குள் ஈர்க்கப்படுகின்றனர். ஆனால் 3பி பெற்ற மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றுக் கொள்ள முடியாமல் இருக்கின்றார்கள். இனிவரும் காலங்களில் பணம் உள்ளவர்கள் இலகுவாக கல்வியை கற்றுச் செல்லலாம் என்ற நிலை உருவாக்கப்படப்போகின்றது.







தனியார் பல்கலைக்கழகங்களுக்கான அனுமதியானது அரச பல்கலைக்கழக மாணவர்களுக்கு பெரும் பாதிப்பாக இருக்கும். வைத்திய சேவையில் மக்கள் கொண்டுள்ள நன்மதிப்பும் இல்லாமல் ஆக்கப்படவுள்ளது. இதனால் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் பெரும் பாதிப்புக்களுக்கு உள்ளாக்கப்படவுள்ளனர். இந்நிலை மாறறப்பட வேண்டும் என அரசுக்கு மருத்துவ பீட மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் குறித்த ஆர்ப்பாட்டப் பேரணியில் மருத்துவ பீட 7 பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்கள் யாழ். மருத்துவ பீடத்தில் நேற்று காலை ஒன்றிணைந்து பலாலி வீதியூடாக யாழ்.போதனா வைத்தியசாலை வரை ஊர்வலமாக சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-4)




## பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் தைப்பொங்கல் உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8மணிக்கு நடைபெறவுள்ளது.(இ-5)

## விளையாட்டுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

தைப்பொங்கல் விழாவையொட்டி சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளையாட்டுக்கழகம் நடத்தும் முதியோர்களுக்கான விளையாட்டுப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.(இ-5)

## மூத்த பிரஜைகள் பேரவைக்கான அலுவலகம் அமைப்பதற்கு காணி பெற்றுத்தர கோரிக்கை

### அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு

மூத்த பிரஜைகள் பேரவைக்கான நிரந்தர அலுவலகம் ஒன்றை அமைக்க அரச காணி ஒன்றை பெற்றுத் தருமாறு யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவையால் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனிடம் நேற்றைய தினம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.மாவட்டத்திலுள்ள மூத்த பிரஜைகள் விசேடமாக கவனிக்கப்பட வேண்டியவர்கள். அதாவது 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் பிரத்தியேகமாக ஒழுங்கு செய்யப்பட்ட வரிசையில் அமர்த்தப்பட்டு அவர்கள் ஒவ்வொருவரும் விசேடமாக கவனிக்கப்படவேண்டும்.

இதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பான இம் மூத்த பிரஜைகள் பேரவையானது நிரந்தர அலுவலகம் இன்றி காணப்படுகின்றது.

இதனால் பேரவையின் மாதாந்த, வருடாந்த பொதுக் கூட்டங்கள் என்பன இடம் பெறுவதில் மிகுந்த சிரமங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனைக் கருத்திற் கொண்டு பேரவைக்கான கூட்டங்கள் இடம்பெறுவதற்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் ஒரு இடத்தை ஒதுக்கி தருமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அத்துடன் பேரவைக்கான நிரந்தர அலுவலகம் ஒன்றை அமைக்கவும் அதற்கு அரச காணி ஒன்றை பெற்றுத் தருமாறும் கோரப்பட்டுள்ளது.

தொடர்ந்து பேரவைக்கான 11 இலட்சத்துக்கும் அதிகமான பெறுமதியுடைய தளபாடங்கள் தனியார் அலுவலகங்களில்வைக்கப்பட்டுள்ளன.

இவை பாதுகாப்பின்றி காணப்படுவதாகவும் இவற்றை பாதுகாக்கும் முகமாக அலுவலகம் ஒன்றை அமைத்துத் தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவையின் தலைவர் இ.மயில்வாகனம் தலைமையில் இம் மகஜர் அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (இ-5-134)

## கால்கோள் விழா

யாழ்.அச்செழு சைவப் பிரகாச வித்தியாசாலையின் தரம் 1 மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா இன்று காலை 9 மணிக்கு பாடசாலை முதல்வர் சு.மேகராஜன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், சிறப்பு விருந்தினராக ஏ.எஸ்.சற்குணராஜா, யாழ்.கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி.த.மைதிலி, கௌரவ விருந்தினராக வலி.கிழக்கு நீர்வேலி கணக்காளர் சி.திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

# கண்ணீரில் பொங்கல்

## அனந்தி கவலை



**(யாழ்ப்பாணம்)**

**யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் பொங்கவுள்ள பொங்கல் தமிழ் மக்களின் கண்ணீரில் பொங்குகின்ற பொங்கலாகத்தான் இருக்கும்என வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.**

தைப்பொங்கல் கொண்டாடுவதற்கென நாளை வெள்ளிக்கிழமை யாழ்.வரும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ். பேருந்து நிலையத்தில் நேற்றைய தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதன் போது உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த எட்டாம் திகதி அன்று புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒருவருட நிறைவை கொண்டாடியுள்ளார். இந்த அரசாங்கம் நல்லாட்சி அரசு என்று கூறிக்கொண்டு திரியும் நிலையில். இங்குள்ள பெண்கள் கண்ணீருடன் அலைகின்றார்கள்.

சரணடைந்தவர்கள், காணாமற் போனவர்கள் விடுவிக்கப்படவில்லை. இவர்களுக்கு என்ன நடந்தது என்ற பொறுப்புக் கூறலை கூட இந்த அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. தமிழ் அரசியல் கைதிகள் இரண்டு தடவைகள் உண்ணாவிரதம் இருந்து, விடுவிப்பதாக ஏமாற்றப்பட்டு இன்றும் சிறையில் வாடுகின்றார்கள்.

நில ஆக்கிரமிப்புக்கள் தொடர்கின்றன. ஏமாற்று வேலையாக சில இடங்கள் மாத்திரம் விடுவிப்பதாக அரசு அறிவித்துள்ளது. ஒரு அரசியல் கைதியை மட்டும் விடுவித்து விட்டு சர்வதேசத்திற்கு தானொரு நல்ல பிள்ளையாக இந்த அரசு காட்டிக்கொண்டு உள்ளது.

நாங்கள் துன்பத்தால் துவண்டு கண்ணீரில் உள்ள நிலையில் நாங்களே பொங்கலை கொண்டாடாத நிலையில். இந்த அரசாங்கம் பொங்கல் கொண்டாடி என்னத்தை சாதித்துவிட போகின்றது. சர்வதேசத்திற்கு எதனை காட்ட முயல்கின்றது? நல்லாட்சி என கூறும் இந்த அரசு கடந்த ஒரு வருடத்தில் தமிழர்களுக்கு எதுவும் செய்யவில்லை.

நாளை இந்த அரசாங்கம் கொண்டாடும் தேசிய பொங்கல் எங்கள் கண்ணீரில் பொங்குகின்ற பொங்கலாகத்தான் இருக்க போகின்றது. கடந்த இன அழிப்பு அரசாங்கம் கூட காணாமல் போனவர்கள் இருப்பதாக அவர்களுடைய பெயர்ப்பட்டியலை கூட வெளியிட்டிருந்தது. ஆனால் இந்த அரசாங்கம் தங்களிடம் இரகசிய தடுப்பு முகாம்கள் இல்லை, காணாமல் போனோர் என்ற வகையினர் இல்லை என்றெல்லாம் கூறி வருகின்றது.

சிங்கள பேரினவாத அரசுகள் தொடர்ந்தும் எம்மை ஏமாற்றிக்கொண்டு தான் இருக்க போகின்றன. எங்கள் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் எங்கள் நிலத்தில் இவர்கள் பொங்கல் கொண்டாட தேவையில்லை. மேலும் நல்லாட்சி என்று கூறுபவர்கள் காலத்திலும் கூட எங்களால் சுதந்திரமாக ஒரு ஜனநாயக போராட்டத்தை கூட நடத்த முடியவில்லை.

இங்கு இடம்பெற்று கொண்டுள்ள கறுப்புக் கொடி போராட்டத்தின் போதும் கூட பெருமளவிலான இராணுவ புலனாய்வாளர்கள் மற்றும் பொலிஸ் புலனாய்வாளர்கள் தமது கைத்தொலைபேசிகள் மூலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரினை புகைப்படம் எடுத்து அச்சுறுத்தி வருகின்றது. ஆகையால் எங்கள் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இவர்களுக்கு எங்கள் நிலத்தில் என்ன கொண்டாட்டம் எனவும் அவர் கவலையுடன் தெரிவித்தார். (இ-4)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

**மணமகள் தேவை**

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 38செவ் 12 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்
தொ.இ: B/3731

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 4 சூரிசெவ் 5 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்BSC/பொறியியலாளர
தொ.இ: B/3735

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 80செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: B/3743

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 50
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:பட்டதாரி/ஆசிரியர்
தொ.இ: B/3747

**மணமகன் தேவை**

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 49 3/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில
எதிர் பார்ப்பு:விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/4073

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 36
உயரம்: 162cm
தகைமை/தொழில்:BFA
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/4087

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 19சூரிசெவ் 2 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:BSC, MSCலண்டன் NOT PR
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/4089

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 62செவ் 7 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பொறியியலாளர்
தொ.இ: G/4096

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )



விளம்பரத் தொடர்புகளுக்கு
Valampuriadd@sltnet.lk
0212217603
0213210815


## தேசிய வருமானத்தை அதிகரிக்க அரசு திட்டம்

### சுஜீவ சேனசிங்க தகவல்

பத்து வீதமாகக் காணப்படுகின்ற தேசிய வருமானத்தை 20 வீதமாக அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வரி மூலம் அறவிடப்படுகின்ற தொகையில் 10 வீத வருமானம் மாத்திரமே கிடைக்கப்பெறுவதாகவும் இது வங்குரோத்து அடைந்த நாடுகளில் காணப்படுகின்ற வருமானம் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

10 வீதமாக காணப்படுகின்ற வரி வருமானத்தை 20 வீதமாக அதிகரிக்க வேண்டும் என அமைச்சர் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

தற்போது காணப்படுகின்ற வரிக் கட்டமைப்பின் அடிப்படையில் 20 வீதம் வரி வருமானம் கிடைக்கப்பெற வேண்டும் என பொருளாதார வல்லுநர்கள் சுட்டிக்காட்டியதாகவும் இதற்கிடையில் இடைவெளி காணப்படுகின்ற இடம் குறித்து கண்டறியப்பட வேண்டும் எனவும் பொருளாதார வல்லுநர்கள் சுட்டிக்காட்டியதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை அவுஸ்திரேலியாவின் வர்த்தகர் ஜோர்ஜ் சொரொஸின் இலங்கை விஜயம் குறித்து பல தரப்பினரும் கருத்து வெளியிடுவதாகவும் அவரிடமிருந்து தேவையானதை மாத்திரமே பெற்றுக்கொள்வதாகவும் அவர் இந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது தெரிவித்தார்.

இதேவேளை அரசியலமைப்பு திருத்தத்தில் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ள முடியும் என அரச தொழில் முயற்சிகள் பிரதி அமைச்சர் எரான் விக்ரமரத்ன இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்பு திருத்தத்திற்கான செயன்முறையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதோடு மக்களின் அபிப்பிராயங்களைப் பெற்று மக்களுக்கு தேவையான முறையிலே அரசியலமைப்பு மாற்றம் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை குறைத்து ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதியும் நிறைவேற்றப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம்

### சம்பந்தப்பட்ட சகலருக்கும் அறிவித்தல்

எமது ஸ்தாபனம் 1984 ஏப்ரல் 9 ஆம் திகதி தீயினால் அழிக்கப்பட்டு மீண்டும் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மறுசீரமைக்கப்பட்டு தற்போது (20.12.2013) தொடக்கம் இல:-530, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள எமது சொந்த வளாகத்தில் அமைந்துள்ள காகில்ஸ் சதுக்கம் 1 ஆம் மாடியில் இயங்குகிறது.

எம்முடன் தொடர்பு கொள்ளாத பங்குதாரர்கள், வைப்பிலிட்டோர் அனைவரையும் தகுந்த சான்றிதழ்கள், பற்றுச்சீட்டுக்கள் போன்ற ஆவணச்சான்றுகளை நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ 18 ஆம் திகதி ஏப்ரல் மாதம் 2016 ஆம் ஆண்டு திங்கட்கிழமை அல்லது அதற்கு முன்னதாக (03 மாத காலத்திற்குள்) மேற்குறிப்பிட்ட விலாசத்தில் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

கடந்த காலங்களில் பல தடவைகள் அறிவித்தல்கள் கொடுக்கப்பட்டதன் காரணமாக பலர் எம்முடன் தொடர்பு கொண்டனர்.

இதுவரை தொடர்பு கொள்ளாதவர்களுக்கு இறுதி சந்தர்ப்பம் இத்தால் வழங்கப்படுகிறது.

**அலுவலக நேரம்:-காலை 9 மணி முதல் 12.00 மணி வரை**
**(திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை**
**விடுமுறை தவிர்ந்த நாட்கள்)**

(3168)

தொலைபேசி:-
021 222 9979
14.01.2016

இ.சபேசன்
செயலாளர்
யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபார சங்கம்

# முல்லைத்தீவு பழம்பாசியில் பழப்பொதியிடல் நிலையம்

## வடக்கு விவசாய அமைச்சர் திறந்து வைத்துள்ளார்





பழ ஏற்றுமதியை ஊக்குவிக்கும் நோக்கில் முல்லைத்தீவு பழம்பாசிக் கிராமத்தில் பழங்களைப் பொதி செய்யும் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதனை வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கடந்த 11ஆம் திகதி திங்கட்கிழமை திறந்து வைத்துள்ளார்.

விவசாய அமைச்சு முல்லைத்தீவில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பழச்செய்கையை ஏற்றுமதி நோக்கில் ஊக்குவித்து வருகிறது. இளைஞர்களை ஒருங்கிணைத்து இளைஞர் விவசாயக் கழகம் உருவாக்கப்பட்டு, அதனூடாகப் பப்பாசிப்பழம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

கடந்த எட்டுமாத காலங்களில் 45ஆயிரம் கிலோ வரையான பப்பாசிப்பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டானில் பொதியிடல் வசதிகள் இல்லாததால், பழங்கள் தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பொதி செய்யப்படும் நடைமுறையே தற்போது உள்ளது. இதில உள்ள சிரமங்களைக் கருத்திற் கொண்டே, ஒட்டுசுட்டான் பழம்பாசியில் சர்வதேச தொழிலாளர நிறுவனத்தின் 4 மில்லியன் ரூபா நிதிக் கொடையில் பழப் பொதியிடல் நிலையம் உருவாக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், பிரதி விவசாயப் பணிப்பாளர்கள் பொ.அற்புதச்சந்திரன், தெ.யோகேஸ்வரன், அஞ்சனா ஸ்ரீரங்கன், பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் ந.ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோருடன் பழம்பாசி கிராம விவசாயிகளும் கலந்து கொண்டிருந் தார்கள்.

பப்பாசிப்பழத்தோடு எதிர்காலத்தில் கொய்யாப்பழங்களையும் ஏற்றுமதி செய்யும் நோக்கில் அரைக்கிலோ எடை அளவுக்குப் பெரிய பழங்களை உருவாக்கும் தாய்லாந்துக் கொய்யா இனக்கன்றுகள் இந்நிகழ்வின் போது விவசாயிகளுக்கு விவசாயத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (2)

## க.பொ.த(உ/த) பெறுபேறுகள்-2015

மன்/கௌரிஅம்பாள் அரச தமிழ் கலவன் பாடசாலை, திருக்கேதீஸ்வரம்

என்.ரேணுகா- ஏ2பி,என்.அபிரா- ஏ2பி, கே.அரிச்சந்திரன்–ஏபிசி,கே.கௌசிகன்–ஏபிசி,பி.கோகிலன்–ஏ2சி,ரி.டிலக்ஷன்–ஏ2சி, எம்.ஜெயரூபி–ஏ2சி,ஆர்.ரூக்சனா–ஏசிஎஸ். (2)

## அதிபர்களுக்கான கூட்டம்

கிளிநொச்சி கல்வி வலய அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு மேற்படி வலயத்தைச் சேர்ந்த அதிபர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

தவிர்க்கமுடியாத காரணத்தினால் தாங்கள் கலந்து கொள்ள முடியவில்லையாயின் தங்களால் அனுப்பப்படும் பிரதிநிதியின் பெயரினை கோட்டக் கல்வி அலுவலரூடாக அறியத்தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (2-300)




## கோட்டை ஐயனார் ஆலயத்திற்கு களஞ்சியம்,அர்ச்சனை மண்டபம் திறப்பு



(மாமூலை)

முல்லைத்தீவு முள்ளியவளை 3ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள மிகத் தொன்மை வாய்ந்ததும் பரராஜசேகர மன்னனால் அமைக்கப்பட்டு வழிபட்டு வந்த கோட்டை ஐயனார் நீண்ட காலமாக புனரமைக்கப் படாமல் பாழடைந்த நிலையில் காணப்பட்டது. தற்போது அக்கிராம மக்களின் நிதியுதவியால் ஆலயத்தின் புனருத்தாரணம் நடைபெற்று கடந்த 9 ஆம்திகதி நண்பகல் 12 மணியளவில் ஆலயத்திற்கான களஞ்சியம் மற்றும் அர்ச்சனை மண்டபத்திறப்பு விழா நடைபெற்றது. வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா மண்டபத்தை திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் பரஞ்சோதி ஆலயத்தின் சிறப்புக்கள் பற்றி உரையாற்றினார்.மேலும் இவ்வாறான தொன்மை வாய்ந்த ஆலயங்கள் இனம் காணப்பட்டு புனரமைப்பு இடம் பெற வேண்டும் என்றார். (2-301)

## வற்றாப்பளை மகா வித்தியாலய நூலகத்திற்கு தேசிய விருது வழங்கல்

(வற்றாப்பளை)

முல்லைத்தீவு வற்றாப்பளை மகா வித்தியாலய நூலகத்திற்கு தேசிய விருது கிடைக்கப்பெற்றுள்ளது.இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

2014ஆம் ஆண்டுக்கான நூலகங்களுக்கான தேசிய விருது மு/வற்றாப்பளை மகா வித்தியாலயத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

இவ்விருது கடந்த 11.12.2015அன்று கொழும்பு தேசிய நூலகத்தில் தேசிய நூலக ஆவண ஆக்கல் திணைக்கள சுவடிகள் ஆணையகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய விருது வழங்கும் நிகழ்வில் வைத்து மத்திய கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல முன்னணி மற்றும் தேசிய பாடசாலைகள் உள்ளபோதிலும் தமது பாடசாலைக்கு விருது கிடைக்கப்பெற்றமையையிட்டு பாடசாலை சமூகம் பெருமிதம் அடைவதாகவும் குறித்த விருதை பெற்றுத்தந்த நூலக ஆசிரியர் சி.அரியகலாவை பாடசாலை சமூகம் சார்பாக பாராட்டுவதாகவும் அதிபர் க.திருக்குமரன் அறிவித்துள்ளார். (2-310)

## விறகு வெட்ட சென்ற பெண்கள் மீது இனந்தெரியாதவர்கள் தாக்குதல்

வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் விறகு வெட்டச் சென்ற நான்கு விதவைப் பெண்கள் மீது இனந்தெரியாதவர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளதுடன் அவர்களின் கோடரிகளையும் பறித்துச் சென்றுள் ளதாக பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவித்துள் ளனர.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கனகராயன்குளம், மன்னகுளம் காட்டுப் பகுதிக்கு கடந்த 9ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் போரின் போது தமது கணவன்மாரை பறிகொடுத்த நான்கு விதவைப் பெண்கள் தமது பிள்ளைகளை படிக்க வைப்பதற்காகவும், வாழ்வாதாரத்திற்காகவும் விறகு வெட்டி விற்பதற்காக சென்றுள்ளனர்.

அவர்கள் விறகுகளை வெட்டி துவிச்சக்கர வண்டியில் கட்டிக் கொண்டு வந்த போது, நெடுங்கேணியில் இருந்து வாகனம் ஒன்றில் வந்த நபர்கள் அவர்களை மறித்து கொண்டு வந்த விறகு கட்டையால் அவர்களை தாக்கியதுடன், அவர்களது துவிச்சக்கர வண்டிகளினது காற்றுக்களையும் திறந்து விட்டுள்ளனர். அத்துடன் அருகில் இருந்த வீடுகள், கடைகளுக்கும் புகுந்து காட்டில் மரம் வெட்டீனீர்களா என சோத னை செய்து அட்டகாசம் புரிந்துள்ளதுடன், வீட்டில் இருந்த இரு ஆண்கள் மீதும் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இதனால் சிறு காயங்களுக்கு உள்ளாகிய இரு ஆண்களும் மாங்குளம் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

காட்டுப்பகுதியில் இருந்து பெரிய வாகனங்களில் பாரிய பெறுமதிமிக்க மரங்கள் வெட்டப்பட்டு கொண்டு செல்லப்படும் அதே வேளை, பிள்ளைகளின் படிப்புக்காக போ ரால் பாதிக்கப்பட்ட தாம் சிறியளவில் விறகுகளை வெட்டி கொண்டு செல்ல விடாது அராஜகம் செய்வதாக பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின் றனர்.

இதேவேளை, மன்னகுளம், பெரியகுளம், புதூர்சந்தி ஆகிய பகுதிகளில் போரால் மிகவும் பாதிக்கப்பட்டு கணவன்மாரை இழந்த சுமார் 100 வரையான விதவைப் பெண்கள் வாழ்ந்து வருகின்றமையும் அவர்கள் பொருளாதார ரீதியில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (2-250)

## முள்ளியவளை நாவலர் வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை



(வற்றாப்பளை)

முள்ளியவளை நாவலர் வீதியை மக்கள் பாவனைக்கு ஏற்ற வகையில் புனரமைத்து தருமாறு அப்பிரதேச மக்கள் பிரதேச சபையினரிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

மேலும் நாட்டில் யுத்தம் முடிவடைந்து பொதுமக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்னர் எந்தவிதமான புனரமைப்பு பணிகளும் இன்றி மக்கள் போக்குவரத்திற்கு உதவாத வீதியாக இவ்வீதியுள்ளது.

இவ்வீதியூடாக நாளாந்தம் பலநூற்றுக் கணக்கான பொதுமக்கள்,மாணவர்கள் தமது தேவையின் நிமிர்த்தம் முள்ளியவளை நகரப் பகுதிக்கு சென்று வருகின்றனர்.

சுமார் ஒன்றரை கிலோமீற்றர் தூரமான குறித்த வீதியிலுள்ள பாலங்கள்,மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளதை அவதானிக்க முடிகிறது.

இவ்வீதியில் சுமார் 200இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இவ்வீதியின் குறைபாடுகள் தொடர்பில் பல முறை உரிய அதிகாரிகளிடம் தெரிவித்தும் செப்பனிடுவதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என பாதிக் கப்பட்ட மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அத்துடன் முள்ளியவளை-மாங்குளம் பிரதான வீதியில் வாய்க்கால்கள் மூலம் வரும் வெள்ளநீர் இவ்வீதியை குறுக்கறுத்தே பள்ளவெளி பெரும் பீலியூடாக நந்திக்கடலை சென்றடைகின்றது.எனவே இந்நீர் வடிந்தோடக் கூடிய ஓர் கொங்கிறீட் பாலமும் அமைக்கப் பட வேண்டிய தேவை காணப்படுவதாக போக்குவரத்தில் ஈடுபடுபவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆதலால் உரிய தரப்பினர் இது தொடர்பில் கவனமெடுத்து இவ்வீதியை புனரமைத் துத் தர வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் எதிர்வரும் மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்திலும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கவுள்ளதாக கூறப்படுகின்றது. (2-310)



இந்திய மற்றும் இலங்கைக் கலைகளை வளர்க்கும் நோக்கில் குறிப்பாக கிராமப்புறங்களில் அவற்றை வளர்க்கும் நோக்கில் யாழ். இந்தியத் துணைத்துதரகமானது புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவிலுள்ள மல்லிகை இளைஞர் கழகத்தினருடன் இணைந்து புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் விழாக்களை முன்னிட்டு கடந்த 10 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் *மலரட்டும் புதுவசந்தம்-2016* எனும் சிறப்பு இசை நடன நிகழ்ச்சியை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தில் நடத்தியபோது...

## தைப்பொங்கல் பெருவிழா

(மல்லாவி)

மு/மாங்குளம் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழர் பெருவிழா எனும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை பொங்கல் பூசை வழிபாடுகளும் அதனைத் தொடர்ந்து பிற்பகல் 3 மணிவரை பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளும் பிற்பகல் 3 மணியிலிருந்து மாலை 6 மணிவரை கலை நிகழ்வுகளும் நடைபெறுமென மு/மாங்குளம் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (2-15)

## கால்கோள் விழா

கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலய தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழா-2016 இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் த.கண்ணபிரான் தலைமையில் புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் என வித்தியாலய நிர்வாகத்தினர் அறவித்துள்ளனர். இதன் போது ஆலய வழிபாடு, மாணவர்கள் அழைத்து வரப்படல், மாணவர்கள் கௌரவிப்பு, கலை நிகழ்வுகள் என்பன நடைபெறும்.(2-309)

# காலத்தின் தேவை கருதி செய்யப்படும் பணிகள் ஒருபோதும் வீண்போவதில்லை

### துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு



(மல்லாவி)

காலத்தின் தேவை கருதி செய்யப்படும் எந்த பணிகளும் என்றுமே வீண் போவதில்லை என துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட 61 பாடசாலைகளில் பெற்றோர்களை இழந்த நிலையில் உறவினர்களுடன் தங்கியிருந்து கல்வியைத் தொடர்கின்ற மாணவர்களுக்கான உதவிப்பொருட்களை யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினர் நேற்றுக்காலை 9 மணியளவில் துணுக்காய் கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் வைத்து வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில்,

எமது கல்வி வலயமானது இறுதிப்போரின் போது முற்றாக செயலிழந்த நிலையில் மீள ஆரம்பிக்கும் நிலையில் மீள ஆரம்பிக்கும் போது பல்வேறு வளப்பற்றாக் குறைகளுடனும் உடல் உள ரீதியான பாதிப்புக்களுடன் பாடசாலைக்கு வருகை தந்த மாணவர்களையும் அன்புடன் அரவணைத்துக் கொண்டு எமது பணிகளைத் தொடர்ந்தோம்.

இன்று ஆறு வருடங்களைக் கடந்து பல முன்னேற்றங்களை எமது மாணவர்கள் கண்டுள்ள நிலையில் பெற்றோர்களை இழந்த நிலையில், 92 மாணவர்களும் தாய் அல்லது தந்தையை இழந்த நிலையில் ஆயிரத்து எட்டு மாணவர்களுமாக மொத்தம் ஆயிரத்து 100 மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கு பல்வேறு கஷ்டங்கள் காணப்படு வதாக வலம்புரி பத்திரிகையூடாக செய்தியொன்றை தெரிவித்திருந்தேன்.

காலத்தின் தேவை கருதி அப்பத்திரிகையும் செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்திருந்தது.

இதனை பார்வையிட்ட யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை இந்து வாலிப சங்கத்தின் இளைஞர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு பெற்றோரை இழந்த 92 மாணவர்களுக்கு காலணிகளையும் தரம் 10 இல் தந்தையாரை இழந்த நிலையில் கல்வி பயின்று வருகின்ற 130 மாணவர்களுக்கு புத்தகப்பைகளை வழங்க முன் வந்திருந்தனர். இன்று (நேற்று) உதவியைமாணவர்களுக்குவழங்கி வைப்பதையிட்டு நன்றி தெரிவிக்கின்றேன்.

இதனைப் பெறுகின்ற மாணவர்களாகிய நீங்கள் ஒழுக்க சீலர்களாக கல்வியைத் தொடர்ந்து எமது இனத்தின் கல்வி கலாசார விழுமியங்களை கட்டிக்காத்து நாட்டின் தலைவர்களாகவும் சமுதாய சிற்பிகளாகவும் உருவாக வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன் என்று அவர் தெரிவித்தார். (2-15)

## பட்டமரக்கொப்புகளால் வீதியில் பயணிப்போருக்கு இடையூறு



(புதுமுறிப்பு)

கிளி/கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்திற்கு முன்பாக காணப்படுகின்ற மரங்களில் உள்ள பட்ட மரங்களில் உள்ள பட்ட மரக்கொப்புகள் வீதியில் உடைந்து விழும் அபாய நிலையில் காணப்படுவதாக பொதுமக்கள், பாடசாலை சமூகத்தினர் ஆகியோர் தெரிவிக்கின்றனர்.

இவ் வீதியால் பாடசாலை மாணவர் கள், பெற்றோர்கள், வாகனங்கள்என்பனஅன்றாடம்பயணித்து வருகின்றன. மரங்களில் காண ப்படும்பட்டமரக் கொப் புகள் உடைந்து விழும்நிலையில்காணப்படுவதால் வீதி யால் பயணிப்போர் அச்சத்துடன்செல்வதாகதெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதில் கூடிய கவனமெடுத்து உடனடியாக மரத்தை தறித்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள், பாடசாலை சமூகத்தினர் , வாகன சாரதிகள் ஆகியோர் கோரிக்கை விடுக்கின்றனர். (2-307)

## சந்தை கழிவுப்பொருட்கள் உரிய முறையில் அகற்றப்படாமையால் சுகாதார சீர்கேடு

(உருத்திரபுரம்)

கிளிநொச்சி உருத்திரபுரம் சந்தை வளாகம் கழிவுப் பொருட்களால் அசுத்தமாகக் காணப்படுவதாக வியாபாரிகள், பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

சந்தையில் மரக்கறிகள், இறைச்சிக் கழிவுகள், எலும்புகள்,மீன் கழிவுகள் என பலதரப்பட்ட கழிவுப்பொருட்கள் உரிய முறையில் நாளாந்தம் அகற்றப்படாமையால் அவை ஆங்காங்கே நாய்கள் காகங்களினால் இழுத்து சிதறிக்கிடக்கின்றன.

நாய்கள் எலும்புகளை வெளியே இழுத்துச் சென்று வீதியில் போடுவதால் துர்நாற்றம் வீசுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் கழிவுப்பொருட்களை காகங்கள் தூக்கிச் சென்று அயல் வீடுகளில் போடுவதால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகின்றது. இக் கழிவுப்பொருட்கள் மூன்று அல்லது நான்குநாட்களுக்கு ஒருதடவை அகற்றப்பட்டதனாலேயே இவ்வாறான சுகாதார சீர்கேடு காணப்படுவதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே கிளிநொச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியாக இச் சந்தை அமைவதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டு உரிய முறையில் கழிவுகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென வியாபாரிகள் , பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-298)




## இரணைமடுக்குள மாபெரும் பொங்கல் விழா

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடு குளத்தின் மாபெரும் 96 ஆவது ஆண்டுப் பொங்கல் விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9மணிக்கு அருள்மிகு கனகாம்பிகை அம்மன் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இப் பொங்கல் விழாவிற்கு அனைத்து விவசாயிகள்,பொது மக்கள் ஆகியோரை கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளனம் அறிவித்துள்ளது. (2-277)

## சதுரங்க சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட சதுரங்க சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட மாபெரும் சதுரங்க 30,31 ஆவது சுற்றுப்போட்டி தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்படவுள்ளதால் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் சி.சுதாகரன் கேட்டுள்ளார். (2-277)

## வவுனியாவில் ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்

வவுனியாவில் ஆண் ஒருவ ரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. வவுனியா, ஆச்சிபுரம் பகுதியிலேயே பிரஸ்தாப நபர் சடலமாக் மீட்கப்பட்டுள்ளார்.

ஆச்சிபுரம் பகுதியில் வசித்து வந்த இராமச்சந்திரன் ஜெயராஜ் (வயது 35) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டார்.வவுனியா நகர திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் மரண விசாரணையினை நேற்று மேற்கொண்டதுடன் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசார ணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(2-250)

## கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலை இடமாற்றம்

(தண்ணீரூற்று)

முள்ளியவளை கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலை முள்ளியவளையிலுள்ள பிராந்திய சுகாதார பணிமனை முன்பாகவுள்ள துரை வீதியில் இயங்கி வருகின்றது.

மேற்படி வைத்தியசாலை முன்னர் நாவலர் வீதி, முள்ளியவ ளையில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ் வைத்தியசாலை மக்களின் விருப்பிற்கு அமைய நடமாடும் வைத்திய சேவையை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(2-292-310)

# 12 நாட்களில் 170 பேருக்கு யாழ்.மாவட்டத்தில் டெங்கு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் கடந்த 12 நாட்களில் 170 பேர் டெங்கு நோய்த் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

இதேவேளை டெங்கு நோய் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு பொது மக்கள் தமது சுற்றுச் சூழலில் நுளம்பு பெருகாமல் இருப்பதற்குரிய நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டுமென யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சு.நந்தகுமாரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். தற்போது ஓரளவுக்கு இந்த நோயின் தாக்கம் கட்டுப்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண நகர்ப்பகுதி மற்றும் சாவகச்சேரி ஆகியபகுதிகளில்டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளது. அந்த இடங்களில் டெங்கு நோய் பரவுவதற்கு கடுமையான நுளம்பின் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மூன்று நாட்கள் கொண்ட விசேட டெங்கு ஒழிப்பு செயற்றிட்டத்தின் கீழ் ஒவ்வொரு வீடு வீடாக சென்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வும் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

பலர் டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான காரணிகள் தெரியாதவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு எமது சுகாதார சேவைகள் அதிகாரிகளால் விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த விசேட டெங்கு ஒழிப்பு செயற்றிட்டத்துக்காக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாவட்டங்களை சேர்ந்த அதிகார சேவைகள் பணிமனைகளில் இருந்து புகையூட்டல் பிரிவினர் வருகை தந்துள்ளனர்.

மேலும் வவுனியா மாவட்டத்தில் இருந்து பூச்சி ஆய்வுக்குழு வருகை தந்துள்ளனர். அவர்கள் தமது ஆய்வினை ஒவ்வொரு பிரதேசங்களாக சென்று பார்த்து எமக்கு அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர்.

அவர்கள் அறிக்கைகளின் படி கிணறுகளில் இருந்து நுளம்பு பெருகுவது பெரும் சவாலாக உள்ளது பாழடைந்த கிணறுகள், பயன்படுத்தாத கிணறுகளில் இருந்து அதிகமாக நுளம்பு பெருக்க டைகிறது.

எனவே அவ்வாறான இடங்களை இனம் கண்டு சுத்தப்படுத்தும் நட வடிக்கைகளும், நுளம்புகளை அழிப் பதற்கான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த விசேட டெங்கு ஒழிப்பு செயற்றிட்டத்தில் பொலிஸார், இராணுவத்தினர் பிரதேச செயலக அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பலர் கலந்து கொண்டு விழிப்புணர்வு நடவடிக்கைகளை வழங்கி வருகின்றனர்.

அத்துடன் நுளம்பு பெருக்கத்துக்கு காரணமாக இருக்கும் பகுதிகளை அழிக்காமல் இருப்பவர்களுக்கெதிராக வழக்குகளும் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

டெங்கு நோய் தாக்கம் எமக்கு பெரும் சவாலாக இருப்பதால் ஒவ்வொருவரும் மிகவும் அவதானத்துடன் தமது சுற்றுப்புறச் சூழல்களை சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் டெங்கு நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## பகிரங்க கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தில் இருந்து நிலத்துக்குள் செலுத்தப்பட்டதாகக் கருதப்படும் கழிவு ஒயில் கலப்பால் பாதிப்படைந்த நீரைக் குடிக்கலாமா? குடிக்கக்கூடாதா? என்பது தொடர்பாக பொதுமக்களைத் தெளிவுபடுத்தும் பகிரங்க கருத்தரங்கு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் முருகேசு பண்டிதர் வீதியில் (சுன்னாகம் இலங்கை வங்கிக்கு எதிரில்) அமைந்துள்ள சுன்னாகம் தெற்கு சனசமூக நிலையத்தின் முத்தமிழ் மன்ற மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் இணைச் செயலாளர் ச.தனுஜனின் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கருத்தரங்கின பிரதான கருத்துரைகளை வைத்திய கலாநிதி முரளி வல்லிபுரநாதன். பொறியியலாளர் ம.சூரியசேகரம், சட்டத்தரணி சோ.தேவராஜா ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

தொடர்ந்து குறிப்புரைகளை இ.திருநாவுக்கரசு, திருமதி ச.சிவாஜினி, ப. சசிகுமார், சி.கா .செந்திவேல் ஆகியோர் ஆற்றவுள்ளனர். இவ் உரைகளைத் தொடர்ந்து சபையோர் கருத்துரைகளும், திறந்த கலந்துரையாடலும் இடம் பெறும்.


இப் பகிரங்க கருத்தரங்கில் பாதிக்கப்பட்ட பொதுமக்களையும், சுற்றுச்சூழல் ஆர்வலர்களையும் கலந்துகொள்ளுமாறு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. (இ-7)









யாழ்.சிறுப்பிட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. அதிபர் எஸ்.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண உறுப்பினர் இ.ஆனோல்ட் கலந்து கொண்டிருந்தார்.

## எமது மக்களின் காணிகளை விடுவிப்பது வரவேற்கத்தக்கது

### டக்ளஸ் எம்.பி.தெரிவிப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது, இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்த இன்னும் ஆறு மாத காலத்திற்குள் நடவடிக்கை எடுப்பதாக வழங்கிய உறுதிமொழிக்கு அமைவாக, வலிகாமம் வடக்குப் பகுதியில் எமது மக்களுக்குச் சொந்தமான காணிகளில் ஒரு பகுதி தற்போது விடுவிக்கப்பட்டமை வரவேற்கத்தக்கது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)யின் செயலாளர் நாயகமும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர், கடந்த பல வருடகாலமாக தங்களது சொந்த காணி, நிலங்களிலிருந்து இடம்பெயர்ந்து, நலன்புரி நிலையங்களிலும், உறவினர்கள் மற்றும் நண்பர்களது வீடுகளிலும் பல்வேறு இடர்களுக்கு மத்தியில் தங்கியிருந்து வரும் எமது மக்களை, தங்களது சொந்த காணி, நிலங்களில் மீளக்குடியமர்த்த வேண்டும் என்பதே எமது கொள்கையாகும்.

கடந்த ஆட்சியின்போது எம்மால் இயன்ற அளவில் நாம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தோம். அந்த வகையில் தற்போதைய அரசும் படிப்படியாக சில நடவடிக்கைகளை எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

இதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எமது மக்கள் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன.

இந்த நிலையில் தேசிய நத்தார் தின நிகழ்வில் கலந்து கொள்வதற்காக அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதி. நலன்புரி நிலையங்களுக்குச் சென்று. இடம்பெயர்ந்த மக்களை நேரில் சந்தித்து, அம் மக்களின் நிலைமைகளைக் கண்டறிந்ததன் பின்னர், இன்னும் ஆறு மாதங்களில் இம் மக்களை மீளக்குடியமர்தத நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதிமொழி வழங்கியிருந்தார்.

அதற்கேற்ப, அரசு தற்போது நடவடிக்கைகளை மேற்கொண்டு, எமது மக்களின் காணி, நிலங்களை விடுவித்து வருவது வரவேற்கத்தக்கது.

அதேநேரம், எமது மக்களின் ஏனைய காணி, நிலங்களையும் விரைவில் விடுவிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கல்வி செயற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளன


சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தின் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளன. வேத, ஆகம வகுப்பும், சமஸ்கிருத கிரந்த நகர எழுத்துப் பயிற்சியும் ஆறு மாத காலத்தினுள் நிறைவு செய்யப்பட்டு முதற்கட்டமாக அரச அங்கீகாரத்துடன் கூடிய சான்றிதழ் வழங்கப்பட இருப்பதால்கல்வி பயிலவிரும்பும் அனைத்து மாணவர்களும் உடன் ஒன்றியச் செயலாளர் பிரம்மஸ்ரீ சோ.கேதீஸ்வர சர்மாவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

2015 புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர்கள், க.பொ.த உயர்தர சித்தியடைந்த அனைத்து அந்தண குல மாணவர்களும் பெயர் விபரங்களை பதிவு செய்யுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# குழந்தையினுடைய கல்வி வளர்ச்சிக்கு குடும்ப சூழ்நிலை பாடசாலைச் சூழல் இன்றியமையாதது

குழந்தைகளின் கல்வி வளர்ச சியில் பரம்பரையும் சூழலும் பெரும்பங்கு வகிக்கின்றன. குழந தைகள் கருவாக உருவாகும் போது வேறுபாடுகள் தோன்றுகின்றன. வேறுபாடுகள் தோன்றுவதற்கு பரம்பரையும் சூழலும் காரணமாக அமைகின்றன. இதில் எது கூடுத லாக செல்வாக்கு செலுத்துகின்றது என்பது தொடர்பாக அறிஞர்கள் மத்தியில் பல்வேறுபட்ட கருத்துக் கள் காணப்படுகின்றன. மனிதனு டைய உடல், உள, மன வெழுச்சி வளர்ச்சிக்கு பரம்பரை இயல்புக ளும் சூழல் இயல்புகளும் காரண மாக அமைகின்றன.

குழந்தையின் வளர்ச்சியின் வேகம், தன்மை அளவு ஆகிய இயல்புகளின் மரபுநிலை (Here dity), சூழல் (Environment) இரண்டும் செல்வாக்குச் செலுத்து கின்றன. இவ் இரு காரணிகளும் குழந்தையின் கல்வி வளர்ச்சியில்



பெரும் பங்காற்றுகின்றன.

**குழந்தையின் கல்வி வளர்ச் சியில் பரம்பரையின் பங்களிப்பு**

மரபு நிலையின் செல்வாக்கி னால்தான் பிறக்கும் குழந்தைகள் பெற்றோரின் சாயலை ஒத்திருக் கின்றன. கருவுற்ற முட்டையில் ஒடு ங்கி நிற்கும் எல்லாப் பண்புக் கூறு களையும் குறிப்பது மரபு நிலை. தன் பெற்றோர், முன்னோர்களிடமிரு ந்து பிறப்பிலேயே ஒரு குழந்தை பெறும் உடற்கூறுகளும் மனத திறன்களும், மனவெழுச்சிக்கூறு களும் அதன் பரம்பரை அல்லது மரபு நிலையால் வந்தவை என வும் இது உயிரியல் மரபு எனவும் அழைக்கப்படுகின்றது.

ஒரு குழந்தையினுடைய மரபு நிலைப் பண்புகள் அதன் பெற்றோ ரிடம் மட்டுமன்றி அதன் முன் னோர்களிடமிருந்தும் வந்திருக்க லாம். இதனால் தான் சில குழந் தைகள் தாய் தந்தையின் சாயல் இல்லாமல் இருப்பதற்குக் காரண மாகின்றன. குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்கள் அவர்க ளுடைய மரபு நிலையை மாற்ற முடியாது. குழந்தையின் பிற்கால வாழ்க்கையும் ஆளுமையும் அது பிறந்த பின்னரோ அல்லது வளர்ந்த பின்னரோ மட்டும் நிர்ணயிக்கப் படுவதில்லை. கருவாக இருக்கும் போதே இவற்றில் பல தீர்மானிக் கப்பட்டு விடுகின்றன. தாய், தந்தை யினுடைய பண்புகள் குழந்தையி னுடைய உருவாக்கத்தில் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றன. பிறக்கும் குழந்தை என்னென்ன பண்புகளோடு வளரும் என்பதை பரம்பரையின் மரபு நிலைகள் நிர் ணயித்து விடுகின்றன.

குழந்தை கருவாக இருக்கும்போது தாய், தந்தையின் உடல் சார்ந்த அம்சங்கள் கூடுதலாக பரம்பரை அலகினால் தீர்மானிக்கப்படுகின் றன. ஒரு குழந்தை பிறக்கும் போது தன்னுடைய பெற்றோர்களின் இயல் புகள் கொண்டு பிறக்கின்றன. குழந் தையின் அறிவு, திறன், மனப்பாங்கு போன்றன கல்வி வளர்ச்சியிலும் தாக் கத்தைச் செலுததுகின்றன. ஒரு குழந்தையினுடைய அறிவு, திறன் கள் பரம்பரையின் தாக்கத்தைச் செலுத்துகின்றது. ஒரு குழந்தையினு டைய அறிவு, திறன்கள் பரம்பரையின் தாக்கத்தில் தங்கியுள்ளன. இவர்க ளின் கல்வி வளர்ச்சிக்கு பரம்பரை செல்வாக்குச் செலுத்துகின்றது. பிரான்ஸிஸ் கால்டன், கால் பியர்சன் போன்ற ஆய்வாளர்களின் ஆய்வு முடிவுகளின்படி மனிதன் ஒருவன் பெற்றுள்ள அறிவுத் திறனின் அளவு அவனது மரபு நிலை செல்வாக்குச் செலுத்துவதை வலியுறுத்தவதாக அமைகின்றது.

ஆய்வாளர்களின் ஆய்வு முடிவு களின்படி ஒரு குழந்தையின் கல்வி வளர்ச்சியில் குழந்தையின் அறிவுத் திறன்கள், நுண்ணறிவு, ஆளுமை ஆகியவற்றிலே பரம்பரையின் பங் களிப்பு அதிக செல்வாக்கு செலுத்து வதை அறிய முடிகின்றது.

**குடும்ப சூழ்நிலை**

ஒரு குழந்தையின் ஆரோககி யம், மகிழ்ச்சிகரமான வளர்ச்சி என் பவற்றுக்கு குடும்பம் என்ற அமை ப்பை அடித்தளம், ஆரோக்கியமான குடும்ப சூழலில் வாழும் பிள்ளை உடல், உள நலத்துடன் வளரும். அமைதியான நல்ல குடும்ப சூழலில் அன்பு, ஆதரவு, அரவணைப்பு மேலோங்கிக் காணப்படும். அத்து டன் கீழ்ப்படிவு, புரிந்துணர்வு, மதிப்பு, பாராட்டு போன்றவை கிடைக்கக் கூடியதாக அமையும். இவ்வாறான தன்மை குழந்தையின் கல்வி வளர்ச் சியில் ஆரம்ப அடித்தளமாக விளங் குகின்றது. ஆரோககியமான குடும் பங்கள் கல்வியில் உயர வேண்டும் என்ற எண்ணம், இலக்கு இருக்கும். அதற்காக தமக்குள் சில கட்டுப்பாடு களையும் ஒழுங்கு விதிகளையும் தியாகங்களையும் கொண்டிருப்பர்.

சிறப்பார்ந்த குடும்பச் சூழலிலே குழந்தைகள் மொழிப் பிரயோகம், சுத்தம், உரையாடல், நல்ல பழக்க வழக்கங்கள், நல்ல நடத்தை போன் றவற்றைக் கற்றுக் கொள் கின்றனர். அன்பை வெளிக்காட்டல், உற்சாக மளித்தல், உடல் நலத்தில் கவன மெடுத்தல், உணர்வுகளை கட்டுப்ப டுத்தல், அறநெறி ஒழுக்க விழுமி யங்கள், இறையுணர்வு போன்ற விட யங்களையும் குடும்பச்சூழலிலிரு ந்து குழந்தை கற்றுக் கொள்கின்றது.

குழந்தை உளவியலாளர்களின் ஆய்வு முறைகளின் படி குழந்தை யின் அறிகையாற்றல் வளர்ச்சியிலே தந்தை, தாயின் கல்வி, குடும்ப உறுப் பினர்களின் கல்வி, கல்வி சார் ஊக்கு விப்புகள், குடும்பத்தின் சமூக பொரு ளாதார கட்டுமானம் போன்றவை நேரடியாக செல்வாக்குச் செலுத்துவது கண்டறியப்பட்டுள்ளது. இத்தகைய குடும்பச் சூழலில் வளரும் குழந் தையின் கல்வி வளர்ச்சி மேலும் ஊக்குவிக்கப்படுகின்றது. அன்பு, ஆதரவு, அரவணைப்பு அற்ற சூழ லிலும் சிதைந்த குடும்பங்களிலும் வாழ்ந்த சிறுவர்களின் கல்வி அடை வுகளும், நுண்மதித் திறனும் பாதிப் படைவதாக ஆய்வுகள் தெளிவுபடுத் துகின்றன. அவ்வாறே வறுமையின் உச்சம், அதீத குழப்பமுள்ள பெற் றோர் வாழும் சூழல் போன்றவற் றைப் பின்புலமாகக் கொண்ட சிறு வர்களின் அடைவுகளும் பாரிய பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

கற்றலுக்கு மிகப் பிரதானமானது மொழி. அந்த மொழியாற்றலை வளர்க்கும்ஆரம்ப இடம்குடும்பச்சூழல் நல்ல மொழியாற்றலை, மொழித்திறன் விருத்தியைப் பெற்ற குழந்தைகள் கல்வியில் சிறப்பான கல்வி அடை வைப் பெற முடிகின்றது. எனவே குடும்பச் சூழல் பிள்ளையின் கற்றற் செயற்பாட்டுக்கு உந்து சக்தியாக அமை கின்றமை நோக்க முடிகின்றது.

**பாடசாலைச் சூழல்**

குழந்தையின் கற்றற் செயற்பாடு களிலும் விழுமியச் செயற்பாடுக ளிலும் பாடசாலையின் பௌதீகச் சூழல், உயிரியற் சூழல் என்பன செல் வாக்குச் செலுத்துகின்றன.

பௌதீகச் சூழல் எனும் போது பாடசாலைக் கட்டடங்கள், வகுப்ப றைகள், பிள்ளைகளுக்கு வசதியா கவும் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாகவும் அமைந்திருத்தல் வேண்டும். குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் பாடசாலைத் தளபாடங் கள் முக்கிய பங்களிப்பை வகிக் கின்றன. மாணவரது வயது வளர்ச் சிக்கு ஏற்ப கதிரை, மேசை ஏனைய தளபாடங்களும் கல்வி வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

பாடசாலையின் உயிரியற் சூழ லில் பூங்கா, நிழல் தரும் மரங்கள், குழந்தைகளின் கல்விச் செயற் பாட்டில் முக்கிய இடம் வகிக்கின்றன. குழந்தைகள் மகிழ்ச்சியாக இருக்கக் கூடிய பூங்கா, தோட்டம் மரநிழல் போன்றன குழந்தைகளின் உள்ளங் களை புத்துணர்ச்சி பெறச் செய்கின் றன.குழந்தைகளின் உடலும் உள்ள மும் உற்சாகமாகவும் மகிழ்ச்சியாக வும் இருக்கும். இவ்வாறான சூழல் குழந்தையின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும்.


குழந்தைகள் நல்ல சுகாதாரப் பழக்கவழக்கங்களை கடைப்பிடிக்க வழிகாட்டும் இடமாக பாடசாலைச் சூழல் அமைகின்றது. சுத்தமான குடிநீர், மலசலகூடம் போன்ற அடிப் படைத் தேவைகளை மாணவர்கள் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை கற்பித்து நடைமுறைப் படுத்த வழிப்படுத்த வேண்டும். இதை வாழ்நாள் முழுவதும்



தொடர்வதற்கு கற்றல் வசதியளிக் கின்றது.

குழந்தைகளின் உடல் - உள ஆரோக்கியத்தை பேணுவதில் பாட சாலை மைதானமும் பங்களிப்புச் செய்கின்றது. குழந்தைகள் சுதந் திரமாக விளையாடுவதற்கான வாய்ப் புக்கள், வசதிகள் ஏற்படுத்திக் கொள் வதன் மூலம் கற்றல் ஊக்கம் பெற வும் திறன்களை வெளிப்படுத்தவும் சந்தர்ப்பமளிக்கின்றது. விளையாட்டு களூடாக குழந்தைகள் அற ஒழுக் காங்கள், கட்டுப்பாடுகள், பால்வேறு பாடு போன்றவற்றைக் கற்பதற்கு பாடசாலை விளையாட்டுக்கள் துணை செய் கின்றன. பிள்ளைகள் தம்மைப் பற்றிய தற்காட்சியை வளர்த்துக் கொள்வதற்கும் விளையாட்டுக்கள் துணை செய்கின்றன. குழந்தைக்கு பாடசாலைச் சூழலை சிறப்பாக அமைப்பதன் மூலம் பரம்பரையில் ஏற்படுகின்ற சில குறைபாடுகளைக் கூட நிவர்த்தியாக்க முடிகின்றது. குழந்தையின் நுண்மதியாற்றல் பரம்பரையில் மட்டுமல்லாமல் சூழ லிலும் பெரும் பங்கு தங்கியுள்ளது. குழந்தைகளின் ஆற்றல்கள், நல்ல பண்புகள் சிறப்பாக வளர்ச்சி பெறக் கூடிய கற்றல் சூழலை உருவாக்கிக் கொடுக்கும் ஆசிரியர்களின் பங்கு அளப்பரியது. பாடசாலைச் சூழலா னது சிறப்பாக அமைகின்ற போது குழந்தைகள் மிக விருப்புடன் கற்கும் திறன் அதிகரிக்கின்றது. பாடசாலைச் சூழல் குழந்தைகள் கல்வி கற்பதற்குப் பொருத்தமாக, அழகாக, கவர்ச்சியாக அமைகின்ற போது பிள்ளைகள் ஆர் வத்துடனும் விருப்புடனும் கல்வி கற்க வருகின்றனர். இதனால் அவர் களின் கற்றல் வளர்ச்சி ஏற்படுகின்றது.

குழந்தைகளின் ஆரம்ப சூழலில் குடும்பத்திற்கு அடுத்தபடியாக விளங் குவது முன்பள்ளிகள். முன்பள்ளிகள் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில்



முக்கிய பங்களிப்பைச் செய்கின்றன. முன்பள்ளிகள் குழந்தைகள் தொழிற் படுவதற்கான தயார் நிலை, கற்பதற் கான தயார் நிலை, தொழிற்பாடு களிலே பங்குபற்றல் என்பன குழந் தைகள் வாழும குடும்பச் சூழல், வாழும் அயற் சூழல், பொருளாதார நிலை என்பவற்றுடன் தொடர்புக ளைக் கொண்டுள்ளன. முன்பள் ளிக் கல்வியானது குழந்தைகளிடம் தன்னம் பிக்கை, தற்துணிவு, தொட ங்கும் ஆற்றல், வெட்கமற்ற சுய வெளிப்பாடு என்பவற்றை வளர்க் கின்றன.

அந்த வகையில் குழந்தையின் கல்வி வளர்ச்சியில் பாடசாலைச் சூழலின் பங்கு மிக முக்கியமான தாகும். எந்த ஒரு குழந்தையும் எப் படியான பரம்பரையிலிருந்து வந்த தாயினும் குழந்தை உயர்வான நற்பண்புகளையும் ஒழுக்க விழுமி யங்களையும் கீழ்ப்படிவுகளையும் வெளிப்படுத்தும் இடம் பாடசாலைச் சூழலாகும். சிறந்த கல்விமுறை, கற்பித்தல் செயற்பாடுகள் நல்ல முறையில் நடைபெற அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப் பது அதிபர், ஆசிரியர்கள் பணி யாகும்.

**முடிவுரை**

குழந்தைகளின் கல்வி வளர்ச் சியில் பரம்பரை, சூழல் இரண் டுமே பங்களிப்புச் செய்கின்றன. குழந்தையின் வளர்ச்சியானது பரம் பரை, சூழல் இரண்டினதும் இடை வினையால் எழுவதாகும். உடற் பண்புகள் அறிவுசார் பண்புகளில் பரம்பரை சூழல் செல்வாக்குச் செலுத்துகின்றன. குழந்தையின் பரம்பரையின் உயிரியல் மரபில் இருந்து பெறும் பண்புகள் சிறப்பாகச் செய்வதற்கு பாடசாலைச் சூழல், சமூகச் சூழல் மூலம் கிடைக்கும் நுண்மதியும் வேண்டப்படும் ஒன்றாகும். எனவே குழந்தை யின் கல்வி வளர்ச்சியில் பரம் பரை இயல்புகளும் சூழல் இயல்பு களும் இணைந்து செயற்படுகின் றன. எனவே குழந்தையினுடைய கல்வி வளர்ச்சிக்கு பரம்பரை, சூழல் இரண்டினதும் பங்களிப்பு நிறைவாக செல்வாக்கு செலுத்து கின்றமை தெளிவாகும்.

த.தவப்பிரியா
ஹொரண எல்லகந்த
தமிழ் மகா வித்தியாலயம்
(மேல்மாகாணம்)

# ஜல்லிக்கட்டு போட்டியை நடத்த அவசர சட்டம் கொண்டு வரவும்

## பிரதமருக்கு ஜெயா கடிதம்



**ஜல்லிக்கட்டு போட்டி நடத்த உயர் நீதி மன்றம் இடைக்காலத் தடை விதித் ததை தொடர்ந்து அவசர சட்டம் கொண்டு வந்து போட்டி நடத்த அனுமதிக்கக்கோரி பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுக்கு எதிராக உச்ச நீதிமன்றம் விலங்குகள் நல வாரியம் தொடுத்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் ஜல்லிக்கட்டுக்கு தடை விதித்து 2014 ஆம் ஆண்டு, மே மாதம் 7 ஆம் திகதி உத்தரவிட்டது.

அதை மறு ஆய்வு செய்யக் கோரி உச்ச நீதிமன்றில் தமிழக அரசு தாக்கல் செய்த மனு, அங்கு நிலுவையில் உள்ளது.

**மத்திய அரசு அனுமதி**

இதற்கிடையே, தமிழ்நாட்டில் இந்த ஆண்டு ஜல்லிக் கட்டு போட்டி நடைபெற ஏதுவாக அவசர சட்டம் பிறப்பிக்க வேண்டும் என கேட்டு பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கடந்த மாதம் 23 ஆம் திகதி கடிதம் எழுதினார். இதே போன்று மத்திய அமைச்சர் பொன்.ராதா கிருஷ்ணனும், ஜல்லிக்கட்டு பேரவை, வீர விளையாட்டு கழகம் என பல அமைப்புகளும் இந்த ஆண்டு ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு தீவிர முயற்சி எடுத்தன.

பல தரப்பிலும் வைக்கப்பட்ட கோரிக்கைகளைப் பரிசீலித்து, தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு நிபந்தனைகளுடன் அனுமதி அளித்து மத்திய அரசு கடந்த 7 ஆம் திகதி அறிக்கை வெளியட்டது. இது தமிழ்நாட்டில் பெரும் வரவேற்பை பெற்றது. மதுரை மாவட்டம் பாலமேடு, அலங்காநல்லூர், அவனியாபுரம் உள்ளிட்ட பல இடங்களில்ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு முழு வீச்சில் ஏற்பாடுகள் நடந்தன.

**உசச நீதிமன்றம் விசாரணை**

இந்த நிலையில், உச்ச நீதி மன்றம் மத்திய அரசின் அறிக்கைக்கு எதிராக இந்திய விலங்குகள் நல வாரியம், இந்திய விலங்குகள் பாதுகாப்பு சங்கங்களின் கூட்டமைப்பு உள்ளிட்ட 4 அமைப்புகள் தரப்பிலும், 9 தனிநபர்கள் சார்பிலும் 13 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அவை அனைத்தும் முதலில் தலைமை நீதிபதி டி.எஸ்.தாகுர், நீதிபதிகள் ஏ.கே.சக்ரி, ஆர்.பானுமதி ஆகியோர அடங்கிய அமர்வில் விசாரிப்பதாக இருந்தது.

ஆனால் நீதிபதி ஆர்.பானுமதி, தான் ஏற்கனவே சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் ஜல்லிக்கட்டு தொடர்பான வழக்கின் மீது தீர்ப்பு வழங்கியிருப்பதால் இந்த மனுக்கள் மீதான விசாரணையில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்வதாக அறிவித்தார். அதைத் தொடர்ந்து விசாரணை நீதிபதிகள் தீபக் மிஸ்ரா மற்றும் என்.வி.ரமணா ஆகியோர் அடங்கிய அமர்வுக்கு மனுக்கள் மாற்றப்பட்டன.

**இடைக்கால தடை**

அப்போது வழக்குதாரர்கள் சார்பில் மூத்த சட்டத்தரணி கே.கே. வேணுகோபால், அரிமா சுந்தரம், ஆனந்த் குரோவர், சித்தார்த் லூத்ரா உள்ளிட்டவர்களும், மத்திய அரசு தரப்பில் அட்டார்னி ஜெனரல் முகுல் ரோத்தகியும், தமிழக அரசின் சார்பில் மூத்த சட்டத்தரணிகள் சேகர் நாப்டே, ராகேஷ் திவிவேதி மற்றும் நாகேஸ்வர ராவ் ஆகியோரும் ஆஜராகி தங்கள் வாதங்களை எடுத்து வைத்தார்கள்.

அதைத் தொடர்ந்து நீதிபதிகள், ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி அளித்து மத்திய அரசு பிறப்பித்த அறிக்கைக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவு பிறப்பித்தனர்.

**4 வாரத்தில் பதில் மனு**

அப்போது நீதிபதிகள், "இடைக்கால நடவடிக்கையாக (ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி அளித்து பிறப்பிக்கப்பட்ட) மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை ஜனவரி 7 ஆம் திகதி பிறப்பித்த அறிக்கைக்கு இடைக்கால தடை விதிக்கிறோம்" என கூறினர்.

மத்திய அரசு, தமிழ்நாடு, மராட்டியம், குஜராத் உள்ளிட்ட தொடர்புடைய மாநில அரசுகள் 4 வார காலத்தில் பதில் மனு தாக்கல் செய்யவும் அவர்கள் உத்தரவிட்டனர்.

அத்துடன், மனுக்கள் மீதான அடுத்த கட்ட விசாரணையை மார்ச 15 ஆம் திகதிக்கு நீதிபதிகள் ஒத்தி வைத்தனர்.

**ஜெயலலிதா கடிதம்**


இந்த நிலையில் தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்த மத்திய அரசு உடனடியாக அவசர சட்டம் பிறப்பிக்கவேண்டும் என்று பிரதமருக்கு, முதலமைச்சர் ஜெயலலிதா அவசர கடிதம் எழுதியுள்ளார்.

**உடனடியாக அவசர சட்டம்**

ஜல்லிக்கட்டு என்ற பாரம்பரிய நிகழ்ச்சியில், ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

எனவே, இந்த பிரச்சினையின் அவசரம் கருதி, மத்திய அரசு ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்த ஏதுவாக, அவசர சட்டம் ஒன்றை உடனடியாக பிறப்பிக்கவேண்டும் என்று உங்களை மிகவும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இந்த பிரச்சினையில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக மக்களின் சார்பில் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன் என அதில் மேலும் கூறப்பட்டுள்ளது. (இ-7)

## அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான இரு படகுகளை ஈரான் சிறைபிடித்தது



ஈரான் நாட்டு கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்ததாக அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான இரு படகுகளை ஈரான் கடற்படையினர் சிறைபிடித்துள்ளனர்.

குவைத்-பஹ்ரைன் நாடுகளுக்கு இடையில் சென்றுகொண்டிருந்த அந்தப் படகுகள் திடீரென பழுதாகி, திசைமாறி ஈரான் கடற்பகுதிக்குள் நுழைந்ததாகவும், அதில் இருந்த 10 அமெரிக்க கடற்படையினருடன் அந்த இரு படகுகளையும் ஈரான் கடற்படையினர் சிறைபிடித்தனர். ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜாவத் ஷரிப் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெரியிடம் தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளதாகவும் அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-7)

## இந்தியத் தூதரகத்தின் மீது ஆப்கானில் மீண்டும் தாக்குதல்



(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டில் உள்ள இந்திய துணைத் தூதரகங்களின் அருகே தொடர்ந்து தாக்குதல் நடத்தப்பட்டு வருவது பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜலாலாபாத்தில் உள்ள இந்திய தூதரகத்திற்கு அருகே நேற்று காலை தற்கொலைப்படை தாக்குதல் நடத்தப்பட்டது. இச்சம்பவம் நடத்தப்பட்ட சிறிது நேரத்திலேயே தூதரகத்தை சுற்றி துப்பாக்கிச் சூடு தாக்குதலும் நடத்தப்பட்டது. கடந்த 10 நாட்களில் இந்திய தூதரகத்தின் மீது நடத்தப்பட்ட 3 ஆவது தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த சில நாட்களுக்கு முன் ஆப்கான் தூதரகத்தில் நடத்தப்பட்ட தாக்குதல், அப்சல் குரு சிறையில் அடைக்கப்பட்டு, தூக்கிலிடப்பட்டதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக நடத்தப்பட்டது என அங்கு பயங்கரவாதிகள் எழுதிச் சென்றதாக கூறப்பட்டது. ஆனால் இந்த தாக்குதலில் ஈடுபட்ட 99 சதவீதம் பேர் பாகிஸ்தான் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், இந்த தாக்குதலை நடத்துவதற்காக அவர்கள் புதுவிதமாக யுக்திகளை பயன்படுத்தியதாகவும் ஆப்கானிஸ்தான் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே இந்திய தூதரகம் மது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பாக்., இராணுவம் தான் காரணம் என ஆப்கான் பொலிஸாரே அறிக்கை அளித்துள்ள நிலையில், நேற்று மீண்டும் தற்கொலைப்படை தாக்குதல், துப்பாக்கிச் சூடு தாக்குதல் என அடுத்தடுத்து நடத்தப்பட்டு வருகிறது பெரும் சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது. (இ-7)

## ஈரான் எல்லைக்குள் அத்துமீறிய அமெரிக்காவின் போர்க்கப்பல்

(டெஹ்ரான்)

ஈரான் நாட்டு கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்ததாக அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான இரு படகுகளை ஈரான் கடற்படையினர் சிறைபிடித்துள்ளனர். அதில் இருந்த பத்து அமெரிக்க வீரர்களும் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் தங்கள் நாட்டு கடல் எல்லைக்குள் நேற்று அமெரிக்க இராணுவத்துக்கு சொந்தமான விமானம்தாங்கி போர்க்கப்பல் அத்துமீறி வட்டமிட்டதாக ஈரான் கடற்படை தளபதி குற்றம்சாட்டியுள்ளார்.

வளைகுடா பகுதிக்குள் உள்ள கடல் எல்லைக்குள் நேற்று சுமார் 40 நிமிடங்களுக்கு அமெரிக்க போர்க் கப்பல் அத்துமீறி நுழைந்து, சுற்றிவந்ததாக ஈரான் புரட்சிப்படை இராணுவத்தின் கடற்படை தளபதி அட்மிரல் அலி படாவி தெரிவித்துள்ளார். (இ-7)

## மசூதிக்குள் தாக்குதல்

மத்திய ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கமரூனில்உள்ள போவாலா நகரில் நேற்று தற்கொலைப்படை தீவிரவாதி நடத்திய மனித வெடிகுண்டு தாக்குதலில் 10 பேர் பலியாகினர்.

இங்குள்ள ஒரு மசூதிக்குள் உடலில் வெடிகுண்டுகளை கட்டியபடி நுழைந்த தீவிரவாதி வெடித்து சிதறியதில் அங்கிருந்த 10 பேர் பலியாகினர். (இ-7)

# பாகிஸ்தானுக்கு போர் விமானங்களை விற்பனை செய்யும் திட்டம் முடக்கம்



(வோஷிங்டன்)

பாகிஸ்தானுக்கு போர் விமானங்கள் விற்பனை செய்யும் திட்டத்தை அமெரிக்க பாராளுமன்றம் அதிரடியாக முடக்கி வைத்துள்ளது.

உலகளாவிய பயங்கரவாதத்துக்கு எதிரான அமெரிக்காவின் போரில் பாகிஸ்தானும் கூட்டாளியாக உள்ளது. பாகிஸ்தானின் தீவிரவாத ஒழிப்புக்கு, நட்பு நாடு என்ற வகையில் அமெரிக்கா நிதி உதவியும் அளித்து வருகிறது.

அந்த நட்பின் அடிப்படையில் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா 8 போர் விமானங்களை (எப்-16 ரகம்) விற்பனை செய்ய இருந்தது. இதற்கு அமெரிக்க பாராளுமன்றத்தின் அனுமதியை ஒபாமா நிர்வாகம் பெற வேண்டும்.

அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் அண்மையில் பயணம் மேற்கொண்டிருந்தபோது, அந்த நாட்டுக்கு எப்-16 ரக போர் விமானங்கள் விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளதாக பாராளுமன்றத்தில் ஒபாமா அரசு அறிக்கை அளித்தது.

ஆனால் பாகிஸ்தானுக்கு திட்டமிட்டிருந்தபடி, போர் விமானங்கள் விற்பனை செய்யும் திட்டத்தை அமெரிக்க பாராளுமன்றம் அதிரடியாக முடக்கியது.

இது தொடர்பான விவகாரம் அமெரிக்க பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு வந்தபோது, இந்த விற்பனையை தள்ளிப்போடும் வகையில் எம்.பிக்கள் விளக்கம் மற்றும் தகவல்கள் கோரும் நோட்டீஸ்களை அளித்தனர். செனட் சபையும் பாகிஸ்தானுக்கு போர் விமானங்கள் விற்பனை செய்யும் திட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டும் என்று ஒபாமா அரசுக்கு நோட்டீஸ் கொடுத்துள்ளது.

பாகிஸ்தானுடனான உறவு குறித்தும், எப்-16 ரக விமானங்களை அமெரிக்கா விற்பனை செய்வது குறித்தும் எம்.பிக்கள் சரமாரியாக கேள்விகள் எழுப்பினர்.

### மனிதாபிமான உதவி அல்ல

## அமெரிக்கா அதிரடி

டெட் போ என்ற எம்.பி. பேசும் போது, "பாகிஸ்தானுக்கு எப்-16 ரக போர் விமானங்களை விற்பனை செய்வது எப்படி மனிதாபிமான நடவடிக்கையாக இருக்க முடியும்? அவர்கள் சி-130 ரக விமானங்களை வாங்கினால் அது வேண்டுமானால் மனிதாபிமான உதவியாக இருக்க முடியும். ஆனால் எப்-16 ரக போர் விமானங்களை அல்லவா வாங்க நினைக்கிறார்கள்? இது உண்மையிலேயே மனிதாபிமான உதவியாக இருக்க முடியாது" என திட்டவட்டமாக தெரிவித்தார்.

டான் ரோராபச்சர் என்ற எம்.பி., பேசுகையில், "நாம் எப்-16 ரக போர் விமானங்களையும், இராணுவ தளபாடங்களையும் அந்த நாட்டுக்கு வழங்கினால், அவர்கள் அதை சொந்த மக்களுக்கு எதிராகவே பயன்படுத்துகிறார்கள்"என தெரிவித்தார்.

இந்த இரு எம்.பிக்களுமே பாகிஸ்தான் எதிர்ப்பில் தீவிரமாக உள்ளனர். அவர்கள் பாகிஸ்தானுடனான உறவை துண்டிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ஒபாமாவை பலமுறை வலியுறுத்தி வந்துள்ளனர்.

### பதன்கோட் தாக்குதல்

பாகிஸ்தானுக்கு போர் விமானங்கள் விற்பனை செய்யும் திட்டத்தை அமெரிக்க பாராளுமன்றம் முடக்கி இருப்பதற்கு, பதன்கோட்டில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்தியுள்ள தாக்குதல்கள்தான் காரணம் என அமெரிக்க வெளியுறவுத்துறை வட்டாரங்கள் கூறுகின்றன.

இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் கருத்து தெரிவிக்கையில், "பதன்கோட் விவகாரத்தில் விசாரணை நடத்தப் போவதாக பாகிஸ்தான் பகிரங்கமாக அறிவித்தது. தீவிரவாத குழுக்கள் இடையே பாரபட்சம் காட்ட மாட்டோம் என்று அவர்கள்தான் பகிரங்கமாக கூறினார்கள். அவர்கள் சொன்ன வார்த்தைகளின்படி நடக்கிறார்களா? என்பதை நாங்கள் கவனிப்போம்" என தெரிவித்தார்.

இந்த தகவல்களை பாகிஸ்தானில் இருந்து வெளி வரும் 'டான்' நாளேடு வெளியிட்டுள்ளது. (இ-7)




## உளவாளிகளுக்கு மரண தண்டனை

(குவைத்)

குவைத்தில் ஈரானுக்காகவும், ஸ்புல்லா இயக்கத்துக்காகவும் உளவு பார்த்ததாக 26 பேர் மீது அங்குள்ள நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

அல் அப்தாலி என்ற இயக்கத்தை சேர்ந்த இவர்கள், உளவு வேலையில் ஈடுபட்டதுடன், குவைத்துக்குள் ஆயுதங்களையும், வெடிகுண்டுகளையும் கடத்தி வந்து தாக்குதல்கள் நடத்த திட்டமிட்டதாகவும் நீதிமன்றில் குற்றம் சாட்டப்பட்டது.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்று முடிவுக்கு வந்தது.இதையடுத்து 2 பேருக்கு மரண தண்டனை விதித்து நீதிமன்று நேற்று முன்தினம் தீர்ப்பு அளித தது.


ஒருவருக்கு ஆயுள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

19 பேருக்கு தலா 5 ஆண்டு முதல் 15 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.3 பேர் விடுதலை செய்யப் பட்டனர். ஒருவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

மரண தண்டனை விதிக்கப்பட்ட இருவரில் ஒருவர் ஈரான் பிரஜை, மற்றொருவர் குவைத் பிரஜை என்றும் தகவல்கள் கூறுகின்றன. (இ-7)

# அமெரிக்காவுக்கு ஐ.எஸ். அச்சுறுத்தலாகவுள்ளது

## ஜனாதிபதி ஒபாமா தெரிவிப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்க பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி பராக் ஒபாமா அல்-கொய்தா மற்றும் ஐ.எஸ். தீவிரவாதம் அமெரிக்காவிற்கு நேரடி அச்சுறுத்தலாக உள்ளது என்று தெரிவித்தார்.

அமெரிக்காவின் ஜனாதிபதி ஒபாமா பதவியேற்று 8 வருடங்கள் நிறைவடைகின்றன. இரு அவைகளும் கூடிய கூட்டு பாராளுமன்றத்தில் ஜனாதிபதியாக ஒபாமா கடைசி உரையை ஆற்றினார்.

ஒபாமா பேசுகையில், "நமது மக்களுக்கு அல்-கொய்தா மற்றும் ஐ.எஸ். தீவிரவாதம் நேரடி அச்சுறுத்தலாக உள்ளது, பயங்கரவாதிகள் கையில் மனித உயிருக்கு சிறிதளவுகூட மதிப்பு கிடையாது, அவர்களுடைய சொந்த உயிருக்குகூட மதிப்பு கிடையாது, ஏராளமான சேதங்களை ஏற்படுத்தச் செய்ய முடியும்," என்று தெரிவித்தார்.

நாட்டில் உள்ள தனிமனிதர்களின் மனதில் விசத்தை தெளிக்க ஐ.எஸ். தீவிரவாதம் மற்றும் அல்-கொய்தா இணையத்தை பயன்படுத்துகிறது.அவர்கள் அமெரிக்காவின் நட்பு நாடுகளுக்கும் எச்சரிக்கையாக எழுந்துள்ளனர்.

"இருப்பினும் ஐ.எஸ். தீவிரவாத குழுக்களை அழிக்கவேண்டும் என்பதிலேயே நம்முடைய முழு கவனமும் உள்ளது.

தீவிரவாதிகளுக்கு எதிரான இப்போரானது உலகப்போர் III, தீவிரவாதிகளை வேரோடு அழிக்கப்பட வேண்டும், வீழ்த்த வேண்டும், அழிக்க வேண்டும்," என்று ஒபாமா தெரிவித்தார்.

ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு உதவிகள் கிடைப்பதை தடுக்கவும், அவர்களுடைய சூழ்ச்சிகளை சீர்குலைக்கவும், தீவிரவாத இயக்கத்தில் இணைவதை தடுக்கவும் ஒரு வருடங்களுக்கு மேலாக 60 இற்கும் மேற்பட்ட நாடுகளுடன் அமெரிக்கா கூட்டணி அமைத்துள்ளது. தீவிரவாதிகளுக்கு எதிராக வான்வழி தாக்குதல் நடத்தி வரும் நாம் சுமார் 10 ஆயிரம் குண்டுகளை வீசியுள்ளோம், தீவிரவாத இயக்க தலைவர்கள், அவர்களுடைய ஒயில் விற்பனை, அவர்களுடைய பயிற்சி மையம் மற்றும் ஆயுத கிடங்குகளை குறிவைத்து தாக்குதல் நடத்தியுள்ளோம்.

ஈராக் மற்றும் சிரியாவில் தீவிரவாதிகள் பிடியில் உள்ள பகுதிகளை மீட்க இராணுவப் படையினருக்கு தீவிர பயிற்சியும், ஆயுதமும் வழங்கி உதவிசெய்து வருகிறோம்.

தீவிரவாதிகள் உடனான போரில வெற்றியடைய வேண்டும் என்பதில் அமெரிக்க அரசு தீவிரமாக உளளது, உலகம் மற்றும் நம்முடைய படைகளுக்கு ஒரு செய்தியை தெரிவிக்க விரும்புகின்றேன், நீங்கள் இறுதியாக தீவிரவாதிகளுக்கு எதிராக ஆயுதங்களை பிரயோகிப்பதை ஆதரிப் பீர்கள் என்று ஒபாமா தெரிவித்துள்ளார். (இ-7)

# வடகொரியாவின் அணு ஆயுத பரிசோதனைக்கு சீனா தகுந்த முறையில் பதிலடி தரவேண்டும்

## தென்கொரியா கோரிக்கை



பல்லாயிரம் உயிர்களை ஒரே நேரத்தில் அழிக்கக்கூடிய ஆற்றல் கொண்ட ஐதரசன் குண்டை கடந்த ஆறாம் திகதி வெடித்து பரிசோதித்ததுடன் வடகொரியாவின் அணு ஆயுத பலத்தை மேலும் விரிவுபடுத்துவோம் என அந்நாட்டின் ஜனாதிபதி கிங் ஜாங் உன் அறிவித்துள்ள நிலையில் வடகொரியாவின் அணு ஆயுத பரிசோதனைக்கு சீனா தகுந்த முறையில் பதிலடி தரவேண்டும் என்று தென் கொரியா ஜனாதிபதி பார்க் கியுன்-ஹ்யே கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக, தலைநகர் சியோலில் செய்தியாளர்களுக்கு நேற்று பேட்டியளித்த பார்க், 'சைபர் தீவிரவாதம் உள்ளிட்ட அத்துமீறல்களில் வடகொரியா தொடர்ந்து ஈடுபடுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளன.

எனவே, வட கொரியாவின் அணு ஆயுத பரிசோதனைக்கு தகுந்த முறையில் பதிலடி தரும் வகையில் ஐ.நா. பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினர் என்ற முறையில செயலாற்ற சீனா முன்வர வேண்டும்' என தெரிவித்தார். (இ-7)

# பனிக்கட்டி சிற்பமாகிய கார்

அமெரிக்காவில் நியூயோர்க் மாகாணத்தில் கடும் குளிர் நிலவி வருகிறது. நியூயோர்க்கில் உள்ள பஃபலோ என்ற இடத்தில் கடும்பனிப் பொழிவால் பனிக் கட்டிச் சிற்பமாக தோற்றமளிக்கும் காரை படத்தில் காணலாம்.



# புதிய வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

யாழ். திருமறைக்கலா மன்ற கலைத்துது அழகியல் கல்லூரியில் 2016 ஆம் ஆண்டுக்குரிய புதிய வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதில் பிரதான பாடங்களாக வாய்ப்பாட்டு, நடனம், (பரதம், கதகளி, மோகினி) வீணை, வயலின், புல்லாங்குழல், மிருதங்கம், ஓர்கன் (கீபோட்) கிற்றார், ட்றம், ஒக்ரோபாட், சித்திரம், நாடகமும் அரங்கியலும் போன்றனவும் சிறப்புப் பாடங்களாகக் குத்து, கண்டிய நடனம், யோகாசனம், அழகுக்கலை (முக ஒப்பனை தலை அலங்காரம், சேலை அலங்காரம், தையல், கேக் ஐசிங்) பண்பாடு (கிறிஸ்தவ கலைகள், சைவசித்தாந்தம்) என்பனவும் துணைப்பாடமாக ஆங்கிலக் கற்கை நெறியும் ஆகும்.

எனவே மேற்குறிப்பிட்ட பாடங்களை பயில விரும்புவோர் கலைத்துது அழகியல் கல்லூரியில் விண்ணப்பப் படிவங்களைப்பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறும் இது தொடர்பிலான மேலதிக விபரங்களுக்கு 0212229419 என்ற தொலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொள்ளுமாறும் கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 13.01.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 141.65 | 145.79 |
| பவுண்ட் | பிரிட்டன் | 204.08 | 211.56 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 152.28 | 158.53 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 139.95 | 145.95 |
| டொலர் | கனடா | 98.87 | 103.10 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 98.61 | 103.41 |
| டொலர் | சிங்கப்பூர் | 98.10 | 102.21 |
| ரூபா | இந்தியா | 2.1511 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.7725 |
| குவைத் | டினார் | 473.3904 |
| ஓமான் | ரியால் | 373.2618 |
| கட்டார் | ரியால் | 39.4822 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3202 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1345 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 120 | 110 | 120 | 160 |
| உருளைக்கிழங்கு | 80 | 60 | 45 | 60 | 80 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 350 | 400 |
| தக்காளி | 80 | 60 | 55 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 100 | 120 | 80 | 120 | 140 |
| கரட் | 180 | 160 | 150 | 200 | 250 |
| பூசணி | 60 | 40 | 35 | 80 | 50 |
| புடோல் | 100 | 60 | 70 | 120 | 70 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 110 | 160 | 130 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 65 | 80 | 90 |
| பாகற்காய் | 140 | 160 | 160 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 100 | 160 | 200 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | 60 | 100 | 70 |
| பயற்றங்காய் | 150 | 100 | 120 | 160 | 200 |
| லீக்ஸ் | 140 | 100 | 100 | 120 | 160 |
| பீற்றூட் | 180 | 180 | — | 280 | — |
| கறிமிளகாய் | 300 | 350 | — | 400 | 350 |
| முருங்கைக்காய் | — | — | — | — | — |
| போஞ்சி | 200 | — | 180 | 200 | 250 |
| கத்தரிதம்புள்ள | 120 | — | 90 | 100 | — |
| கீரை - 1 பிடி | 40 | 20 | 35 | 40 | 50 |
| தேசிக்காய் | 100 | 100 | 60 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 30-40 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 200 | 120 | 110 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 220 | 200 | 220 | 280 | 300 |
| முள்ளங்கி | 60 | 60 | 40 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 10 | 30 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 40 | 60 | 40 | 60-80 | 100 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## விடுதலைப்புலிகளுக்கு எம்.ஜி.ஆர் உதவி 79

### எம்.ஜி.ஆர். அழைப்பு

விடுதலைப்புலிகளை முதலமைச்சர் எம்.ஜி.ஆர் சந்திக்க விரும்புவதாக அவர் தெரிவித்தார். நான் தலைமையுடன் கலந்துபேசி பதிலளிப்பதாகக் கூறினேன்.

இதுபற்றி பிரபாகரனுடன் கலந்துபேசினேன். எம்.ஜி. ஆருடன் நடைபெறும் முதல் சந்திப்பில் நமது இயக்கத்தை நன்கு அறிமுகப்படுத்த வேண்டும். இயக்கத்தின் போராட்ட இலட்சியத்தை விளக்க வேண்டும் என்று கூறிய பிரபாகரன், எம்.ஜி.ஆருடனான முதல் சந்திப்பிற்கு என்னைப்போகுமாறு பணித்தார். எம்.ஜி.ஆர் வற்புறுத்தினால் பிறகு அவரைத் தாம் சந்திப்பதாக சொன்னார்.

என் தலைமையில் ஒரு குழுவாகச்சென்று அன்று மாலை எம்.ஜி.ஆரை சந்திப்பதாக முடிவாயிற்று. என்னுடன் விடுதலைப்புலிகளின் மூத்த தலைவர்களில் ஒருவரான பேபி சுப்பிரமணியம் (இளங்குமரன்) சமீபத்தில் வீரச் சாவை எய்தி விட்ட கர்ணல் சங்கர் அன்று விடுதலைப்புலிகள் பத்திரிகையின் ஆசிரியராகப் பணிபுரிந்த நித்தியானந்தன் ஆகியோர் அன்று மாலை முதலமைச்சர் எம்.ஜி.ஆரை அவரது இல்லத்தில் சந்தித்தோம்.


### பிரபாகரன் எங்கே?

மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்பட்ட எம்.ஜி.ஆர் எங்களை அன்புடனும் பண்புடனும் வரவேற்றார். முதலில் எங்களை அறிமுகம் செய்து கொண்டோம். உங்கள் தலைவர் பிரபாகரன் வரவில்லையா? அவரை சந்திக்க நான் ஆவலாக இருப்பதாக சொல்லுங்கள் என்றார்.

அவர் சென்னைக்கு வெளியே ஒரு பயிற்சிப் பாசறைக்கு அவசர அலுவலாக சென்றிருக்கிறார். அடுத்த தடவை நிச்சயமாக அவரை அழைத்து வருவோம் என்றேன்.

ஈழ விடுதலைப் போராளிகள் ஐந்து அமைப்புக்களாக ஏன் பிளவுபட்டு நிற்க வேண்டும்? ஒரே அணியில் ஒன்று சேர முடியாதா? என்று கேட்டார் எம்.ஜி.ஆர்.

ஒற்றுமைக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல. ஓர் உறுதியான தெளிவான இலட்சியத்தின் அடிப்படையில்தான் போராளி அமைப்புக்கள் ஒன்றுசேர முடியும். ஆனால், விடுதலைப்புலிகளுக்கும் ஏனைய அமைப்புகளுக்கும் மத்தியில் கருத்து வேறுபாடுகள் நிறைய உண்டு. நடத்தையும் வேறுபாடு உண்டு. விடுதலைப் புலிகள் தனித்துவமானவர்கள். தனித்துவப் பண்பியல்பு கொண்டவர்கள். ஒழுக்கம், கண்ணியம், கட்டுப்பாடு போன்ற உயரிய பண்புகளை இறுக்கமாகப் பேணுபவர்கள்.



சாவுக்குத் துணிந்தவர்கள். எதிரியின் கையில் உயிருடன் சிக்காதிருக்க நஞ்சுக்குப்பிகளை அணிந்திருப்பவர்கள். தமிழீழத் தாயக விடுதலை என்ற இலட்சியத்துக்காக தமது உயிரையும் அர்ப்பணிக்க தயாரானவர்கள். இந்த அற்புதமான பண்புகளும் இலட்சிய உறுதிப்பாடும் ஏனைய அமைப்பினரிடம் காணமுடியாது என்று விளக்கினேன்.

மௌனமாக ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்டிருந்தார் எம்.ஜி.ஆர். விடுதலைப் புலி வீரர்கள் கடைப்பிடிக்கும் பண்பியல்புகள் அவரை வெகுவாக கவர்ந்தன.

### கொள்கை என்ன?

விடுதலைப்புலிகளின் கொள்கை என்ன? அரசியல் சித்தாந்தம் என்ன? விடுதலைப்புலிகள் கம்யூனிசத் தீவிரவாதிகள் என்று என் அமைச்சர் ஒருவர் சொல்கிறாரே அது உண்மையா? என்று கேட்டார் எம்.ஜி.ஆர்.

விடுதலைப்புலிகள் கம்யூனிஸ்டுகள் அல்ல. விடுதலைப்புலிகள் புரட்சிவாளிகள், சுதந்திரப்போராளிகள். தமது தாயமான தமிழீழத்தின் சுதந்திரத்திற்காக போராடுபவர்கள். சாதியக்கொடுமை, பெண் அடிமைத்தனம் மற்றும் சமூக முரண்பாடுகள் நீங்கிய சமத்துவமும் சமூக நீதியும் நிலவும் ஓர் உன்னதமான சுதந்திரமான சமுதாயத்தைப் படைக்கவே நாம் போராடுகிறோம். இப்படியான எமது புரட்சிகர கொள்கையைப் புரிந்து கொள்ளாமல் எம்மைக் கம்யூனிஸத் தீவிரவாதிகள் என்று சிலர் தவறாக கருதக்கூடும். ஏழைகளின் சுபீட்சத்திற்காகவும் ஒடுக்கப்படும் மக்களின் விடிவிற்காகவும் நாம் ஆயுதம் ஏந்தி போராடுகிறோம். ஏழைகளின் நண்பனாக, தொழிலாளர்களின் தோழனாக, நசுக்கப்படும் மக்களின் நாயகனாக, நீங்கள் திரையுலகில் நடித்து தமிழ் நாட்டில் சமூக விழிப்புணர்வைக் கட்டியெழுப்பவில்லையா? இதனால் தமிழ் மக்களின் இதயங்களில் ஒரு நிரந்தரமான இடத்தைப் பிடிக்கவில்லையா? இன்னும் தமிழகத்தின் முதல்வராக உயர் பதவி வகிக்கும் நீங்கள் ஏழைகளின் துயர் துடைக்கத் தொண்டாற்றவில்லையா? நீங்கள் சினிமா உலகில் சாதித்ததை விடுதலைப் புலிகள் நிய உலகில் சாதிக்கிறார்கள் என்று விளக்கினேன்.



(தொடரும்)

# இராணுவத் தளபதிக்கு எதிரான வழக்கு குறித்து எதுவும் தெரியாது

## பாதுகாப்புச் செயலாளர் கூறுகிறார்

(கொழும்பு)

**இராணுவத் தளபதி கிருஸாந்த டி சில்வாவிற்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளமை பற்றி தமக்கு எதுவும் தெரியாது என பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார். இவ்வாறு வழக்குத் தொடரப்படவுள்ளதாக இதுவரையில உத்தியோகபூர்வமாக எவ்வித அறிவிப்புக்களும் கிடைக்கப்பெறவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.**



இராணுவத்திற்கு சேறு பூசும் நோக்கில் எவரும் செயற்படுகின்றார்களா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் ஜனாதிபதியை தெளிவூட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றேன் என பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளாா.

இராணுவத் தளபதிக்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளதாக வெளியான தகவல்கள் குறித்து சிங்கள பத்திரிகையொன்று பாதுகாப்புச் செயலாளரிடம் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது இதனைத் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போன சம்பவம் தொடர்பிலான விசாரணைகளுக்கு இராணுவம் உரிய வகையில் ஒத்துழைப்பு வழங்கத் தவறினால் இராணுவத் தளபதிக்கு எதிராக வழக்குத் தொடர முடியும் என ஹோமாகம நீதவான் தெரிவித்திருந்தார் என ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிக்குகள் சோதிடம் பார்க்க தடை விதிக்கப்படவுள்ளது

இலங்கையில் பௌத்த பிக்குகள் சோதிட எதிர்வு கூறல்களை வெளியிடத் தடை விதிக்கப்படவுள்ளது.

பௌத்த பிக்குகள் ஜோதிட எதிர்வு கூறல்களை வெளியிடவும், அது தொடர்பிலான விளம்பரங்களை செய்யவும் தடை விதிக்கும் வகையிலான சட்டங்களை விரைவில் அறிமுகம் செய்ய அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

வர்த்தக, வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுதல், சாரதி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளல், வாகனம் செலுத்துதல் ஆகியன உத்தேச புதிய சட்டத்தில் தடை செய்யப்படவுள்ளது.

புதிய சட்டத்தின் அடிப்படையில் சமூக சேவைகளில் ஈடுபடுதல், சமய மற்றும் கல்வி நடவடிக்கைகளில் மட்டுமே பௌத்த பிக்குகள் ஈடுபட முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பகிரங்க இடங்களில் பௌத்த பிக்கு ஒருவருக்கு உசிதமாகா வகையில் நடந்து கொள்ளவும் கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான தவறுகளை இழைக்கும் பௌத்த பிக்குகள், பிக்குகளுக்கான நீதிமன்றில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தண்டிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குற்றம் இழைக்கும் பௌத்த பிக்குகள், பிக்கு அந்தஸ்தை இழக்க நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.

பௌத்த பிக்குகளின் நீதிமன்ற தீர்ப்பினை ஏற்றுக் கொள்ளாத பௌத்த பிக்குகளுக்கு 50,000 ரூபா அபராதமும், ஓராண்டு கால சிறைத்தண்டனையும் விதிக்கப்படக் கூடிய வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

பௌத்த பிக்குகளுக்கான புதிய சட்டம் உருவாக்கும் உத்தேச யோசனை நேற்று முன்தினம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் சில பௌத்த பிக்குகள் வானொலி தொலைக்காட்சிகளில் விளம்பரம் செய்து ஜோதிட ஆலோசனைகள் மற்றும் வசிய மாந்திரீகங்களை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான சேவைகளை வழங்க பெருந்தொகை பணம் அறவீடு செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# புத்த பிக்குகளுக்காக சட்டம் போடுவது நகைப்பிற்குரியது

## எல்லே குணவன்ச தேரர்

நாட்டின் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டாது பௌத்த பிக்குகளுக்காக சட்டம் போடுவது நகைப்பிற்குரியது என கொழும்பு 7, தர்ம நிறுவனத்தின் தலைவர் எல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சட்டங்களை உரிய முறையில் நிறுவாது, பௌத்த பிக்குகளை வழிநடத்த சட்டம் இயற்றுவது நகைப்பிற்குரியதாகும்.

அரசாங்கம் எவ்வாறான சட்டங்களை கொண்டு வந்தாலும், மூன்று பீடங்களினதும் தலைவர்களினதும் சங்க சபையினதும் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய தரப்பினரும் சட்டத்தை மீறிச் செயற்படுகின்ற நிலையில், சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. மஹா சங்கத்தினருக்கு துன்புறுத்தல்களை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டால் இந்த சட்டம் அமுல்படுத்தப்படலாம். போலி நோக்கங்களின் அடிப்படையில் செயற்படும் பௌத்த பிக்குகளுக்கு எதிராக சட்டம் அமுல்படுத்தப்படுவதற்கு நான் தடை போடவில்லை.

எனினும், கஷ்டப் பிரதேச கிராமங்களில் மக்களுக்காக சோதிடக் கணிப்புக்களை மேற்கொள்ளும் பௌத்த பிக்குகளுக்கு அதற்கான சந்தர்ப்பம்இருக்கவேண்டுமெனஎல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார். பௌத்த பிக்குகள் சோதிடம் பார்க்க தடை விதிக்கும் வகையில் சட்டம் இயற்ற அரசாங்கம் எடுத்து வரும் முயற்சிகள் குறித்து கருத்து வெளியிட்ட போது அவர் இதனைக் தெரிவித்தார். (இ-7)

# புதிய அரசை உருவாக்குவதற்கு உறுதுணையாக இருந்தது நாமே

## பிரஜைகள் சக்தி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தற்போது இருக்கக்கூடிய அரசாங்கத்தை உருவாக்குவதற்கு அடித்தளம் இட்டது நாம் என பிரஜைகள் சக்தி அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற பல்வேறு மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து நாட்டின் நல்லாட்சியை அமைப்பதற்கு இன்று போல் என்றும் நாம் உறுதுணையாக இருப்போம் என்றும் பிரஜைகள் சக்தி அமைப்பு ஏற்பாட்டாளர் ஜயநாத் ரஞ்சன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற பிரஜைகள் சக்தி மாநாட்டில் புதிய அரசியல் திருத்தம் பற்றியும் நாட்டின் எதிர்காலப் பயணம் பற்றியும் பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. புதிய அரசியல் சீர் திருத்தத்தை சில அரசியல் எதிர்க்கட்சி சக்திகள் மதவாத ரீதியாக மக்களுக்கு எடுத்துக் காட்டுகின்றது.

போலிப் பிரசாரங்களை மேற்கொண்டு நாட்டில் நிலவுகின்ற சுமுகமான ஒரு சூழலை சீர்குலைப்பதற்கு கடும் போக்கு மதவாதிகள் செயற்படுகின்றனர் எனவும் இதன்போது கருத்து தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## நம் பங்கு என்ன?

நாமும் இன்னொருவரும் சம்பந்தப்பட்ட ஒரு விடயத்தில் தவறு நடந்து விட்டால் உடனே அவருடைய செயல்முறைகளில் நடந்த குறைகளைச் சுட்டிக்காட்டிவிட்டு நாம் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறோம். என்னவோ நம்முடைய பங்கில் ஒரு சிறிதும் தவறில்லை என்பதுபோல்!

எந்தத் தவறு நடந்தாலும் நமக்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எல்லாவற்றிற்கும் எதிராளிதான் காரணம் என்றும் சொல்லிக் கழற்றிக் கொண்டு விடுகிறோம்.

ஒரு வேலைக்காரரிடம் ஒரு மருந்தின் பெயரைச் சொல்லி வாங்கிவரச் சொல்கிறோம். ஆனால், அவரோ வேறு ஒரு மருந்தை வாங்கி வருகிறார். அது ஒரு குழந்தைக்குக் கொடுக்கப்பட்டும் விடுகிறது. விடயம் சீரியஸ் ஆகி விடுகிறது!

நாம் வேலைக்காரரை கடிந்து கொள்கிறோம். அதுமட்டுமல்ல அவரால்தான் விடயம் சீரியஸாகிவிட்டது என்று பலரிடம் சொல்கிறோம். அவர் தலையைக் குனிந்து கொண்டு போய்விடுகிறார்.

இந்த நிலையில், நாம் ஓர் அடிப்படையான உண்மையை உணராதவர்களாக இருக்கிறோம்.

அதாவது, தவறு நம்முடையது என்பதே!

டாக்டரின் மருந்துச் சீட்டு இல்லாமல் நாமாக வாங்கிவரச் சொன்னது, முதல் குற்றம்.

அப்படியே வாங்கிவரச் சொன்னாலும், அதைச் சீட்டில் எழுதிக் கொடுக்காமல் வாய் வார்த்தையாகச் சொன்னது இரண்டாவது குற்றம் .

அக்குழந்தைக்கு மருந்தைக் கொடுக்கும் முன்னர் வாங்கி வரப்பட்ட மருந்து சரியானது தானா என்று பார்க்காமல் போனது, மூன்றாவது தலையாய குற்றம்!

ஆக,

எய்தவன் இருக்க அம்பை நோவானேன்? என்பது போல், நம்முடைய தவறுகளையெல்லாம் மறைத்துக் கொண்டு அந்த வேலைக்காரர் மீது குற்றத்தைச் சுமத்துகிறோம்.

என் வாழ்வில் நடந்த ஒரு சம்பவத்தை இங்கு கூறுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

அப்போது நான் பள்ளி மாணவன். சினிமா பார்ப்பதில் ஆர்வம் அதிகம் இப்போதுந்தான் சில சமயங்களில் சென்னைக்கு அருகே உள்ள தாம்பரத்தில் நல்ல நல்ல ஆங்கிலப்படங்களைக் காலைக் காட்சிகளாக வெளியிடுவார்கள்.

நான் மின்சார ரயிலில் தாம்பரத்துக்குச் சென்றேன்.

ரயில் நின்றதும் தாம்பரம் என்பதை உணர்ந்து கொண்டேன். தியேட்டரை அடைய இரண்டு வழிகள் இருந்தன. இடப்புறமுள்ள பிளாட்பாரத்தின் மூலம் இரும்புப் பாலத்தின் மீது ஏறி இறங்குவது. இது எல்லோரும் பின்பற்றும் வழி.

வலப்புறத்தில் குதித்து வேலிக்குள் புகுந்து விரைவாகச் சென்று விட ஒரு வழி. அவசரமென்பதால் வேலிச்சந்தை நோக்கி நடந் தேன்.

வேலியை எட்டுவதற்குள்.

புளிச்.

ஒரு புட்டிச் சிவப்பு மையைக் கொட்டியது போல் உடம்பெல்லாம் வெற்றிலைப் பாக்கின் கழிசல்!

எரிச்சலுடன், துப்பியவர் முகத்தைப் பார்த்தேன்.

வயதானவர் அவர் முகத்தில் பரிதாபம் இழையோடியது. எனக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

இளமை வேகம். கண்ட படி திட்டி விட்டு ஓடி விடலாமா?

ரயில் பாதையில் கிடக்கும் கற்களுள் ஒன்றை எடுத்து வீசலாமா?

மீண்டும் ஒரு முறை சட்டையைப் பார்த்துக் கொண்டேன். அந்தச் சிவப்பு நிறத்தில் எண்ணங்களை ஓட விட்டேன்.

முறையாகப் படிக்கட்டுகளின் வழியாகச் சென்றிருக்க வேண்டும். நான் அவ்வாறு செய்யவில்லை. அவரும் என் மீது துப்ப வேண்டும் என்ற எண்ணத்துடன் துப்பவில்லை. வலப்பக்கம் யார் வரப்போகிறார்கள் என்ற நம்பிக்கையில் துப்பியிருக்கிறார். தவறு என்னுடையதுதான்.

வாயை மூடிக் கொண்டு வீட்டிற்குத் திரும்பினேன்.

சினிமா?

சினிமாவாவது கினிமாவாவது! யார் கண்ணிலும் படாமல் வீடு போய்ச் சேர்ந்தால் சரி என்ற எண்ணமே மேலோங்கி நின்றது.

பிறர் மீது பழியைப் போட்டு விட்டுத் தப்பித்துக் கொள்ளும் மனப்பான்மை இருக்கும் வரை நம்முடைய குற்றங்கள் பெருகிக் கொண்டே போகின்றன.


இதனால் நாம் குறைபாடுகளின் குன்றாக ஆகி விடுகிறோம்.

நடந்த தவறில் நம் பங்கு என்ன என்று எண்ணத் தொடங்கும் போது தான் அதைக் களைய முயல்கிறோம்.

இதுவே நம் முன்னேற்றத்துக்கான முதல் அறி குறி.

லேனா தமிழ்வாணன்






# சிறுவர் அரங்கம்



1333

## புத்தியா சொல்றே?



கணேஷ் ஆர்வமாக புத்தகம் படித்துக் கொண்டிருந்தான். அப்போது அவன் நண்பன் ராஜா அங்கு வந்து அவனருகில் அமர்ந்தான்.

என்ன கணேஷ்! ரொம்ப மும்முரமா படிச்சிகிட்டு இருக்கே? அரையாண்டு தேர்வுகள் நெருங்கிடுச்சே! அதுக்கு தயார் ஆகிறாயா? என்று வினவினான் ராஜா.

ஆமாண்டா! அதுக்குத்தான் முழுவீச்சில் படிச்சிகிட்டு இருக்கேன்! இந்த முறை உன்னை விட அதிக மதிப்பெண் வாங்கிடனும்னு உறுதியா இருக்கேன்!

ரொம்ப சந்தோஷம்டா! படிப்பில இப்படி போட்டி இருந்தாத்தான் நல்லா படிக்கணுங்கிற உத்வேகம் வரும். யாரு முதல் மதிப்பெண் எடுக்கிறதுன்னு ஒரு சவால் இருக்கும். ஆமா! நீ எந்த சப்ஜெக்ட் இப்ப படிச்சிகிட்டு இருக்கே? நானும் ரிவிசன் பண்ண உதவறேனே! என்றான் ராஜா.

கணேஷ் ராஜாவை மிதப்புடன் பார்த்தான். ராஜா! நீ நினைக்கிறா மாதிரி நான் இப்ப எந்த சப்ஜெக்டையும் படிக்கலை ஆனா அதை விட முக்கியமான ஒண்ணை படிச்சிகிட்டு இருக்கேன்!

அப்படி என்ன முக்கியமானது அது!

இதுதான்! என்று கணேஷ் நீட்டிய புத்தகத்தை வாங்கி பார்த்தான் ராஜா! அது பரிட்சையில் முதல் மதிப்பெண் பெறுவது எப்படி? என்ற புத்தகம். அதை பார்த்துவிட்டு ராஜாவிற்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை! ஏன் கணேஷ்! இந்த புத்தகத்தை படிச்சா மதிப்பெண் தானா வந்துவிடுமா? நம்மளோட முயற்சியும் உழைப்பும் இருந்தா எளிதா முதல் மதிப்பெண் வாங்கிடலாம். அதை விட்டு இப்படி இந்த புத்தகத்தை போய் நம்பறியே?

டேய்! உனக்கு நான் முதல் மதிப்பெண் வாங்கிடுவேன்னு பொறாமை! அதனாலத்தான் இப்படி சொல்றே?

கணேஷ்! என்னைப் போய இப்படி சொல்லிட்டியே! நீ முதல் மதிப்பெண் வாங்கினா! நான்தான் அதிக சந்தோஷம் அடைவேன். ஆனா முதல் மதிப்பெண் பெற நீ தேர்ந்தெடுக்கிற வழி சரியில்லை! இந்த புத்தகத்தை படிக்கிற நேரத்துல நீ நம்ம பாடப்புத்தகத்தை ஒழுங்கா படிச்சாலே நல்ல மார்க் வாங்கிடலாம்! இதையேத்தான் இந்த புத்தகத்திலேயும் சொல்லி இருப்பாங்க! முதல்ல இதை மூடி வைச்சிட்டு பாடப்புத்தகத்தை படி!

பெரிய புத்தரு இவரு! புத்தி சொல்ல வந்துட்டாரு! உன்கிட்ட சொன்னேன் பாரு! என்னை ஜோட்டாலே அடிச்சிக்கிணும்! நீ உன் வழியை பாரு! நான் என் வழியை பார்க்கிறேன்! என்றான் கோபமாக கணேஷ்.

இவனை திருத்த முடியாது என்று அங்கிருந்து மௌனமாக அகன்றான் ராஜா. கணேஷ் மீண்டும் புத்தகத்தில் ஆழ்ந்தான்.

அரையாண்டுத் தேர்வுகள் முடிந்து திருத்திய விடைத்தாள்களுடன் ஆசிரியர் உள்ளே நுழைந்தார். கணேஷ் மிகவும் ஆர்வமாக இருந்தான். எப்படியும் ராஜாவை முந்தி விட வேண்டும் என்று இருந்தான் அவன். ஆனால் அந்தோ பரிதாபம்! சென்ற தேர்வை விட இந்த தேர்வில் அனைத்து பாடங்களிலும் ஐந்து முதல் பத்து மதிப்பெண்கள் குறைவாக வாங்கி இருந்தான். வழக்கம் போல ராஜாவே வகுப்பில் முதல் மாணவனாக இருந்தான்.

கண்ணீருடன் கணேஷ் ராஜாவிடம் வந்தான். ராஜா! நீ சொன்ன மாதிரியே நடந்து போச்சு! அந்த புத்தகம் சுத்த வேஸ்ட்! அதை படிச்சி மார்க் குறைஞ்சி போனது தான் மிச்சம் என்றான்.

கணேஷ்! குறை அந்த புத்தகத்தில இல்லை! உன்கிட்டதான்! அந்த புத்தகத்தில மார்க் எடுக்கிற வழிமுறைகளை சொல்லி இருப்பாங்க! அந்த புத்தகத்தை படிச்ச நீ அந்த வழிமுறைகளை பின்பற்ற தவறிட்டே! இதையேத்தான் நானும் சொன்னேன். அன்றைய பாடங்களை அன்றே படித்து தேர்வு சமயத்தில் மீண்டும் ரிவிசன் செய்தாலே போதும் மார்க்கை அள்ளிடலாம். ஆனா நீ அவ்வாறு செய்வதில்லை!

தேர்வு சமயத்தில் தான் படிப்பாய்! இந்த முறை அதுவும் சரியாக படிக்கவில்லை! அந்த அதிக மதிப்பெண் பெறுவது எப்படி என்ற புத்தகத்தையே படித்துகிட்டு இருந்தாய். நம்முடைய முயற்சிதான் நமக்கு வெற்றி தரும். முயற்சியே இல்லாமல் வெற்றி தேடி வரும் என்று காத்திருந்தால் தோல்விதான் பரிசாக கிடைக்கும் என்றான் ராஜா.

உண்மைதான் ராஜா! இதை நான் உணராம உன்னையும் தப்பா பேசிட்டேன்! என்னை மன்னிச்சிருடா!

நண்பர்களுக்குள் எதற்கு கணேஷ் மன்னிப்பு! இனியாவது அன்றாடம் பாடங்களை படித்து இறுதி தேர்வில் என்னை முந்திக் காட்டு! அதுவே நீ எனக்கு செய்யும் மன்னிப்பு என்றான் கணேஷ்.

நிச்சயமா ராஜா! கண்டிப்பாக இனிமே நான் அன்றாட பாடங்களை அன்றாடம் படித்து அடுத்த தேர்வில் முதலிடம் வருவேன் என்றான் கணேஷ்.




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



- 1539 - ஸ்பெயின் கியூபாவை இணைத்துக்கொண்டது.
- 1690 - கிளாரினெட் இசைக்கருவி ஜேர்மனியில் வடிவமைக்கப்பட்டது.
- 1724 - ஸ்பெயின் மன்னன் ஐந்தாம் பிலிப் முடி துறந்தான்.
- 1761 - இந்தியாவில் பானிப்பட் போரின் மூன்றாம் கட்டம் ஆப்கானியர்களுக்கும் மராட்டியர்களுக்குமிடையில் இடம்பெற்றது. ஆப்கானியர்களின் வெற்றி இந்திய வரலாற்றில் ஒரு பெரும் திரு ப்புமுனையாக அமைந்தது.
- 1784 - அமெரிக்கப் புரட்சிப் போர்: ஐக்கிய அமெரிக்கா இங்கிலாந்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டது.
- 1814 - நோர்வேயை டென்மார்க் மேற்கு பொமிரானியாவுக்காக சுவீடனுக்கு விட்டுக்கொடுத்தது.
- 1858 - பிரான்ஸ் மன்னன் மூன்றாம் நெப்போலியன் கொலைமுயற்சி ஒன்றிலிருந்து தப்பினான்.
- 1913 - கிரேக்கம் துருக்கியரை பிசானி என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் வென்றனர்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: பிராங்கிளின் ரூசவெல்ட், வின்ஸ்டன் சேர்ச்சில் கசபிளாங்காவில் சந்தித்து போரின் அடுத்தகட்ட நகர்வுக்கான தீர்மானங்களை எடுத்தனர்.
- 1950 - சோவியத் ஒன்றியத்தின் மிக்-17 போர் விமானம் வெள்ளோட்டம் விடப்பட்டது.
- 1974 - திருச்சி, தஞ்சை மாவட்டங்களிலிருந்து பிரித்து புதுக்கோட்டை மாவட்டம் உருவாக்கப்பட்டது.
- 1994 - ஐக்கிய அமெரிக்கத் தலைவர் பில் கிளிண்டன மற்றும் ரஷ்யத் தலைவர் போரிஸ் யெல்ட்சின் கிரெம்ளினில் புதிய பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டனர்.
- 1995 - சந்திரிகா அரசு - விடுதலைப்புலிகள் 3 ஆம் கட்ட பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின.
- 1996 - உலகின் முதலாவது 24 மணி முழு நேர தமிழ் வானொலி ஒலிபரப்பு, "கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்" என்னும் பெயரில் கனடாவின் டொராண்டோ நகரில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.
- 2005 - சனிக் கோளின் டைட்டான் என்ற நிலாவில் ஐரோப்பாவின் இயூஜென் விண்கலம் இறங்கியது.

### பிறப்புகள்

- 1977 - நாராயண் கார்த்திகேயன், கார் பந்தய வீரர்
- 1960 - ஜெ. வீரநாதன், தமிழக எழுத்தாளர்

### இறப்புகள்

- 1898 - லூயி கரோல் ஆங்கில எழுத்தாளர், கணிதவியலாளர் (பி. 1832)
- 1901 - சார்ல்ஸ் ஹெர்மைட், பிரெஞ்சு கணிதவியலாளர் (பி. 1822)
- 1957 - ஹம்பிறி போகார்ட், அமெரிக்க நடிகர் (பி. 1899)
- 1978 - கியோடல், ஆஸ்திரிய அமெரிக்க, கணித, மெய்யியல் அறிஞர் (பி. 1906)
- 2000 - எம். வி. வெங்கட்ராம், தமிழக எழுத்தாளர் (பி. 1920)

# பாலியல் வன்முறைகளை ஒழிக்கும் பிரகடனத்தில் இலங்கை கைச்சாத்து

(கொழும்பு)

**போரின் போது பாலியல் வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வரும் பிரகடனத்தை இலங்கை நேற்று கைச்சாத்திட்டுள்ளது.**


2013ஆம் ஆண்டு செப்டெம்பர் 25ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் நியூயோர்க் தலைமையகத்தில் 122 நாடுகள் இந்த பிரகடனத்தை ஏற்றுக் கொண்டன.

இந்த நிலையில் குறித்த பிரகடனத்தை நேற்று 155 நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த இலங்கையின் வெளிவிவகார அமைச்சு, இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாத்தல், பாலியல் வன்முறைகளை தடுத்தல் போன்ற விடயங்களில் இலங்கை அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்று தெரிவித்துள்ளது.

பாலியல் வன்முறைகள் சமாதானத்துக்கும் அபிவிருத்திக்கும் பங்கம் விளைவிக்கக்கூடியது என்ற அடிப்படையில் பிரகடனத்தில் இலங்கை கைச்சாத்திட்டதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (இ-7)

## ஒன்லைன் மூலம் வீட்டு மின்வாசிப்பை அறிவதற்கு ஸ்மாட் மீற்றர் அறிமுகம்




மின்சக்தி பாவனையை அளவிடுவதற்கு இலங்கை மின்சார சபையினால் புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள ஸ்மாட் மீற்றர் மூலம் அதி கூடிய மின்சக்தி பாவனை நேரங்களைத் தவிர்த்து ஏனைய நேரங்களில் மின்பாவனையாளர்கள் மின்சக்தியைப் பயன்படுத்தினால் குறைந்த ளவான மின்கட்ட ணங்கள் அறவிடப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

தற்போது நடைமுறையில் உள்ள முறையின் கீழ் பாவிக்கப்பட்ட மின்சக்தியை அடிப்படையாகக் கொண்டு வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ மாதாந்தம் மின் கட்டணம் அறவிடப்படுகின்றது.

இந்தப் புதிய திட்டத்தின் கீழ் வீடுகள் மற்றும் சிறிய தடுத்தரக் கைத்தொழில் முயற்சியாளர்கள் இந்தப் புதிய திட்டம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் வெற்றியின் ஒருவருட நிறைவை முன்னிட்டு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அமெரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இந்த வருடம் மந்தமான பொருளாதார வளர்ச்சி தொடர்பாக எதிர்வு கூறப்பட்டுள்ள போதும் இலங்கையில் மின் கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டாது எனவும் மின்சக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார். (3)

# தைப்பொங்கல்; உழவர்விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையினால் வருடாந்தம் தைப் பொங்கல் தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் உழவர் விழா நாளை மறுதினம் 16 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் மு. இராசநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் விசேட நிகழ்வுகளாக மக்கள் பாடல்கள் இசைக்கப்படவுள்ளதுடன், வடலியடைப்பு கலைவாணி கலை மன்றத்தினரின் கிராமியப் பாடல் நிகழ்வும், ""இன்றைய நாகரிக வளர்ச்சி பலமானதா? பலவீனமானதா?"" என்ற தலைப்பில் அமைந்த விவாத அரங்கும் ச. முகுந்தன் தலைமையில் இடம்பெறவுள் ளது.


இதில் மாணவர்களான பரமசிவம் கபிலன், குருபரன் குவிந்தன், ஜெயராஜன் பபிஜனா, ஆனந்தகுமார் கபிலாயன், இராசேந்திரன் சாகித்தியன், கிருபானந்தன் தசாங்கி, இராஜேஸ்கண்ணா கார்த்திகாயினி, இரவீந்திரன் கஜானன் ஆகியோர் விவாதிகளாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து "நிற்க அதற்குத் தக" என்ற தலைப்பில் கவியரங்கம் நிகழ்வு இடம்பெறவுள்ளது. சட்டத்தரணி சோ. தேவராஜா தலைமையில் நடைபெற்ற கவிஞர்கள் எஸ்.கே.கணேசவேல், அழ.பகீரதன், க.சிவகரன், திருமதி.ஸ்ரீலேக்கா பேரின்பகுமார், ம. ஜெயபாலன் ஆகியோரின் பங்குபற்றலுடன் இடம்பெறவுள்ளது. (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 603

Search for people, places and things — Nagendram Home


**சர்மிலா**





**சுதாகர்**




**நந்து**




**சிவதர்சிகா**



**நிலவன்**



**சந்திரன் சிந்துஜா**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மனித உரிமை மீறல்களை தொடர்ந்து அனுமதிக்கும் இலங்கை

இலங்கையின் முன்னைய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்ற மீறல்கள் தொடர்பான உள்ளக விசாரணை பக்கச்சார்புடையதாகவும் வினைத்திறனற்றதாகவும் காணப்பட்ட போதே அனைத்துலக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அழுத்தம் அதிகரித்தது.

**இவ்வாறு பிரித்தானியாவின் The Guardian நாளிதழில், Jason Burke எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனை மொழி யாக்கம் செய்துள்ளார் நித்தியபாரதி.**

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பொறுப்பேற்று ஒரு ஆண்டு ஆகிய பின்னரும் கூட, சித்திரவதைகள், சட்ட ரீதியற்ற தடுப்பு போன்ற பல்வேறு மீறல்கள் இலங்கையில் தொடர அனுமதிக்கப்படுவதாக இலங்கை அதிகாரிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த 12 மாதங்களில் இடம்பெற்ற 27 தனிப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக அனைத்துலக பரப்புரையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டியங்கும் 'சித்திரவதைகளிலிருந்து விடுதலை' என்கின்ற அமைப்பானது சித்திரவதைகளுக்கு உள்ளாகியவர்களுக்கு மருத்துவம் சார் உதவிகளை வழங்கி வருகின்றது.

இந்த நிறுவனமானது சித்திரவதைகளுக்கு உள்ளாகிய எட்டுப் பேரின் முறைப்பாடுகளை ஆராய்ந்துள்ளது. பாதிக்கப்பட்ட எட்டுப் பேரும் இலங்கையைச் சேர்ந்த சிறுபான்மைத் தமிழ் சமூகத்தவர்களாவர். இலங்கையின் புலனாய்வு மற்றும் இராணுவ அதிகாரிகளே தம்மை சித்திரவதைகளுக்கு உள்ளாக்கியதாக பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

இலங்கை 26 ஆண்டு கால கொடிய யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஒரு தீவாகும். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரச படைகளுக்கும் இடையிலான யுத்தம் பல ஆண்டுகளாகத் தொடரப்பட்டு 2009இல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷ, கடந்த ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் தோல்வியடைந்தார். இலங்கையில் வாழும் சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தையும் சீர்திருத்தத்தையும் ஏற்படுத்துவதாக, ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன வாக்குறுதி வழங்கியிருந்தார்.

குறிப்பாக இவர் தனது கன்னி உரையில் இலங்கையில் இடம்பெறும் கடத்தல் சம்பவங்களை முடிவுக்குக் கொண்டு வருவதாக வாக்குறுதி வழங்கியிருந்தார்.

தனது நாட்டில் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு போரின் போது இடம்பெற்ற பல்வேறு மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பளிக்க வேண்டும் என்பதில் மைத்திபால சிறிசேன உறுதியாக நிற்பதானது வரவேற்கத்தக்க மாற்றம் என 'சித்திரவதைகளிலிருந்து விடுதலை' அமைப்பின் கொள்கை மறறும் ஆதரவிற்கான இயக்குனர் சொன்யா சீற்ஸ் தெரிவித்துள்ளார்.

'இவ்வாறான புதிய மாற்றங்களை மேற்கொள்ளும் இலங்கையில் ஜனாதிபதி இலங்கையின் பாதுகாப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் சித்திரவதைகளை முற்றாக ஒழிப்பதற்கான தெளிவான கோட்பாட்டை வரையறுப்பதுடன் இவ்வாறான குற்றங்களில் ஈடுபடுவோருக்கு கடுமையான தண்டனைகளையும் வழங்க வேண்டும்' என சொன்யா சீற்ஸ் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்த பின்னர் இலங்கை இராணுவம் மற்றும் புலனாய்வுத் துறைகளைச் சேர்ந்தவர்களால் அந்நாட்டில் வாழும் தமிழ் மக்கள் மீது எவ்வாறான சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை தனது மருத்துவ ஆதாரங்கள் மூலம் உறுதிப்படுத்துவதாக 'சித்திரவதைகளிலிருந்து விடுதலை' என்ற அரச சார்பற்ற நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் போருக்குப் பின்னான காலப்பகுதியில் தொடரப்பட்ட 'அரச சித்திரவதை இயந்திரமானது' தற்போதும் மக்கள் மீது தனது சித்திரவதைகளை மேற்கொண்டு வருவதாக இந்த அமைப்பு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான பல்வேறு ஆதாரங்கள் உள்ள போதிலும் தாம் எவ்வித மனித உரிமை மீறல்களிலும் ஈடுபடவில்லை என இலங்கை இராணுவத்தினரும் காவற்துறையினரும் கூறுகின்றனர்.

'சித்திரவதைகளிலிருந்து விடுதலை' என்ற அமைப்பால் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பாதிக்கப்பட்டவர்களில் இருவர் வவுனியாவின் வடக்கிலுள்ள இராணுவ முகாமில் வைத்து சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டமை ஆதாரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இராணுவ முகாமானது இலங்கை இராணுவத்தின் தடுப்பு மற்றும் சித்திரவதைக் கூடமாக இயங்கி வருவதாகவும் இதில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

காடுகளில் அமைக்கப்பட்ட தற்காலிக முகாம்களில் வைத்து தாம் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டதாக இதில் பாதிக்கப்பட்ட ஏனையவர்கள் கூறுகின்றனர். இவர்களில் பலர் சித்திரவதைகளின் போது நெருப்பில் காய்ச்சப்பட்ட சூடான இரும்புக் கம்பிகளால் தாக்கப்பட்டுள்ளனர். அத்துடன் சிலர் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர். இவற்றை பாதிக்கப்பட்டவர்களின் உடல்களில் காணப்படும் வடுக்கள் மூலம் உறுதிப்படுத்துவதாக இந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் அடிக்கடி இடம்பெற்ற 'வெள்ளை வான்' கடத்தல்கள் தற்போதும் இலங்கையில இடம்பெறுவதாகவும் கடந்த மாதமும் கடத்தல் சம்பவம் இடம்பெற்றதாகவும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இனந்தெரியாதவர்கள் வெள்ளை வான்களில் வந்து இவ்வாறான கடத்தல்களை மேற்கொள்வதாகவும் 'சித்திரவதைகளிலிருந்து விடுதலை' என்ற அமைப்பு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

'இவ்வாறான வெள்ளை வான் கடத்தல் சம்பவங்கள் வழமைபோன்று ஒரு வியாபாரமாக இடம்பெறுகின்றமை கவலைக்குரியதாகும்' என அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தைச் சேர்ந்த ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார். இந்த அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இலங்கையில் கடத்தப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாகிய 20 பேரின் சாட்சியங்கள் அடிப் படையாகக் கொள்ளப்பட்டுள்ளன.

இவர்கள் தற்போது இலங்கையை விட்டு வெளியேறி பல்வேறு நாடுகளில் வாழ்கின்றனர். இவர்கள் வவுனியாவிலுள்ள இராணுவ முகாம் ஒன்று சித்திரவதைக் கூடமாக இயங்குவதை உறுதிப்படுத்தியுள்ளனர். இதில் ஒருவரது முறைப்பாடானது அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் மற்றும் சித்திரவதைகளிலிருந்து விடுதலை ஆகிய இரண்டு அமைப்புக்களாலும் விசாரணை செய்யப்பட்டுள்ளது.

அனைத்துலக உண்மை மற்றும் நீதித் திட்டத்தால் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களாவர். இவர்களுள் பலர் புலிகளின் கட்டாய ஆட்சேர்ப்பில் இணைக்கப்பட்டவர்களாவர்.

இவர்களில் சிலர் புலிகள் அமைப்பில் இணைக்கப்பட்ட போது 18 வயதிற்கு உட்பட்டவர்களாக காணப்பட்டதுடன் புலிகள் அமைப்பில் சில வாரங்கள் மட்டுமே பணிபுரிந்தவர்களாவர். ஆகவே போரின் இறுதியில் இவர்கள் தம்மை முன்னாள் புலிகள் என இராணுவத்திடம் பதிவுசெய்யாமல் இருந்தனர்.

இவர்களில் சிலர் போரின் பின்னர் தேர்தல் பரப்புரைகள் போன்ற அரசியற் செயற்பாடிகளிலும் காணாமற்போனவர்கள் தொடர்பாக பரப்புரை செய்தவர்களாகவும் காணப்பட்டனர். இதற்காகவே இவர்கள் கடத்தப்பட்டனர். இவ்வாறு கடத்தப்பட்டவர்களுள் ஐந்து பெண்களும் அடங்குவர்.

கம்பிகள், வயர்கள் மற்றும் தடி போன்ற பல்வேறு பொருட்களால் தாம் தாக்கப்பட்டதாகவும் நீர் நிரம்பிய பரல்களில் அடைக்கப்பட்டும் தலைகீழாகத் தொங்க விடப்பட்டும் தாம் சித்திரவதைகளுக்குள்ளாகியதாக பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.



இலங்கை இராணுவத்தினராலும் புலனாய்வாளர்களாலும் தடுத்து வைக்கப்பட்டவர்களில் பலர் மீண்டும் மீண்டும் பாலியல் வன்புணர்வுகளுக்கு உட்படுத்தபட்டனர். போரின் இறுதியில் தோற்கடிக்கப்பட்ட புலிகள் அமைப்பிற்கு புத்து யிரளிக்கும் நோக்குடன் செயற்படுவதாக தம் மீது பழிசுமத்தப்பட்டு சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்டவர்களின் உடல்களில் காணப்படும் காயங்கள் மற்றும் வடுக்கள் போன்றன நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வல்லுனர்களால் மருத்துவ ரீதியாகப் பரிசோதிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் தெரிவித்துள்ளது. அத்துடன் பாதிக்கப்பட்டவர்கள் தாம் எங்கு வைத்து சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர் என்பதையும் ஆழமாக விபரித்துள்ளனர்.

'சிறந்த அனுபவங்களைக் கொண்ட சட்டவாளர்களின் உதவியுடனேயே பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து தகவல்கள் பெறப்பட்டுள்ளன. சித்திரவதைகளுக்குள்ளாகி இலங்கையிலிருந்து தப்பி வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளவர்களால் தெரிவிக்கப்பட்ட விடயங்களின் நம்பகத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது' என அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் பேச்சாளர் பிரான்சிஸ் ஹரிசன் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் தொடர்பில் மைத்திரிபால சிறிசேன மீது ஏற்கனவே அழுத்தம் இடப்பட்டுள்ளது. போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கையில் பல்வேறு போர்க்குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதற்கான வலுவான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக கடந்த செப்ரெம்பரில் ஐக்கிய நாடுகள் சபை அறிவித்தது.

இவ்வாறான மீறல்களை விசாரணை செய்வதற்கு 'சிறப்பு அனைத்துலக நீதிமன்றம்' உருவாக்கப்பட வேண்டும் எனவும் இப்பொறிமுறை மூலம் மிகவும் மோசமான மீறல்களில் ஈடுபட்ட ஒவ்வொரு தனிமனிதர்களுக்கு எதிராகவும் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் ஐ.நா வலியுறுத்தியது.

இலங்கையின் பாதுகாப்புப் படையினரால் சித்திரவதை, படுகொலைகள், பலவந்தமான காணாமற் போதல்கள், பாலியல் மீறல்கள் போன்ற பல்வேறு கொடிய மீறல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதேவேளையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள், படுகொலைகள், சிறுவர் ஆட்சேர்ப்புக்கள் போன்றன செயற்படுத்தப்பட்டதாகவும், ஜெனீவாவில் ஐ.நா மனித உரிமை உயர் ஆணையாளர் செய்ட் ராட் அல் ஹுசைன் வெளியிட்ட 220 பக்க அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.

இலங்கையில் போரில் ஈடுபட்ட இரு தரப்பினரும் அதிகளவிலான குற்றங்களில் ஈடுபட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.

இலங்கையின் முன்னாள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்ற மீறல்கள் தொடர்பான உள்ளக விசாரணைப் பொறிமுறையானது பக்கச்சார்புடையதாகவும் வினைத்திறனற்றதாகவும் காணப்பட்ட போதே அனைத்துலக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அழுத்தம் அதிகரித்தது.

இலங்கையின் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் மீளிணக்க ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களும் பெரிதளவில் அமுல்படுத்தப்படவில்லை என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கதே.

# யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் பங்கேற்க இந்தியர்கள் 60 பேர் வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் கலந்து கொள்ள 60 பேர் அடங்கிய இந்திய வர்த்தகக் குழு இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக யாழ். வர்த்தக கைத்தொழில் துறை மன்ற தலைவர் கே. விக்னேஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வருடம் யாழ். சர்வதேச வர்த்தக கண்காட்சி எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை யாழ் மாநகர சபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கண்காட்சிக்கு விசேடமாக தமிழ்நாடு வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தினை சேர்ந்த வர்த்தகர்கள் வருகை தந்து உணவு பதனிடல், விவசாயப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், மருந்து வகைகள், ஆபரணம் மற்றும் விரைவாக விற்பனையாகும் நுகர்வோர் உற்பத்திகள் போன்ற பல்வேறுபட்ட வர்த்தகத்துறைகளை பிரதிநிதித் துவப்படுத்தும் வர்த்தகர்கள் மற்றும் கைத்தொழிற்துறையாளர்கள் இந்த வர்த்தகக் கண்காட்சி இடம்பெறும் காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யத்திட்டமிட்டுள்ள துடன். அங்கு சந்திப்புக்கள் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பில் கவனம் செலுத்தவுள்ளனர்.

வர்த்தகம் மற்றும் கைத்தொழில், ஏற்றுமதி வாய்ப்புக்கள், கூட்டு முயற்சி கொண்ட செயற்திட்டங்களை ஸ்தாபிக்கும் வாய்ப்புக்கள் மற்றும் தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் இருதரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை ஊக்குவித்தல் தொடர்பான வாய்ப்புக்களை முன்னெடுப்பதே இந்த வர்த்தகக் குழுவின் பிரதான நோக்கமாகும்.

பாரிய எண்ணிக்கையிலான உற்பத்தியாளர்கள் மற்றும் குடிமக்கள் கலந்து கொள்ளும் ஒரு பிரமாண்டமான தனி நிகழ்வாக இது கருதப்படுகின்றது. நிர்மாணத்தொழில் துறை, விருந்தோம்பல் தொழில் துறை, உணவு, பான வகை மற்றும் பொதியிடல் தொழிற்துறை, வாகனத் தொழிற்துறை, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் தொழிற்துறை, நிதியியல் சேவைகள், ஆடை, விவசாயம், நுகர்வோர் உணவுகள் மற்றும் பல துறைகள் மூன்று தினங்களாக இக் கண்காட்சியில் இடம்பெறவுள்ளன.

இக் காலப்பகுதியில் இதற்கு இணையாக பல்வேறு ஏனைய நிகழ்வுகளையும் ஏற்பாட்டாளர்கள் ஒழுங்கு செய்துள்ளனர். பிரபல கலைஞர்கள் கலந்து கொள்ளும் இரு நாட்கள் மாலைப் பொழுது இசை நிகழ்வுகள், கண்காட்சிக்கு முன்பாக தெருக்காட்சி. சிறுவர்கள் கொண்டாட்ட நிகழ்வு மற்றும் பொழுதுபோக்கு பூங்கா மற்றும் பல அம்சங்கள் இதில் அடங்கியுள்ளன.

இந்தியாவிலிருந்து வருகை தரவுள்ள குழுவினருடன அனைத்து கைத்தொழிற் துறையினரும் சந்திப்பதற்கான வாய்ப்பையும் ஏற்பாட்டாளர்கள் ஒழுங்கு செய்துள்ளனர்.

யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சியின் முக்கிய அம்சங்களாக நுகர்வோர் தெரிவுகள் முதல் கைத்தொழில் பொருட்கள் மற்றும் சேவைகள் வரை 300 இற்கும் மேற்பட்ட கண்காட்சிக் கூடங்கள், மாலைப்பொழுதில் நேரடி இசை நிகழ்வுகள், சிறுவர்கள விளையாடுவதற்கான வசதி உட்பட பொழுதுபோக்கு பூங்கா, அனைத்து வகையான உணவு மற்றும் பான வகை, கூவி விற்கும் உணவுக்கூடங்கள், ஆயிரத்துக்கும் மேற்பட்ட உற்பத்திகளுக்கு விசேட தள்ளுபடிகள், வியப்பூட்டும் பரிசுகளை வெல்வதற்கு மணித தியாலத்திற்கு ஒருமுறை அதிர்ஷ்ட குலுக்கல் சீட்டிழுப்புக்கள், விசேட தள்ளுபடியுடனான சேலை விற்பனை, கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள், விசேட உயர் கல்வி காட்சிக்கூடம் என்பன அமையவுள்ளன.

இக்கண்காட்சிக்கு இம்முறை 60 ஆயிரத்துக்கு மேற்பட்ட பார்வையாளர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# மச்சங்களின் அதிர்ஷ்ட பலன்கள்



நாக்கில்

நாக்கின் நுனிப்பாகத்தில் மச்சம் உடையவர்கள் நல்ல அதிர்ஷ்டசாலிகளாவார்கள். இவர்கள் சிறந்த அறிவாளிகளாகவும் உண்மையேபேசுபவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் கூறுவதெல்லாம் தவறாமல் நடைபெறும். இவர்களில் சிலர் ஜோதிடக் கலைஞர்களாகவும் இருப் பார்கள்.

நாக்கின் மேல் பாகத்தில் மச்சம் உடையவர்கள் சிறந்த சொற்பொழிவாளர்களாக இருப்பார்கள். இவர்களில் சிலர் புராணப் பிரசங்கங்கள்,செய்து வாழ்க்கை நடத்துவார்கள். இவர்களில் சிலர் மிகவும் மேதாவிகளாகவும் சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்தவர்களா கவும் புகழ் பெறுவார்கள்.

நாக்கின் அடிப்பாகத்தில் மச்சம் உடையவர்கள் மற்றவர்கள் வியந்து விளங்கும் படியான ஞானிகளாகத் திகழ் வார்கள்.இவர்களுக்கு உலக வாழ்வில் பற்றுதல் இருக்காது.

பொதுவாக நாக்கில் மச்சம் இருந்தால் அவர்கள் பேச்சுத் திறமையுடையவர்களாக பல கலைகளை அறிந் தவர் களாக மேம்பட்டு விளங் குவார்கள்.

மூக்கில்

மூக்கின் நுனியில் மச்சம் இருந்தால் அவர்கள் அகந்தை உடையவர்களாகவும் முன் கோபம் உடையவர்களாகவும் இருப்பார்கள். இந்த மச்சம் உடையவர்களில் சிலர் பிறர் வசதியாக வாழ்வதைக் கண்டு பொறாமைப்படுவார்கள். கர்வியாகிப் பிறரை மதிக்க மாட்டார்கள். மற்றவர்களிடமுள்ள சிறப்பான அம்சங்களைப்பாராட்டுவதென்பது இவரது அகராதியில் இராது.மற்றும் பிறர் குணங்களை தோஷங்களாக கருதும் இயல்புடையவர். இவர் தான் தொடங்கும் எந்தக் காரியத்தையும் மிக்க விரைவில் எளிதாக சாதித்துக் கொள்ளும் ஆற்றல் படைத் தவர்.

மூக்கின் அடிப்பாகத்தில் மச்சம் இருந்தால் அவர்கள் தாமாக முயன்று எந்த வேலையும் செய்ய மாட்டார்கள். கையில் உள்ள பணத்தை செலவு செய்து வாழ்ந்து காலத்தை வீணாக்குவார்கள். பிறர் கூறும் அறிவுரையையும் கேட்க மாட்டார்கள்.இந்த மச்சம் இருப்பவர்கள் செய்யும் முயற்சியெல் லாம் வீணாகி விடும். வாழ வழி தெரியாமல் திண்டாடு வார்கள்.

மூக்கின் வலது பக்கம் மச்சம் இருந்தால், அத்தகையவர் கள் எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் வெற்றியே ஏற்படும். இவர்களுடைய வாழ்க்கையில் முயற்சியால் மட்டுமன்றி எதிர்பாராத வகையிலும் வியாபாரத்தின் மூலமாகவோ ரேஸ், லாட்டரிபோன்றவை மூலமாகவோ பல தடவைகள் தனலாபம் உண்டாகும்.

மூக்கின் இடது புறம் மச்சம் இருந்தால் மேற்கண்ட பலன்களுக்கு எதிர்மறையான பலன்கள் ஏற்படும். அதாவது இவர்கள் மிகவும் முயன்று செய்யும் தொழில் களில் எந்த பயனும் இருக்காது. எங்கும் நஷ்டமேயன்றி இலாப மென்பதை காணமாட்டார்கள். . பொருளாதாரமும் சீர்குலைந்து அலைவார்கள். பிறர் கூறும் நல்ல அறிவுரைகளை கேட்டும் திருந்தி நடக்க மாட்டார்கள். மூக்குக்கு அருகில் மச்சம் இருந்தால் மிகவும் மகிழ்ச்சியோடு வாழ்க்கை நடத்துவார்கள். வாசனைப்பொருள்களை அதிக அளவில் வாங்கி அனுபவிப்பதில் விருப்பம் உள்ள வர்கள்.

(தொடரும்)

# கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலயத்தின் கால்கோள் விழா இன்று வியாழக்கிழமை காலை 9மணிக்கு அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில்பிரதமவிருந்தினராக யாழ்.பல்கலைக் கழக சித்த மருத்துவத் துறையின் முதுநிலை விரிவுரையாளர் மருத்துவ கலாநிதி கலைச்செல்வி சௌந்தரராஜன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்புவிருந்தினராகதென் மராட்சி கல்வி வலயத்தின் கணித பாட முதன்மை ஆசிரியர் கந்தையா சிறிகணேசன் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.ஜெயபாலன் கலந்து கொள்ளவுள்ளார்.

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

யாழ்.ஏமாலைமேற்குசைவ சன்மார்க்க வித்தியாசாலை கால்கோள் விழா இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி பி.கிரிதரன் தலைமையில்நடைபெறவுள்ள இந்நிகழ்வில் உடுவில் கோட்டக்கல்வி அலுவலர் எஸ். சண்முககுலகுமாரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக உடுவில் கல்விக் கோட்ட வணிக பாட ஆசிரிய ஆலோசகர் என். துரைராஜசிங்கம்கலந்துகொள்ளவுள்ளார்.

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

கைதடி எருதிடல் அ.த.க பாடசாலையின் கால்கோள் விழா இன்று வியாழக்கிழமை காலை 9மணிக்கு அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதமவிருந்தினராகதென் மராட்சி கல்வி வலயத்தின் ஆரம்பப்பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் அ.மனோரஞ்சிதன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினர்களாக இத்தாலி புலம்பெயர்ந்து வாழ்பவர்களான பாடசாலையின் பழைய மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

யாழ்.சுன்னாகம் ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலையின் கால்கோள் விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10மணிக்கு வித்துவான் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-5)

# பொங்கல் விழா

யாழ்.திருமறைக் கலாமன் றத்தின் பொங்கல் விழா நாளை வெள்ளிக்கிழமை அதி காலை 5.30 மணி க்கு இடம் பெறவுள்ளது.

திருமறைக்கலாமன்ற பணியகத்தில்நடைபெறவுள்ள இப்பொங்கல் விழாவைத் தொடர்ந்து காலை 7 மணிக்கு நன்றி வழிபாடும் இடம் பெற்வுள்ளது. (இ-5)

# செய்தித் துளிகள்

## அபிவிருத்தியில் மாவட்டங்களுக்கு பாரபட்சம் காட்டப்படமாட்டாது

மாவட்டங்களின் அபிவிருத்தியில் ஒரு மாவட்டத்துக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் பாரபட்சம் காட்டப்படமாட்டாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வெலிக்கந்தையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர இதனை குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்தும் உரையாற்றிய ஜனாதிபதி இந்த மாவட்டத்தின் விவசாயி களுக்கு கடந்த அரசாங்கத்தின் ஆட்சியின் போது உரிய வகையில் மானியங்கள் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் இலங்கையில் உள்ள களஞ்சியங்களில் வெளி நாடுகளில் இரு ந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசி உரிய வகையில் பாதுகாப் பின்றி வைக கப்பட் டுள்ளமையால் உணவுக்கு பயன் படுத்த முடியாத நிலை க்கு சென் றுள்ளது என தெரிவித்தார். (இ-7)

## வாகன அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு 5000 ரூபாய் இலஞ்சம் பெற்றவர் கைது

வாகன அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொடுப்பதறகாக 5000 ரூபாவை இலஞ சமாக பெற முயற்சித்த நபர் ஒருவர் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின்அதிகாரிகளினால்நேற்று முன்தினம் கைது செய்யப் பட்டுள்ளார்.

கொழும்பு - கொட்டஹேன பகுதியில் தனியார் வாகன பயிற்சி பாடசாலை ஒன்றின் உரிமையாளரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இந்தப்பணத்தை வேரஹெரயில் அமைந்துள்ள மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்திலுள்ள அதிகாரி ஒருவருக்கு வழங்கவே பெற்றுக் கொண்டுள்ளதாக முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார். (இ-7)

## கல்வி கலாசார மன்ற அங்குரார்ப்பண விழா

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் சர்வோதய கல்வி கலாசார மன்ற அங்குரார்ப்பண விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மன்றத்தின் இணைத் தலைவர்களான கா.சசிதரன், கி.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் அ.பரஞ்சோதி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதுடன்சிறப்புவிருந்தினர்களாக ம.இரங்கநாதன், இரா. கேதீசன், ப.பகீரதன், க.மாதவன்,தி.கமலநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது வடமாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி தனது மூலதன நிதி ஒதுக்கீட்டில் இருந்து 60 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இலவச கற்றல் உபகரணங்களையும் வழங்கவுள்ளார். (இ-5)

## தீப்பெட்டிக்கு பற்றாக்குறை

நாடு முழுவதும் தீப்பெட்டிக்கு கடுமையான பற்றாக் குறை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீப்பெட்டி ஒன்றின் சாதாரண விலை 5 ரூபாயாக காணப்பட்ட அதே வேளை, தற்போது தீப்பெட்டி ஒன்றின் விலை 10 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மக்கள் தீப்பெட்டிக்கு பதிலாக லைட்டர்களை கொள்வனவு செய்வதாகவும் நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன் தீப்பெட்டியானது நாட்டிற்கு அத்தியாவசியமான ஒன்றாகும்.

எனவே, இதற்கானமருந்து வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்படுவதாகவும் அந்த மருந்தை இறக்குமதி செய்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலையே இந்தப் பற்றாக் குறைக்கு காரணம் என நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பின் தலைவர் ரஜ்சித் விதானகே தெரிவிததுள்ளார். (இ-7)

## 80 பணிப்பெண்கள் தாயகம் திரும்பினர்

வெளிநாட்டு வேலை வாயப்புக்காக சென்று பல் வேறு துன் புறுத் தல் களுக் கும் ஆளான பணிப் பெண் கள் சிலர், குவைத் நாட்டில் இருந்து தாயகம் திரும்பியுள்ளனர்.

நேற்றுக் காலை 6.50 அளவில் இலங்கைக்கு சொந்தமான விமானத்தின் மூலம் இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இதன்படி 80 பெண்களே இவ்வாறு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலையீட்டினால், மீண்டும் நாட்டை வந்தடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை இம் மாத இறுதிக்குள் மேலும் சில பணிப்பெண்களை அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## 08.01.2016-27.07.2017 வரை

*ஐந்தில் ராகு வருகிறது! அள்ளிக் கொடுக்கப் போகிறது!*

*பெருந்தன்மையும், பிறருக்கு சேவை செய்யும் மனப்பான்மையும் கொண்ட மேட இராசி நேயர்களே!*

நவக்கிரகங்களில் மிகுந்த பலம் பெற்ற கிரகமாக விளங்குவது உங்கள் ராசிநாதன் செவ்வாய்தான். எனவே தைரியமும், தன்னம்பிக்கையும் உங்கள் உயிர் மூச்சாக இருக்கும். எடுத்த காரியத்தை எளிதில் முடிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் வரை உங்களுக்கு தூக்கம் வராது.

வம்பு, வழக்குகளில் சிக்குவதை நீங்கள் விரும்ப மாட்டீர்கள். வளைந்து கொடுத்துச் சென்றே காரியங்களைச் சாதிப்பதில் வல்லவர் நீங்கள். நெருக்கடிகளை கையாளும் கலை உங்களுக்கு அதிகம் இருக்கும். திடீரென்று உணர்ச்சி வசப்படுவீர்கள். செல்லும் இடங்களில் எல்லாம் செல்வாக்குடன் திகழ வேண்டும் என்று நினைப்பீர்கள். 'கணீர்' குரலுக்கு சொந்தக்காரர்களாகவும், கடமை உணர்வு மிக்கவர்களாகவும் விளங்குவீர்கள்.

இப்படிப்பட்ட குணாதிசயங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த ராகு-கேது பெயர்ச்சி எப்படி இருக்கும்? என்ன மாற்றங்களை எல்லாம் கொடுக்கப் போகிறது? என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

பொதுவாக ஜாதகத்தில் 5, 9, 11 ஆகிய இடங்கள் பலம் பெற்றிருந்தால் பணப்பற்றாக்குறை ஏற்படாது. பொருளாதாரத்தில் போதுமான நிறைவு ஏற்படும். 'ஐந்தும், ஒன்பதும் மிஞ்சும் பலன் தரும்' என்பார்கள். அந்த அடிப்படையில் 5 இல் வரும் ராகு, செல்வ வளம் பெருக வழி வகுத்துக் கொடுக்கப் போகிறார். கேது, இலாப ஸ்தானத்தில் வருவதால் பதினோராமிடம் புனிதமடைகின்றது. தேங்கிக் கிடக்கும் தொழிலை நடத்தி வைக்கும் ஆற்றல் சர்ப்பக்கிரக ஆதிக்கத்திற்கு உண்டு. எனவே கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து தொழிலை விரிவு செய்யும் வாய்ப்பு உண்டு.

**சொத்துக்களால் லாபம் பெறவைக்கும் ஐந்தாமிடத்து ராகு! சொந்தங்களின் ஒத்துழைப்பை கூட்டும் இலாபஸ்தான கேது!**

இதுவரை கன்னி ராசியில் சஞ்சரித்து வந்த ராகுவும், மீன ராசியில் சஞ்சரித்து வந்த கேதுவும் தங்களது வான் வெளிப் பயணத்தில் 8.1.2016 அன்று பின்னோக்கி வந்து உங்கள் பிரச்சினைகள் தீர வழிசெய்யப் போகிறார்கள்.

ஐந்தாமிடமான சிம்ம ராசியில் சஞ்சரிக்கும் ராகுவும், பதினோறாமிடமான கும்ப ராசியில் சஞ்சரிக்கும் கேதுவும் பக்கபலமாக இருந்து உங்கள் சிக்கல்கள் தீர வழிகாட்டுவர். எனவே நீங்கள் எதற்கும் கவலைப்படத் தேவையில்லை. நம்பிக்கையோடு இருக்கலாம். புத்திர ஸ்தானமான ஐந்தாமிடத்தில் சஞ்சரிக்கும் ராகு பிள்ளைகள் வழியில் சுபவிரயங்களை உருவாக்கும். வாயில் தேடி வந்து வரன்கள் முடிவாகும். கோவில், கோவிலாகக் கும்பிட்டதற்குப் பலன் எப்பொழுது கிடைக்கும்? ஆயுள் நன்றாக இருக்குமா? ஆதாயம் போதிய அளவு கிடைக்குமா? என்றெல்லாம் சிந்தித்த உங்களுக்கு, இப்பொழுது சிறப்பான பலன்களை ராகு அள்ளி வழங்கப் போகிறார்.

பூர்வ புண்ணியத்தின் வலிமையால் தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். திடீரென வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்வீர்கள். ஸ்தல யாத்திரைகள் அதிகரிக்கும். வளர்ச்சிக்கு வித்திட்டவர்களைச் சந்தித்து முக்கிய முடிவெடுப்பீர்கள். எண்ணங்கள் எளிதில் செயலாகும் இந்த நேரத்தில் எடுத்த காரியங்களை சுலபமாக முடிக்கும் வாய்ப்பு கிட்டும்.

மேலும் பழைய சொத்துக்களை விற்று புதிய சொத்துக்களை வாங்கும் வாய்ப்பு கட்டும். தூர தேசத்திலிருந்து வரும் வாய்ப்புகளை ஏற்றுக்கொள்வதா? வேண்டாமா? என்று சிந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மாற்றலாகி வந்த இடமே நன்றாக உள்ளது என்று நிம்மதி அடைவீர்கள். பழைய கடன்களை அடைப்பதற்கான முயற்சியில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

பஞ்சம ஸ்தான ராகுவால் அஞ்சாத வாழ்க்கைக்கு அஸ்திவாரமிடுவீர்கள். பிள்ளைகள் வழியில் உதிரி வருமானங்கள் பெருகுவதும் இக்காலத்தில்தான். பிரச்சினைகளுக்கு மத்தியில் பிரிந்து சென்ற பிள்ளைகள் மீண்டும் வந்திணைவர். ராகுவிற்கும், கேதுவிற்கும் அர்ச்சனைகளைச செய்து, ஆலய வழிபாட்டை மேற்கொண்டால் நன்மையே நடக்கும். அனுகூலமான நாளில் சர்ப்ப சாந்தி செய்தால் பிள்ளைகளின் சுபகாரியம் எளிதாக முடியும்.

அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அதிகப் பொறுப்புகள் வந்து சேரும்.





கரைந்த சேமிப்புகளை ஈடுகட்ட புதிய யுக்திகளைக் கையாளுவீர்கள். உங்கள் சுய ஜாதகத்தில் 2, 4, 6, 8, 12 ஆகிய இடங்களில் ராகு இருந்தால் முறையாக சர்ப்ப சாந்திகளைச் செய்து கொள்ளலாம். செல்வ நிலையில் ஏற்ற இறக்கம் இல்லாமல், நிலையான செல்வம் வந்து நிம்மதியைக் கொடுக்க ராகு-கேதுக்களின் வழிபாடுகள் தான் தேவை.

**நன்மைகளை வழங்கும் இலாப ஸ்தான கேது!**

உங்கள் ராசிக்கு பதினோறாமிடமான கும்ப ராசியில் கேது சஞ்சரிப்பது யோகம் தான். இலாப ஸ்தானம் புனிதமடைகின்றது. ஞானகாரகன் கேது இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது ஆன்மிகத்திற்கு என்று ஒரு தொகையை ஒதுக்கும் பொழுது, குடும்ப வாழ்க்கையிலும், தொழிலிலும் இலாபம் வந்துகொண்டே இருக்கும். தொழில் வளர்ச்சி கூடும். பணப்புழக்கம், வரவு- செலவு திருப்தி தரும்.

பொதுவாகவே பதினோறாமிடத்தில் கேது வந்தால் பல வழிகளிலும் வரவைக் கொடுத்து, செலவையும் கொடுக்கும் என்பார்கள். மூத்த சகோதரர்களுடன் ஏற்பட்ட மோதல்கள் அகலும. இளைய சகோதரர்கள் எப்பொழுதுமே உதவிக்கரம் நீட்டுவர். ஏற்றுமதி, இறக்குமதி தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு பொன் கொழிக்கும் நேரமாகும். எண்ணியபடியே வெளிநாட்டுக்கு அடிக்கடி சென்று வருவீர்கள். கண்ணியம் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிட்டும். கடமையில் கண்ணும், கருத்துமாக இருப்பீர்கள். அனைவரும் உங்களைப் பார்த்துப் பாராட்டும் விதத்தில் வாழ்க்கை அமையப் போகின்றது.

வெளிநாடு செல்ல நினைப்பவர்கள், வீடு கட்ட நினைப்பவர்கள் சுயஜாதகத்தைப் பரிசீலனை செய்து திசாபுத்தி பலமறிந்து செயற்படுவது நல்லது.

**பாதசாரப்படி ராகு தரும் பலன்கள்!**

ராகு சிம்ம ராசிக்குள் அடியெடுத்து வைக்கும் பொழுது சூரியன், சுக்ரன், கேது ஆகிய மூன்றின் சாரத்திலும் சஞ்சரிக்கிறார். அதன் மூலமாக ஏற்படும் பலன்களை அறிந்து நாம் செயற்படுவது நன்மையை வழங்கும்.

சூரியன் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது (8.1.2016 முதல் 10.3.2016 வரை) பிள்ளைகள் வழியில் நல்ல காரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். குறிப்பாக, சென்ற ராகு பெயர்ச்சியில் தாமதமாக இருந்த சுப காரியப் பேச்சுக்கள் இப்போது துரிதமாக நடைபெறும். இதுவரை பல நூற்றுக்கணக்கான ஜாதகங்களை பரிசீலனை செய்தும் அது பொருந்தவில்லை என்று வருத்தமடைந்து வந்தவர்கள், இப்போது மகிழ்ச்சியடையும் விதத்தில் மங்கல ஓசை இல்லத்தில் கேட்கும் வாய்ப்பு உருவாகப் போகின்றது.

குழந்தைகளின் கல்வி முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சியிலும் பலன் கிடைக்கும். இதுவரை எத்தனையோ முறை தேர்வு எழுதியும் தேர்ச்சி பெறாமல் இருப்பவர்கள் இப்போது தேர்வில் பெற்றி பெறுவர். வேலை வாய்ப்பும் தேடி வரலாம். அதன் மூலம் உதிரி வருமானமும் கிடைக்கும்.

சுக்ர சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது (11.3.2016 முதல் 16.11.2016 வரை) குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கணவன்-மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். பலதரப்பட்ட வகைகளில் பணத்தேவை ஏற்பட்டாலும் ஏதேனும் ஒரு முயற்சியின் மூலம் தேவைக்கேற்ப பணம் வநதுகொண்டேயிருக்கும். பூர்வீக சொத்துக்களை விற்று, புதிய சொத்துக்களை வாங்கி அதில் வீடு கட்டிக் குடியேறலாமா? என்ற சிந்தனை ஒரு சிலருக்கு மேலோங்கும்.

ராகு பகவான் கேது சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (17.11.2016 முதல் 26.7.2017 வரை) பயணங்கள் அதிகரிக்கும். பழைய வாகனங்களை கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்களை வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வெளிநாட்டு தொடர்பு எண்ணியபடியே வாய்க்கும் என்றாலும், எட்டில் சனி இருப்பதால் யோசித்தே ஏற்றுக்கொள்வது நல்லது.

**பாதசார அடிப்படையில் கேது தரும் பலன்கள்!**




கேது, கும்ப ராசிக்குள் அடியெடுத்து வைக்கும் பொழுது குரு, ராகு, செவ்வாய் ஆகிய மூன்று சாரங்களிலும் சஞ்சரிக்கின்றார். அப்பொழுது எப்படிப்பட்ட பலன்களை நமக்கு வழங்குவார் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

குரு சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (8.1.2016 முதல் 13.7.2016 வரை): தந்தைவழி உறவினர்களால் ஏற்பட்ட விரிசல் அகலும். இல்லத்தில் நீண்ட நாட்களாகத் தடைபட்ட சுபகாரியங்கள் கைகூடும். பங்காளிப் பகை மாறும். பாகப்பிரிவினை சம்பந்தமாக ஏற்பட்ட பஞ்சாயத்துக்களில் நல்ல முடிவு வரும். உடன்பிறப்புகள் உங்கள் குரலுக்கு செவி சாய்ப்பர்.

கேது பகவான் ராகு சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (14.7.2016 முதல் 22.3.2017 வரை) கொஞ்சம் கூடுதல் கவனத்துடன் செயற்பட வேண்டிய நேரமாகும். கூட்டாளிகளை மாற்றம் செய்ய முன்வருவீர்கள். உங்கள் திறமைக்கு ஏற்ப அங்கீகாரம் கிடைக்குமா? என்பது சந்தேகம்தான். அரசுவழிச் சலுகைகளை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்குத் தாமதம் ஏற்படும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

விரயங்கள் கூடுதலாக இருக்கும். எந்த முயற்சியும் அதிகப் பிரயாசை எடுத்தே வெற்றி பெற இயலும்.

கேது பகவான் செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (23.3.2017 முதல் 26.7.2017 வரை) உடல் ஆரோக்கியம் சீராக அமையும். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழிலில் இதுவரை இருந்த இழப்புகளை ஈடுகட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வி.ஆர்.எஸ் பெற்றுக் கொண்டு சுய தொழில் செய்யும் அமைப்பு உருவாகலாம். எதிர்பார்த்தபடியே இலாபம் கிடைதது மகிழ்ச்சி காண்பீர்கள். இதுபோன்ற காலங்களில் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். ஒரு சிலருக்கு கோவில் திருப்பணிகளை முன்னின்று நடத்தும் வாய்ப்புகள் உருவாகலாம.

**வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!**

## செல்வ வளம் பெருக வழி பிறக்கப் போகிறது!

ஐந்தாமிடத்து ராகு அதிர்ஷ்ட வாய்ப்புகளை அள்ளி வழங்கவும், பதினோறாமிடத்து கேது பண வரவைப் பெருக்கிக் கொடுக்கவும் அருகில் உள்ள சிவாலயத்திற்கு சென்று ஞாயிற்றுக்கிழமை தோறும் உமா மகேஸ்வரரையும், அம்பிகையையும் வழிபட்டு வருவதோடு, சஷ்டி விரதமிருந்து சண்முகநாதப் பெருமானை வழிபாடு செய்வது நல்லது. சண்முகர் வழிபாடு சந்தோஷம் வழங்கும்.

(நாளை இடபம்)

பரமசிவனின் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டது கருடா சௌக்கியமா?

-கண்ணதாசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இந்திரா காந்தியின் நிலைதான் ஈழத்தமிழ் மக்களுக்கும்

விடுதலைப் புலிகள் மீது கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கொண்ட வெறுப்பு பல இடங்களில் வெளிப்பட்டுள்ளது. சில வேளைகளில் புலிகளின் மரண தண்டனைப் பட்டியலில் தனது பெயரும் இருந்தது என்பதால் அவ்வாறானதொரு கோபத்தை புலிகள் மீது அவர் கொண்டிருக்கலாம்.

எனினும் விடுதலைப் புலிகள் மீதான கோபத்தை தமிழ் மக்கள் மீது அவர் காட்டுவது அவ்வளவு நல்லதல்ல.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தில் எதனையும் பெற்றுக் கொள்ள கையேந்துவதென்பது தமிழினத்தை இழிவுபடுத்தக் கூடியது.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்றுக் கொண்ட சம்பந்தரை இந்த நாட்டின் தேசியத் தலைவராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புகழ்ந்து பேசினார்.

எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரை தேசியத் தலைவர் என்று இந்த நாட்டின் பிரதமர் புகழ்ந்து கூறிய தான வரலாறு முன்பு நடந்ததுமில்லை. இனி நடக்கப் போவதுமில்லை.

ஆக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதன் காரணமாக தமிழ் மக்களின் பிரச்சினை பற்றி பாராளுமன்றத்தில் விலாவாரியாக எடுத்துக் கூறுவார். அதற்கான சந்தர்ப்பம் அவருக்கு நிறையவே உண்டு என்றெல்லாம் கற்பனை செய்த தமிழ் மக்கள் நிறையவே உள்ளனர்.

இதற்கு மேலாக இந்த நாட்டின் ஜனாதிபதியை, பிரதமரை இந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் எந்த நேரத்திலும் சந்திக்க முடியும் என்ற நியதியின் கீழ் எங்கள் சீமான், அடிக்கடி ஜனாதிபதி மைத்திரியைச் சந்தித்து எங்கள் பிரச்சினையைத் தீர்ப்பார் என்று நாம் நம்பியிருந்த வேளை,

எவரும் எதிர்பார்க்காத வகையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தேசியத் தலைவர் என்று புகழாரம் சூட்டி எங்கள் இனத்தை சங்காரம் செய்தவருக்கு விருது கொடுத்து சம்பந்தர் மகிழ்ந்தார்.

இவற்றை எல்லாம் நாம் குறிப்பிட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான கருத்து என்று ஒரு சிலர் கூறிக் கொள்வர்.

இனப்பிரச்சினை தொடர்பில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் வடக்குக் கிழக்கு இணைப்பு என்றோ சமஷ்டி என்றோ எதுவும் கூறவில்லை.

ஆக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கிராம சேவையாளர் பிரிவுகளை ஒன்றிணைக்கும் கிராம இராச்சியம் என்ற என்ற தீர்வைத் தந்தாலும் சம்பந்தர் ஏற்றுக் கொள்ளத் தயார் என்பது அவரின் உரையில் இருந்து தெரியவருகிறது.

என்ன செய்வது! இந்தியப் பிரதமராக இருந்த அன்னை இந்திரா காந்தி தன் மெய்ப்பாதுகாவலரை நம்பி அலுவலகக் கடமையை ஆரம்பிப்பதற்காக ஆயத்தமாகிறார்.

துப்பாக்கியை ஏந்திய தன் மெய்ப்பாதுகாவலரைப் பார்த்து புன்சிரிப்புச் செய்கின்ற அன்னை இந்திரா காந்தியின் நம்பிக்கை எல்லாம் மெய்ப்பாதுகாவலர் தன்னை பாதுகாப்பர் என்பதுதான்.

திடீரென துப்பாக்கி வேட்டுக் கேட்கிறது. மெய்ப்பாதுகாவலன், அன்னை இந்திரா காந்தியை நோக்கி சுடுகின்ற சத்தமே அது. தன் மெய்ப்பாதுகாவலனின் துப் பாக்கி ரவைகளை மீதமின்றி தன் மெய்யில் தாங்கிய அன்னை, நீ என்ற செய்கிறாய்? என்ற பெறுமதியான கேள்வியை தன் மரண வேளையிலும் அந்தப் பாதகனிடம் கேட்டு விடுகிறார்.

என்ன செய்வது? நாமும் தமிழ் அரசியல் தலைமையை நம்பினோம். அவர்கள் இந்திரா காந்தியின் மெய்ப்பாதுகாவலர்களாக நடந்து கொள்கின்றனர்.

நீங்கள் என்ன செய்கிறீர்கள்? என்று கேட்பதற்கும் திராணி அற்றவர்களாக இருப்பதுதான் எங்களின் துரதிர்ஷ்டம். எதுவாயினும் அன்னை இந்திரா காந்தியின் நிலைதான் ஈழத்தமிழர்களாகிய எங்களுக்கும். அவ்வளவுதான்.

# நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி சகல அரசியல் கைதிகளையும் விடுவிக்கவும்

## ஜனாதிபதியிடம் மீண்டும் கோரிக்கை

ஜனாதிபதிக்கு இருக்கும் நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி ஏனைய தமிழ் அரசியல் கைதிகளையும் பொங்கல் தினத்திற்கு முன்னர் விடுதலை செய்ய வேண்டுமென அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

மருதானை சமூக சமய மன்றத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இக் கோரிக்கையை அந்த அமைப்பினர் விடுத்துள்ளனர். இது தொடர்பாக அந்த அமைப்பினர் விடுத்துள்ள அறிக்கையில்,

தமிழ் அரசியல் கைதிகள் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் மேற்கொண்ட சாகும் வரையான உண்ணாவிரத போராட்டத்தின்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சி தலைவர் ஆர்.சம்பந்தனும் இணைந்து அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வழங்கிய உறுதிமொழியை அடுத்து கைதிகள் உண்ணாவிரதத்தை கைவிட்டனர்.

இதன் பின்னர் அமைச்சர் சுவாமிநாதன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தமிழ் அரசியல் கைதிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்படுவார்கள் என வாக்குறுதி வழங்கி இருந்தனர்.

ஆனால் பின்னைய காலப்பகுதியில் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் விடுதலையும் வழங்கவில்லை, புனர்வாழ்வும் வழங்கவில்லை.

தற்போது தைப்பொங்கல் தினத்தை வடபகுதியில் தேசிய தைப்பொங்கல் தினமாக கொண்டாட முடிவு எடுத்திருப்பதாக ஜனாதிபதி பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தார். இந்த தேசிய நிகழ்வில் ஜனாதிபதியும் பிரதமரும் பங்கேற்க உள்ளனர்.

தைப்பொங்கல் திருநாள் என்பது தமிழ்மக்களை பொறுத்தவரை விவசாயிகளுடனும் அதேநேரம் விவசாய நிலத்துடன் தொடர்புபட்ட ஒரு பெருநாள். இவ்வாறிருக்க தமிழ் மக்களின் பிள்ளைகள் அரசியல் கைதிகளாக சிறையிலும், தமிழ் மக்களின் நிலங்கள் இராணுவததாலும் பறிமுதல் செய்து இருக்கும் சூழ்நிலையில் அங்கு எவ்வாறு தேசிய தைப்பொங்கல் நிகழ்வை நடத்த முடியும்?

உண்மையில்தமிழ்மக்கள மத்தியில் நல்லிணக்கத்தை ஜனாதிபதி ஏற்படுத்த எண்ணம் கொண்டிருந்தால் முதலில் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும். தமிழ் மக்களின் நிலங்களை அவர்களிடம் கையளிக்கவேண்டும். அப்போதுதான் உண்மையான சகவாழ்வையும் உண்மையான தேசிய நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்ப முடியும். வெறுமனே தேசிய தைப்பொங்கல் நிகழ்வு நடத்த முற்படுவதன் மூலம் தமிழ் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றும் நடவடிக்கையாகவே அது அமையும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# "இருள் நீங்கி நாடே ஒளியில்"

# மின்சாரம் வழங்கும் தேசிய வைபவம் ஜனாதிபதி தலைமையில் ஆரம்பமாகியது

(கொழும்பு)

முழு நாட்டினையும் மின் வலுவிலான பரிபூரணமடையச் செய்யும் **இருள் நீங்கி நாடே ஒளியில்** தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் பொலநறுவை மாவட்டத்தின் அனைத்து இல்லங்களுக்கும் மின்சாரத்தை வழங்கும் கருத்திட்டத்தை கொண்டாடும் தேசிய வைபவம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் திம்புலாகல இஹல எல்லேவெவ ஸ்ரீபோதிராஜராமையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

மின்சாரத்திற்கான பிரவேசம்இருந்தபோதும்அதனை பெற்றுக்கொள்ள இயலாதிருந்த குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக கடந்த நவம்பர் மாத இறுதி வாரத்தில் ஆரம்பிக்கப்பட்ட இக்கருத்திட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் சுமார் 8 ஆயிரம் வீடுகளுக்கான மின்சாரம் வழங்கக்கூடியதாக இருந்தது.

மின்சாரம் வழங்குவதை ஆரம்பிக்கும் முகமாக எல்லேவெவயில் உள்ள வீடொன்றை மின்சாரத்தினால் ஒளிரச் செய்த ஜனாதிபதி அதன் பின்னர் ஸ்ரீ போதிராஜராமையின் தாது கோபுரத்திற்கான மின் விளக்கு பூஜையினை மேற்கொண்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி, வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக நாட்டின் வறுமையை ஒழிப்பதே 2016 ஆம் ஆண்டின் அரசின் முக்கிய எதிர்பார்ப்பாகும். ஆயினும் அதற்காக தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் பற்றாக்குறையாக காணப்படுவதன் காரணமாக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் அரசு கவனம் செலுத்தியுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

உலக நாடுகள் அனைத்தும் இலங்கையுடன் நட்புறவுடன் நடவடிக்கை மேற்கொள்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளமையினால் நாட்டை அபிவிருத்தி செய்வதில் நிலவிய அனைத்துத் தடைகளும நீங்கியுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, 2016ஆம் ஆண்டு அரசின் ஆரம்ப ஆண்டு ஆகும்எனக்குறிப்பிட்டார்.(செ-12)

# சத்திய தரிசனம்



## பிறர் நலன் பேணுவோம்

❖ பிறர் நலன் பேணுவதே சொர்க்கம். மற்றவர் வளர்ச்சி கண்டு மனம் புழுங்குவதே நரகம்.

❖ நடந்ததையே எண்ணி வருந்தாதீர்கள். நிகழ்காலத்தைப் பயனுடையதாக்கும் முயற்சியில் ஈடுபடுங்கள்.

❖ குறிக்கோளைக் கருத்தில் கொண்டு, அதில் வெற்றி கிடைக்கும் வரை ஆர்வமுடன் செயற்படுங்கள்.

❖ நல்லது கெட்டதை பகுத்தறியும் விவேகத்தைக் கற்றுக் கொடுப்பதே உண்மையான கல்வியாகும்.

❖ பெண்கள் கட்டுப்பாடற்ற சுதந்திரத்தைப் பெற விரும்பினால் ஆபத்தில் சிக்கிக் கொள்ள நேரிடும்.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## தலைக்கு ஏன் எண்ணெய் தேய்த்துக் குளிக்கவேண்டும் என்று கூறுகிறார்கள்?

தலைக்கு எண்ணெய் தேய்ப்பதில்கூட சாஸ்திரங்கள் உண்டு.
ஞாயிற்றுக்கிழமை எண்ணெய் தேய்த்து நீராடினால் மன வருத்தம் குறையும்.
திங்கட்கிழமை உடலுக்கு புத்துணர்ச்சி அளிக்கும்.
செவ்வாய்க்கிழமை உடல் நலக்குறைவையும் குறைக்கும்.
புதன்கிழமை செல்வத்தை பெருக்கும்.
வியாழக்கிழமை உடல் நலத்தை பாதுகாக்கும்.
வெள்ளிக்கிழமை அதிக செலவையும் குறைக்கும்.
சனிக்கிழமை விரும்பியவற்றை அடையலாம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

சஷ்டி, ஏகாதசி, துவாதசி, சதுர்த்தி, அட்டமி, பிரதமை, பௌர்ணமி, அமாவாசை ஆகிய திதிகளிலும் உத்தரம், கேட்டை, திருவோணம், திருவாதிரை ஆகிய நட்சத்திரங்களிலும் எண்ணெய் நீராடக்கூடாது என்றும் அவ்விதம் செய்ய நேரிட்டால் சிறிது நெய் கலந்து எண்ணெய் நீராடலாம் என்றும் அப்பயங்க ஸ்நானம் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுவாக அறநூல்களில் காலை 8.30 மணிக்கு முன்பும் மாலை 5 மணிக்கு பின்பும் எண்ணெய் தேய்த்து நீராடக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் தீபாவளியன்று மட்டும் அதிகாலை நல்லெண்ணெய் தேய்த்து வெந்நீரில் நீராடுவது கட்டாயமாக செய்ய வேண்டுமென்றும் அவ்விதம் செய்யாவிடில் நரகத்தைக் கொடுக்கக்கூடிய பாவம் சேரும் என்றும் தர்ம சாஸ்திரம் கூறுகிறது.

எண்ணெய் தேய்த்து குளிப்பது உடல் ஆரோக்கியத்திற்கும் ஆயுளுக்கும் பலன் கொடுக்கும். தீபாவளிக்கு முதல் நாள் இரவு நல்லெண்ணெயில் மிளகாய், மிளகு, சீரகம், இஞ்சி, மஞ்சள் தட்டிப்போட்டு காய்ச்சி தயார் செய்து கொள்ள வேண்டும். மறுநாள் அதிகாலை தலை உடல் எல்லாம் தேய்த்துக் குளிக்க வேண்டும். மிளகாய் வாயுவை அடக்கும். மிளகு, சீரகம் ஜீரணத்துக்கு உதவும் இஞ்சி பித்தத்தை தணிக்கும். மஞ்சள் குளிர்ச்சியை தரும். தலையில் எண்ணெயை அழுந்த தேய்த்து சீயக்காய் தேய்த்து குளிப்பது உஷ்ணத்தை நீக்கி குளிர்ச்சி தரும்.

# கங்குலியின் அதே போராட்ட குணம் கோலியை புகழ்ந்து தள்ளும் சங்கா



இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சங்கக்கார, இந்திய டெஸ்ட் தலைவர் கோலியை கங்குலியுடன் ஒப்பிட்டு பாராட்டியுள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் இருந்து டோனி ஓய்வு பெற்ற பிறகு இந்திய டெஸ்ட் அணியின் தலைவராக கோலி தெரிவு செய்யப்பட்டார்.

இதன் பிறகு நடந்த இலங்கை, தென்னாபிரிக்க தொடரை கோலி தலைமையில் இந்திய அணி கைப்பற்றி அசத்தியது.

இந்த நிலையில் சங்கக்கார, கோலியை முன்னாள் இந்திய அணித்தலைவர் கங்குலியுடன் ஒப்பிட்டு பேசியுள்ளார்.


சங்கக்கார கூறுகையில், கோலி அணித்தலைவராகவும், ஒரு வீரராகவும் போராடும் குணத்தை சிறப்பாக வெளிப்படுத்துகிறார்.

டோனியின் ஓய்வுக்கு பிறகு டெஸ்ட் அணியை சிறந்த முறையில் வழிநடத்தி செல்கிறார். கோலியின் தலைமையில் இந்திய அணியில் நல்ல மாற்றங்களை காண முடிகிறது.

முன்னாள் தலைவர் கங்குலி இந்திய அணிக்கு எப்படி போராடி துணை கண்டத்திற்கு வெளியில் வெற்றி பெற வேண்டும் என அதிகமாக கற்றுக் கொடுத்தார்.

தற்போதைய டெஸ்ட் அணித் தலைவர் விராட் கோலியிடமும் வெற்றி பெற வேண்டும் என்ற பசியே அதிகமாக காணப்படுகிறது என்று கூறியுள்ளார். (க)

# சிட்னி டென்னிஸ் போட்டி காலிறுதியில் சானியா




சிட்னி சர்வதேச டென்னிஸ் போட்டி அவுஸ்திரேலியாவில் நடந்து வருகிறது.

இதன் பெண்கள் இரட்டையர் பிரிவின் முதல் சுற்றில் சானியா மிர்சா (இந்தியா)-மார்ட்டினா கிங்கிஸ் (சுவிட்சர்லாந்து) ஜோடி 6-2, 6-3 என்ற நேர்செட்டில் அவுஸ்திரேலியாவின் அனஸ்டாசியா ரோடினோவா-அரினா ரோடினோவா இணையை எளிதில் தோற்கடித்து காலிறுதிக்கு முன்னேறியது.

நம்பர் வன் ஜோடியான சானியா-கிங்கிஸ் இணை தொடர்ச்சியாக சுவைத்த 27 ஆவது வெற்றி இது வாகும். (க)

# நடுவரின் தவறான தீர்ப்பால் ஆட்டத்தின் திசை மாறியது

## டோனி புலம்பல்



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் நடுவரின் தவறான தீர்ப்பு ஏற்புடையதாக இல்லை என்று இந்திய அணித் தலைவர் டோனி கூறியுள்ளார்.

பெர்த்தில் நடந்த முதல் ஒருநாள் போட்டியில் இந்திய அணியின் 310 ஓட்டங்கள் இலக்கையும் எட்டி 5 விக்கெட்டுகளால் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது.

இதில் அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்மித் (149), பெய்லி (112) இருவரும் சதம் அடித்து அணியின் வெற்றிக்கு உதவினர். ஆனால் பெய்லி ஓட்டங்கள் கணக்கை தொடங்கும் முன்பே ஆட்டமிழக்க வேண்டியது. 5 ஆவது ஓவரில் பரீந்தர் ஸ்ரன் வீசிய பந்து அவரது கையுறையை உரசிக் கொண்டு லெக்சைடில் சென றது. அதை விக்கெட் கீப்பர் டோனி பிடியெடுத்தார்.

அப்பீல் செய்த போது, நடுவர் கெட்டில் போரப் (இங்கிலாந்து) அவுட் கொடுக்க மறுத்து விட்டார். ஆனால் ரீப்ளேயில் பந்து கையுறையில் உரசுவது தெளிவாக தெரிந்தது.

இது பற்றி இந்திய அணித்தலைவர் டோனி கூறுகையில், பெய்லியின் விக்கெட் தொடர்பான நடுவரின் முடிவு ஏற்கக்கூடியதாக இல்லை. ஆனாலும் நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் டி.ஆர்.எஸ்.முறையில் எனக்கு உடன்பாடில்லை என்று தெரிவித்துள்ளார்.

பெய்லி கூறுகையில், நடுவர் மட்டும் சரியான தீர்ப்பை அளித்திருந்தால் ஆட்டத்தின் முடிவு வேறு மாதிரி அமைந்திருக்கலாம்.

இந்த தொடரில் நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் டி.ஆர்.எஸ தொழில்நுட்பம் கிடையாது. அப்படி இருந்திருந்தால் இது சுவாரஸ்யமான விடயமாக இருந்திருக்கும்.

எனது கையுறையில் பந்து பட்டது போன்று தான் சத்தம் கேட்டது. ஆனால் என்னால் 100 சதவீதம் உறுதியாக சொல்ல முடியாது என்று தெரிவித்துள்ளார். (க)

# சிம்பாவே துடுப்பாட்ட ஆலோசகராக மார்வன் அத்தப்பத்து நியமனம்



சிம்பாவே அணியின் துடுப்பாட்ட வீரர்களுக்கான ஆலோசகராக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மார்வன் அத்தப்பத்து நியமிக்கப்பட்டுள்ளார்.

சமீபத்தில் நடந்த ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான ஒருநாள் தொடர்மற்றும் இருபது -20 தொடரை சிம்பாவே அணி இழந்தது.

இந்த நிலையில் வங்கதேச சுற்றுப்பயணம் செல்லும் சிம்பாவே அணிக்கு மார்வன் அத்தப்பத்து துடுப்பாட்ட ஆலோசகராக நியமிக்கபட்டுள்ளார்.

அதேவேளையில் தென்னாபிரிகக அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் மக்யா நிட்னி உதவி பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# பணம் இல்லாமல் ஹோட்டலில் உணவு உண்ட சஜித் அப்ரிடி



நியூசிலாந்துக்கு சென்ற பாகிஸ்தான் இருபது-20 அணியின் தலைவர் அப்ரிடிக்கு தர்மசங்கட நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இருபது-20 மற்றும் ஒருநாள் தொடரில் விளையாடுவதற்காக நியூசிலாந்து சென்றுள்ளது.

இந்த நிலையில் பாகிஸ்தான் இருபது-20 அணியின் தலைவர் அப்ரிடி சக வீரர் அகமது ஷேசாத் உடன் சேர்ந்து ஆக்லாந்து விமான நிலைய மெக்டொனால்டு கடையில் சாப்பிடுவதற்காக ஓடர் செய்தார்.

அப்போது அவர்களிடம் நியூசிலாந்து கரன்சி இல்லை. இருவரும் அமெரிக்க டொலர்களே வைத்திருந்தனர். ஆனால், மெக்டொனால்டு நிறுவனமோ அமெரிக்க டொலரை ஏற்றுக்கொள்ளவில்லை.

இதனை பார்த்துக் கொண்டிருந்த கிரிக்கெட் ரசிகர் வாகாஸ் நவீத் என்பவர் அவர்களுக்கு பதிலாக பணத்தை கட்டினார். இதனை ஒருவர் வீடியோவாக எடுத்து வெளியிட்டுள்ளார்.

இது பற்றி அப்ரிடி கூறுகையில், நாங்கள் அமெரிக்க டொலரை நியூசிலாந்து டொலராக மாற்ற மறந்து விட்டோம்.

ஆனால் எங்களுக்கு பின்னால் அமர்ந்திருந்த இளைஞர் ஒருவர் தான் எங்களுக்குப் பதிலாக பணத்தைக் கட்டி எங்களை நியூசிலாந்திற்கு வரவேற்றுள்ளார்.

அதேசமயம் ஹோட்டலில் நடந்த சம்பவத்தை யாரோ ஒருவர் வீடியோவாக பதிவு செய்து, ஊடகம் மூலம் வெளியிட்டது சற்று வருத்தம் அளிப்பதாக தெரிவித்துள்ளார். (க)

# யாழ்ப்பாண...

விக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு தொடர்பில் நேற்று மாலை பல்கலைக்கழகத் தில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

இச் சந்திப்பில் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் ஊடகவியலாளர் மத்தியில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்படி அறிவிப்பினை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக் கையில்,

19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது அமர்வில் 170 மாணவர்களுக்கும், முற்பகல் 10.45 மணிக்கு ஆரம்பமாகும் 2 ஆவது அமர்வில் 193 மாணவர்களுக்கும், பிற்பகல் 1.45 மணிக்கு ஆரம்பமாகும் 3ஆவது அமர்பில் 196 மாணவர்களுக்கும், 3.30 மணிக்கு ஆரம்பமாகும் 4ஆவது அமர்வில் 201 மாணவர்களுக்கான பட்டங்களுநம் வழுங்கப்படும்.

மறுநாள் 20ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகும் 5 ஆவது அமர்வில் 181 மாணவர்களுக்கும், முற்பகல் 10.45 மணிக்கு ஆரம்பமாகும் 6 ஆவது அமர்வில் 193 மாணவர்களுக்கும், பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் 7 ஆவது அமர்வில் 188 மாணவர்களுக்கும், பிற்பகல் 3.30 மணி க்கு ஆரம்பமாகும் 8 ஆவது அமர்வில் 199 மாணவர்களுக்கும் பட்டங்கள் வழுங்கப்படும்.

அந்த வகையில்,

| பட்டத்தின் விபரம் | எண்ணிக்கை | அமர்வு |
|---|---|---|
| முது தத்துவமாணி | 13 | 1,2,3,4,5,6,7,8 |
| முது மெய்யியல்மாணி | 12 | 1,2,3,4,5,6,7,8 |
| முது கல்வியியல்மாணி | 97 | 3 |
| முது கலைமாணி-சைவசித்தாந்தம் | 27 | 8 |
| முதுகலைமாணி - பண்பாட்டியல் | 05 | 5 |
| முது கலைமாணி-தமிழ் | 44 | 6 |
| முது விஞ்ஞானமாணி - சூழல் முகாமைத்துவம் | 01 | 5 |
| முது விஞ்ஞானமாணி-சுகாதாரமுகாமைத்துவம் | 13 | 8 |
| பட்டப்பின் கல்வித் தகைமைச் சான்றிதழ் | 84 | 4 |
| பட்டப்பின் கல்வித் தகைமைச் சான்றிதழ் -ஆங்கிலம் | 14 | 2 |
| கலைமாணி (சிறப்பு) | 263 | 5,6,7 |
| கலைமாணி (பொது) | 101 | 1 |
| தொழில் நிர்வாகமாணி (பொது) | 08 | 1 |
| தொழில் நிர்வாகமாணி (சிறப்பு) | 138 | 2 |
| நுண்கலைமாணி (பரதநாட்டியம்) | 49 | 3 |
| நுண்கலைமாணி (சித்திரமும் வடிவமைப்பும்) | 28 | 4 |
| நுண்கலைமாணி (கர்நாடகசங்கீதம்) | 73 | 8 |
| சட்டமாணி | 34 | 1 |
| மருத்துவமாணிசத்திரசிகிச்சைமாணி | 96 | 7 |
| விஞ்ஞானமாணி (சிறப்பு) | 57 | 1 |
| விஞ்ஞானமாணி (பொது) | 86 | 4 |
| விஞ்ஞானமாணி-விவசாயம் | 44 | 8 |
| விஞ்ஞானமாணி-கணணிவிஞ்ஞானம் | 09 | 5 |
| விஞ்ஞானமாணி-தாதியியல் | 09 | 1 |
| மருத்துவஆய்வுகூடவிஞ்ஞானமாணி | 05 | 6 |
| மருந்தகவியல்மாணி | 02 | 8 |
| சித்தவைத்தியசத்திரசிகிச்சைமாணி | 47 | 3 |

வவுனியா வளாகம்

| | | |
|---|---|---|
| வியாபாரமுகாமைத்துவமாணி (சிறப்பு) | 63 | 5 |
| வியாபாரமுகாமைத்துவமாணி (பொது) | 13 | 6 |
| விஞ்ஞானமாணி-பிரயோககணிதமும் கணித்தலும் | 21 | 8 |
| விஞ்ஞானமாணி-தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (சிறப்பு) | 11 | 8 |
| விஞ்ஞானமாணி-தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (பொது) | 30 | 2 |
| விஞ்ஞானமாணி- சூழல் விஞ்ஞானம் (சிறப்பு) | 07 | 2 |
| விஞ்ஞானமாணி- சூழல் விஞ்ஞானம் (பொது) | 12 | 6 |
| விஞ்ஞானமாணி-கணணிவிஞ்ஞானம் (சிறப்பு) | 05 | 8 |

டிப்ளோமாப் பட்டம்

| | |
|---|---|
| வியாபார முகாமைத்துவ தகைமைச் சான்றிதழ் | 01 |
| விஞ்ஞானத்தில் தகைமைச் சான்றிதழ் | 01 |
| உத்தியோகத்தர்களுக்கானஆங்கிலமொழிதகைமைச் சான்றிதழ் | 33 |
| மீன்பிடியியல் தகைமைச் சான்றிதழ் | 01 |
| உடற்கல்வி தகைமைச் சான்றிதழ் | 43 |
| ஊடகவியல் தகைமைச் சான்றிதழ் | 17. |
| ஆசிரியர்களுக்கானஆங்கில மொழி கற்பித்தலில் தகைமைச் சான்றிதழ் | 07 |
| தொழில் நிர்வாக தகைமைச் சான்றிதழ் | 01 |
| சமுகஅபிவிருத்தியும் முகாமைத்துவமும் தகைமைச் சான்றிதழ் | 10 |

வெளிவாரி

| | |
|---|---|
| கலைமாணி | 247 |
| மொத்தமாகப் பட்டம்பெறும் பட்டதாரிகளின் எண்ணிக்கை | 1828 |
| தகைமைச்சான்றிதழ் பெறுவோரின் எண்ணிக்கை | 114 |
| மொத்தப்பட்டதாரிகளின் எண்ணிக்கை | 1942 |

பட்டமளிப்புவிழாவில் கலந்துகொள்வதற்கும் பட்டம் பெறுவதற்கும் சமுகமளிக்கும் ஒவ்வொருவருக்கும் மேலதிகமாகஒருவர் மண்டபத்தில் பார்வையாளராக அனுமதிக்கப்படுவர்.

பட்டம் பெறுவோர் தமக்குரிய புகைப்படபிரதிகளையும் வீடியோ பிரதிகளையும் பல் கலைக் கழககல்விக்கிளையில் அதற்குரியகொடுப்பனவினைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

விழாவின் ஒழுங்கமைப்பை நல்ல முறையில் பேணும் வகையில் வேறுபுகைப்படப் பிடிப்பாளர்கள் வீடியோப்படப் பிடிப்பாளர்கள் மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். புகைப்படம் எடுத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. (பார்வையாளரின் நலன் கருதிதொலைக்காட்சியூடாக இவை நேரடியாகப் பல்கலைக்கழக வளாகத்தினுள் காட்சிப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக துணைவேந்தர் மேலும் தெரிவித்தார். (செ-4,9)

# தனியார்துறை...

திபால தலைமையில் நேற்று முன்தினம் பாராளுமன்றம் கூடியது.

இதன்போது மேற்படி பிரேரணை சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் பிரகாரம் 2005 மார்ச் 4ஆம் திகதி வெளியிடப்பட்ட 1382/23 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம் இறுதியாக, திருத்தப்பட்ட 1971 யூன் 4 திகதி 1496ஆம் இலக்க சம்பள நிர்ணய சபை ஒழுங்கு விதியின் 3ஆவது பிரிவை திருத்துவதற்கு பாராளுமன்றத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

புதிய திருத்தத்தின் படி உப பந்தியில் 400 ரூபாய் என்று தெரிவிக்கப்பட்டிருப்பதை ஆயிரத்து 500 என்று மாற்றவும் ஆ உப பந்தியில் 500 ரூபாய் என்ற பகுதியை 2ஆயிரம் ரூபாய என்று மாற்றவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் தினங்களில் இந்த திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# வட மாகாண சபை உறுப்பினர்களுக்கு சமஷ்டி பற்றிய கருத்தரங்கு

## சுவிஸ்சலாந்து, தென்னாபிரிக்க பேராசிரியர்கள் வழங்குபவர்

(கொழும்பு)

ஒரு பல்லின சமூகத்தில் அதிகாரப் பகிர்வுக்கான அரசியலமைப்பு மாதிரிகள் பற்றிய விளக்கங்களின் முக்கியத்துவமும் சவால்களும் எனும் தலைப்பில் சுவிஸ்சலாந்து மற்றும் தென்னாபிரிக்க நாடுகளின் அரசியல் யாப்பு நிபுணர்களால் யாழ்ப்பாணத்தில் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் திங்கட்கிழமை நடத்தப்படவுள்ளது.

சமஷ்டி தொடர்பாகநடைபெறவுள்ள இந்த கருத்தரங்கில் வடமாகாண் சபை உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேற்படி கருத்தரங்கை சுவிஸ்சலாந்து பிறிபோக் (Fribourg) பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை அரசியல் யாப்பு கற்கைகள் நிறுவனம் என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

சுவிஸ்சலாந்து பல்கலைக்கழக பேராசிரியர் ஈவா மரியா பெல்சர், தென்னாபிரிக்க வெஸ்ரேன் கேப் பல்கலைக்கழக பேராசிரியர் நெகோ ஸ்ரெய்ற்லர் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

சுவிஸ்சலாந்து பல்கலைக்கழக ஆய்வாளர் மொறிசியோ மக்கெற்றியும் மேற்படி கருத்தரங்கில் கலந்து கொள்வார்.

அரசியல் யாப்பு கற்கைகள் நிறுவனத்தின் ஏற்பாட்டுடன் பேராசிரியர் ஏ.எம் நவரத்தின பண்டாரவின் தலைமையில் இந்த கருத்தரங்கு இடம்பெறவுள்ளது. (ந-31)

# கதிர்காமரின்...

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஐரோப்பிய ஒன்றியத்தினால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டமை சமாதானத்தை ஏற்படுத்த தடையாக இருந்தது. இந்த நடவடிக்கை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கோபத்தை ஏற்படுத்தியது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் சர்வதேச ரீதியில் தடை விதிப்பதில் முக்கிய பங்காற்றியிருந்த இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் இந்த நடவடிக்கை தவறானது என்றே நான் கருதுகின்றேன்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் அரசியல் தலைவர்களும் இராஜதந்திரிகளும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுத்திட்டமொன்றை காண வழியேற்பட்டிருக்கும என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-12)

# மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தத்துடன தமிழின பிரச்சினைக்குத் தீர்வு!

## ஒற்றை ஆட்சிக்குள் தீர்வு வேண்டாம்-சிவாஜி

(யாழ்ப்பாணம்)

தமிழின பிரச்சினைக்கு ஒற்றையாட்சிக்குள தீர்வு காணப்படுவதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். அவ்வாறு ஒரு தீர்வு சிங்கள பேரினவாதத்தால் வழங்கப்பட்டால் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், சர்வதேச நாடுகளிற்கு நாடகம் போடுவதற்கே கண்ணீரால் நனைந்துள்ள எமது மண்ணில் தைப்பொங்கல் கொண்டாட ஜனாதிபதியும், பிரதமரும் வருவதாகவும் சாடியுள்ளார்.

தைப்பொங்கல் கொண்டாடுவதற்கென நாளை வெள்ளிக்கிழமை யாழ்.வரும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ்.பஸ் நிலையத்தில் நேற்றைய தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதன் போது உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியும், பிரதம மந்திரியும் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் தைப்பொங்கல் கொண்டாடுவதற்காக நாளைய மறுதினம் (நாளை) யாழ்ப்பா ணம் வருகை தரவுள்ளனர். துன்பங்களுக்கு மத்தியில் கண்ணீர் கடலில் மூழ்கிக்கொண்டு இருக்க தைப்பொங்கல் நாடகத்தை கொண்டாட வருகை தருகன்றனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இரண்டு நாட்களின் முன்னர் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். தமிழினம் மீது நடைபெற்ற இனப்படுகொலை, போர்க்குற்றம் ஆகியவற்றுக்கு நீதி வேண்டும். சர்வதேச விசாரணை ஊடாகத்தான் எமக்கு இந்த நீதி கிடைக்கும் என்று நாம் நம்புகின்றோம்.

தமிழ்த்தேசிய இனப்பிரச்சினைக்கு இலங்கைக்குள் ஒருபோதும் தீர்வு காணமுடியாது. தமிழின பிரச்சினைக்கு ஒற்றையாட்சிக்குள் தீர்வு காணப்படுவதற்கு, நாங்கள் கொல்லப்பட்டாலும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். இந்த வகையில் தான் தமிழின பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக மூன்றாம் தரப்பு மத்தியஸதம் ஒன்று தேவை என கோருகின்றோம்.

சிங்கள பேரினவாதம் இலங்கைக்குள் தமிழர்களுக்கான தீர்வினை தரும் என்ற நம்பிக்கை எமக்கு கிடையாது. இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் போன்ற நாடுகள் ஆகியவற்றின் மூன்றாம் தரப்பு மதத்தியஸ்தம் ஊடாகத்தான் தமிழர்கள் தங்களை தாங்களே ஆளக்கூடிய தீர்வையே நாங்கள் கோரி நிற்கின்றோம்.

தமிழ் மக்களின் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் படையினரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. இப்பொழுது ஒரு பகுதியை படிப்படியாக விடுவித்து கொண்டு மறுபுறத்திலே முல்லைத்தீவு, கேப்பாப்புலவு, வட்டுவாகல் போன்ற இடங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் மீண்டும் படை முகாம்கள் விஸ்தரிக்கப்படுகின்றன.

நீங்கள் எந்த நாட்டோடு சண்டை போட போகின்றீர்கள்? உங்களுக்கு தமிழர் நிலங்களில் பாரிய படை முகாம்கள் அமைப்பதற்கு என்ன தேவை உள்ளது? வடக்கில் நடைபெறும் இராணுவ மயமாக்கலை உடனடியாக நிறுத்த வேண்டும் என கோருகின்றோம்.

புதிய ஆட்சி வந்தால் இராணுவ மயமாகல் இல்லாமல் போய்விடும் என சர்வதேசம் கூறியது. இப்பொழுதும் இங்கேயும் இராணுவம் சுத்திக்கொண்டு இருக்கின்றது. தேடுதல்களை நடத்தி கொண்டு உள்ளது. மக்கள் வஞ்சிக்கப்பட்டு கொண்டு உள்ளார்கள். கடத்தப்பட்டு காணாமல் போனவர்கள் பதின்நான்காயிரம் பேருக்கு அரசாங்கம் இது வரை பதில் கூறவில்லை. சரணடைந்த போராளி கள், சிறுவர்கள் பெண்கள் ஆகியோருக்கு என்ன நடந்தது என்று இதுவரை தெரியவில்லை.

பாராளுமன்ற தேர்தலின் போது நல்லவர்கள் போல் நடித்து ஏமாற்றிவிட்டு, தமிழர் நிலத்தில் பொங்கல் கொண்டாட மட்டும் இந்த அரசு ஈடுபட்டுள்ளது. நாங்கள் பகிரங்கமாக குற்றம் சாட்டுகின்றோம் உங்கள் ஏமாற்று நாடகங்களை நடத்துங்கள், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்து விட்டு, காணிகளை விடுவித்து விட்டு.

நாங்கள் புதிய அரசை பகைக்கவில்லை. நாங்கள் தொடர்ந்து வரும் சிங்கள பேரினவாத ஆட்சியாளர்களால ஏமாற்றப்பட்டு வருகின்றோம். அதற்கு எதிராகவே குரல் கொடுத்து வருகின்றோம். எமக்கான அநீதிகள் முடிவுக்கு கொண்டுவரும் வரையிலும், எம்மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரையிலும் போராட்டத்தில் ஈடுபடுவோம்.

இலங்கை அரசிற்கு நாம் ஒரு எச்சரிக்கையை விடுக்கின்றோம். எமது பிரச்சினைகள் இதன் பின்னராவது தீர்க்கப்படா விட்டால் இனிவரும் காலங்களில் யாழ்ப்பாணத்திற்கு ஜனாதிபதியோ பிரதம மந்திரியோ வர அனுமதிக்காமல் வழிமறித்து கறுப்புக்கொடி போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றார் அவர். (செ-4

## ஜனாதிபதியின்...

ப்பிட்டார்.

இலங்கைக்கு வருகை தந்த இந்திய வெளியுறவுச் செயலாளர் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தபோதே இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அண்மையில் பாராளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையின்போது பல்வேறு சவால்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக காட்டிய சாதகமான மனப்பாங்கு இந்திய அரசாங்கத்தின் விசேட அவதானத்தைப் பெற்றுள்ளதாகவும் இந்திய வெளியுறவுச் செயலாளர் குறிப்பிட்டார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால வரலாறு மற்றும் நட்புறவு பற்றி இங்கு வலியுறுத்திய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனது இந்திய விஜயம், இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயம் ஆகியவற்றினூடாக இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவு மாத்திரமன்றி அதற்கு அப்பாற்பட்ட நடபுறவு கட்டியெழுப்பப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்குமிடையே இருதரப்பு கலந்துரையாடல்கள் மிகவும் பயனுள்ளதாக அமைந்ததெனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, எதிர்வரும் மாதத்தில் இந்திய வெளியுறவு அமைச்சர் திருமதி சுஸ்மா சுவராஜ் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதுடன், அதன்போது இருநாடுகளுக்குமிடையே இருதரப்பு கலந்துரையாடல்களை மேலும் முன்கொண்டு செல்ல எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இந்திய அரசு வழங்கும் ஒத்துழைப்பு பற்றி நன்றிகளைத் தெரிவித்த ஜனாதிபதி, புனர்வாழ்வு மற்றும் மீளக்குடியமர்த்தல் நடவடிக்கைகளிலும் மின்சாரம், புகையிரதப்பாதை ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதிலும் விசேடமாக பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகத்தை நவீனமயப்படுத்துவதற்காக இந்திய அரசு வழங்கும் உதவிகள் தொடர்பாகவும் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்குமிடையே எதிர்காலத்தில் உருவாகவுள்ள கலந்துரையாடல்கள் மூலம் இருதரப்பு உறவுகள் வலுவடைதல் மாத்திரமன்றி, சில சமயங்களில் ஒரு சில ஊடகங்களில வெளியாகும் உண்மைக்குப் புறம்பான பரப்பு ரைகளை சீர் செய்வதற்கும் பயனுள்ளதாக அமையுமென ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (செ-12)

வேலையாள் தேவை
பருத்தித்துறையில் இயங்கும் அச்சகம் ஒன்றிற்கு கணனி அச்சகவேலை, டிசைனிங் வேலை தெரிந்தவர் தேவை.
முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
(c-3368)
தொடர்புகளுக்கு:- 0750854796

UK Australia Canada
EXPERIENCE 7 YEARS EXPERIENCE
எந்தவொரு நாட்டிலும், விரும்பிய எந்தத் துறையிலும் பட்டக்கல்வியைத் தொடர
Student Visa
With Work Permit & PR

(C-3367)
IELTS அவசியமில்லை
வங்கிக்கடன் வசதி
VISIT VISA – SPOUSE VISA – WORK VISA
DEPENDANT VISA – SKILLED MIGRATION
SIKARAM Any Visa to Any Country
மேலதிக விபரங்களையும் ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றியும் அறிந்துகொள்ள
www.sikaram.lk
Tel: 0777 32 4004 , 021 222 00 11
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா?
உங்களது வீடுகள் அலுவலகங்களுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள் 0779086737
2மணித்தியாலத்தில் கணினி திருத்தம் Computer Repair
கணினி திருத்தக் கட்டணம் 500/- மட்டுமே!
லப்டொப் டெஸ்க்டொப் கணினிகள் திருத்தம்
கணினிகள் விற்றல் பாவித்தகணினிகள் வாங்குதல்
(கி-3366)
GUNA BEST PC
50/12,Hospital Road,
Vairavar Kovil Lane Jaffna.
கணினிபயன்பாட்டின் உச்ச அனுகூலங்களை எமது மக்கள் பெறவேண்டும் என்பதற்காக நிபந்தனையுடனான சேவைகளை வழங்குகிறோம்.

✓ உள்நாடு, வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை.
✓ 5Kgக்கு மேற்பட்ட பாசல்களுக்கு விலைக்குறைப்பு
✓ 3 – 5 நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்.
✓ உங்கள் வீட்டில் இருந்தவாறே பொருட்கள் பொறுப்பேற்று உரிய முறையில் ஒப்படைக்கப்படும் சேவை.
Kannathasan Global Cargo & Courier
தொடர்புகளுக்கு
140, Palaly Road, kanthamadam, Jaffna.
Hotline : 021 222 7555, 0766901516
(C-3352)

af WORLD MOVIES - JAFFNA
Alliance Française de Jaffna
cordially invites you to the screening of
ANNA KARENINA
After Leo Tolstoy's novel
(2012, 120 min.)
On
Thursday 14 January 2016 at 4:00 p.m.
at
Alliance Française de Jaffna
61, kachcheri-Nallur Road, Jaffna.
Phone : 021 222 8093

(3099)
English Language. English subtitles
Free entrance.
பிரெஞ்சு வகுப்புகளுக்கு உடன் அழையுங்கள்

A/L பொருளியல்
MCQ BOOK -2
ரூபா 150
கேள்வி, நிரம்பல், நெகிழ்ச்சி, சந்தைச் சமநிலை, உற்பத்திச் செலவு & சந்தை அமைப்புக்கள்
நான்காம் பதிப்பு
புதிய வினாத்தாள் அமைப்பில் மேலதிக மீட்டல் வினாக்களுடன்
முழுப்பாடத்திட்டமும் அடங்கிய 2015 A/L பரீட்சையில் 99 புள்ளிகள் பெறுவதற்கு வழிவகுத்த மற்றும் பொருளியல் நூல்கள்
ஆசிரியர் : வே.கருணாகரன்
பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை
(3189)

## தமிழ் மக்களின்...

வருமான இரா.சம்பந்தனைச் சந்தித்துப் பேச்சு நடத்திய போதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

கொழும்பில் தாஜ் சமுத்ரா விடுதியில் நேற்று காலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது, வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அரசியலமைப்பு மாற்றம், உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து, இந்திய வெளிவிவகாரச் செயலரிடம், இரா. சம்பந்தன் விளக்கியுள்ளார்.

சுமார் ஒரு மணிநேரம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்பில் இந்திய வெளிவிவகாரச் செயலருடன், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சின் ஊடக இணைப்புச் செயலர் உள்ளிட்டோர் கலந்து கொண்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-12)

## அரசியல் அமை...

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, அரசாங்கத்திற்குள் தற்போது பிளவு ஏற்பட்டுள்ளதாகவும், நாட்டிற்குள் இப்போது பொலிஸ் இராஜ்ஜியம் உருவாகியுள்ளதாகவும அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் பாண் விலை அதிகரித்துள்ளதாகவும், அரசாங்கம் இதுவரை அது தொடர்பில் எந்தவொரு கருத்தினையும் தெரிவிக்கவில்லை எனவும், இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாடாளுமன்றம் இப்போது சரியான முறையில் கூடுவதில்லை என்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (செ-12)

## புலிகளை அழி...

தக் கூடியதாக அமைந்தால் அல்லது அச்சுறுத்தல் ஏற்பட்டால் அது ஆபத்தானது எனவும் அவர் தெரிவித்தார்.

எக்னெலிகொட கொலை தொடர்பில் ஸ்தம்பித்திருந்த விசாரணைகள், முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

எனினும், விசாரணைகளின் ஊடாக தேசியப் பாதுகாப்பு தொடர்பான முக்கிய தகவல்கள் கசிவது ஆபத்தானது. இவ்வாறு தகவல் கசிவது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

30 ஆண்டு கால பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு படையினர் பயன்படுத்திய வழிமுறைகளை வெளிப்படுத்தக் கூடாது.

அவ்வாறு வெளிப்படுத்துதல் பாரிய குற்றமாகவே பார்க்க வேண்டும் என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

இராணுவத் தளபதிக்கு எதிராக, புலனாய்வுப் பிரிவினர் வழக்குத் தொடர நடவடிக்கை எடுத்து வருவதாக வெளியான தகவல்கள் குறித்து கொழும்பு ஊடகம் எழுப்பிய கேள்விக்கு தொலைபேசி மூலம் பதிலளித்த சோபித தேரர் இதனைத் தெரிவித்துள்ளார். (செ-12)

Job Opportunity
பிரபல வியாபார நிலையத்திற்கு ஆங்கில அறிவுடைய அலுவலக ஊழியர்கள் தேவை.
Office Staff - யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, கிளிநொச்சி
தொடர்புகளுக்கு:
0777554528
(c-3365)

A/L இல் எதிர்பார்த்த பெறுபேறு இல்லையா

அதனாலென்ன? Still You Can
O/L உடன்
3 - 6 மாத Entry Level கற்கைநெறியுடன் உள்நாட்டு - வெளிநாட்டு கல்வி தொழில் - விசா ஏற்பாடு!
Business / IT / Hotel Management / Media
பிரித்தானிய, அவுஸ்ரேலிய, கனேடிய பல்கலைக்கழக பட்டப்படிப்புக்கள்
(C-3367)
*Conditions apply
University of Sunderland UK
UNIVERSITY OF WOLLONGONG Australia
UNIVERSITY OF TORONTO Canada
கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு VISA
உத்தரவாதம்*
SIKARAM Edu Solutions
Call or SMS
0773 616 798
மேலதிக விபரங்களுக்கு
www.sikaram.lk
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)

## பாம்பு தீண்டிய...

சேர்ந்தவரும் தற்காலிகமாக துன்னாலை வடக்கு கரவெட்டியில் வசிப்பவருமான சிவலோகநாதன் தேசிகன் (வயது-17) என்ற மாணவனே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இரவு 8.30 மணியளவில் பட்டம் ஏற்றும் விளையாட்டில் குறித்த மாணவன் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையே பாம்பு தீண்டியுள்ளது.

உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட குறித்த மாணவன் மறுநாள் செவ்வாய்க்கிழமை மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வந்த குறித்த மாணவன் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்த மாணவனது சடலம் பிரேத பரிசோதனைகளின் பின்னர் நேற்று மாலை 5 மணியளவில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (செ-5-30-60-283)

## பிரசவத்தில் தாய்...

யூட்டி(வயது-22) என்ற இளம் குடும்ப பெண்ணே தனது இரண்டாவது பிரசவத்தின் போது பரி தாபமாக உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் தனது பிரசவத்திற்காக முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்துள்ள பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. பிரசவிக்கப்பட்ட சிசு ஆரோக்கியமான நிலையில் வைத்தியர்களின் கண்காணிப்பில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-12-277)

## பிரதமரின் யோச...

சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

யோசனை சம்பந்தமாக முன்னாள் அமைச்சர் தினேஷ் குணவர்தன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடம் திருத்தங்களை முன்வைத்த போதிலும் அவற்றின் மூலம் கட்டமைப்பு ரீதியான எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை என இந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் பைஸர் முஸ்தபா குறிப்பிட்டுள்ளார்.

முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் மூலம் ஒன்றை ஸ்தாபிக்கும் விதம் அல்லது செயற்பாடு நடந்துள்ளதே அன்றி கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் புதிய அரசியலமைப்பு சம்பந்தமாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை. இதன் ஊடாக நாட்டின் ஒற்றையாட்சிக்கோ, பௌத்த மதம் சம்பந்தமாகவோ எந்த விதமான சிக்கலான நிலைமையும் ஏற்படாது என்றும் பைஸர் முஸ்தபா குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க, நாடாளுமன்றத்தை அரசியலமைப்புச் சபையாக மாற்றும் வகையில் பிரதமர் முன்வைத்த யோசனை, அமைச்சரவையின் அனுமதியின்றி பிரதமரால் முன்வைக்கப்பட்டதால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதற்கு திருத்தங்களையும் யோசனைகளையும் முன்வைத்தது என இரண்டு அமைச்சர்களும் ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கும் போது கூறியுள்ளனர்.

அமைச்சரவை அனுமதியுடன் நாடாளுமன்றத்தில் அந்த யோசனை முன்வைக்கப்பட்டிருந்தால், தமக்கும் அது சம்பந்தமான பொறுப்பை ஏற்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும் எனவும் அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர். (செ-12)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.